உ

கணபதி துணை.

# ஜாதகபாஸ்கரம்.

ஜாதகபலனை அறியவும், ஜாதகம் கணிக்கவும்
எவர்களுக்கும் உபயோகமாக
பலநூல்களிற் சொல்லியபடி

யாழ்ப்பாணம்

## ஜோதிஷர்

## வி. சபாபதிஐயர் அவர்களால்

வசனரூபமாக எழுதி
கீலக௵ பங்குனி௴ அச்சிட்டு வெளிப்படுத்தியதை
இவர் புத்திரன்

## ஸ்ரீபதி ஐயரால்

தமது
ஸ்ரீபாஸ்கரயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.
௨-ம் பதிப்பு. நள௵ ஆனி௴.

விலை ரூபா—௩—௫௰

Price Rs—3—50

(Registered Copyright.)

# சம்மதபத்திரிகை

யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபர்களும்
காவியபாடசாலைத் தாபக அத்தியாபகர்களும்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடைய
சைவப்பிரகாசவித்தியாசாலை மானேசர்களுமாகிய
நல்லூர்

## ஸ்ரீமாந். த. கைலாசபிள்ளை அவர்கள்

---

ஸ்ரீமத். வி. சபாபதிஐயரவர்கள் என்னோடு தமிழ் படித்தவர்கள். அவர்களை நான் முப்பதுவருஷகாலமாக அறிவேன். சோதிடவிஷயத்தில் அவர்களுக்கு ஒப்பாகவேனும் மேலாகவேனும் ஒருவரையும் நான் இத்தேசத்திற் காணவில்லை. அவர்களுடைய பஞ்சாங்கமும் கணிதமும் எனக்கு அனுபவத்துக்கு ஒத்திருக்கின்றன. அவர்கள் கணிக்கும் பஞ்சாங்கம் நான்கைக்கொள்வது.

யாழ்ப்பாணம் } இங்ஙனம்
விகாரி௵ மார்கழி௴. } த. கைலாசபிள்ளை.

---

மகாஜோதிஷர்களாகிய வேதாரணியம்
## பிரம்மஸ்ரீ முத்துஜோஸ்யரவர்களால்
கொடுக்கப்பட்ட சம்மதபத்திரம்.

ஸ்ரீமத். வி. சபாபதி ஐயர் அவர்கள் பஞ்சாங்கத்தை, பரிசீலனைபண்ணிப்பார்த்ததில் திதி, வார, நட்சத்திரம் முதலானதுகளும் கிரகஸ்திதி முதலானதுகளும் ரெம்பவும்சரியாயிருக்கிறது. மேற்படி பஞ்சாங்கத்தில் பொருத்தம் முதலானதுகளும், சுபமுகூர்த்தங்களும், அமிர்தயோகம் முதலானதுகளும் போட்டது ரெம்ப விசேஷமாக இருக்கிறது.

இங்ஙனம்
முத்துஜோஸ்யர்,
22-12-1900. வேதாரணியம்.

ஜோதிஷசித்தாந்த சாஸ்திரங்களை நன்குணர்ந்தவர்களும், வாக்கியபஞ்சாங்க கணிதர்களுமான கொழும்பு சுப்பிரமணியசுவாமிகோயில் ப்ரம்மஸ்ரீ. நா. குமாரஸ்வாமி பட்டாசாரியர் அவர்களாற் கொடுக்கப்பட்ட சம்மதபத்திரம்.

[illegible]
[illegible]
[illegible]

விசுவாவசு௵
பங்குனிமீ

நா. [illegible]
[illegible]
கொழும்பு,
சுப்பிரமணியசுவாமிகோயில்.

திருநெல்வேலிஜில்லா கல்லடைக்குறிச்சியிலிருக்கும் ஸாஹித்திய நியாய வேதாந்த மஹா மஹோபாத்தியாய பண்டித ப்ரம்மஸ்ரீ. மு. சர்வேஸ்வரசர்மா அவர்களாற் கொடுக்கப்பட்ட சம்மதபத்திரம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]

15-4-06. [illegible]

சோதிடசாஸ்திரத்திலே சிறந்தவர்களாகிய சிதம்பரம் வியாகரணம் சிறீமத். முத்தையாபட்டாகரர் அவர்களாற் கொடுக்கப்பட்டது

[illegible]

மகாவித்துவான்
சுன்னுகம்
ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்
இயற்றிய
கட்டளைக் கலித்துறை.

---

பூவேறு வண்ணைத் திருநகர் வாசன் புவித்தலத்தே
நாவேறு சோதிட நூற்றுறை போகிய நல்லறிஞன்
பாவேறு கீர்த்திதன் பஞ்சாங்க மெண்ணும் பயிற்சிமிக்கோன்
சேவேறி பாதந் தொழுவோன் சபாபதிதேசிகனே.

ஈகையு மின்சொலுந் தாழ்நடை தானு மியல்பெனக்கொண்
டோகையில் வாழ்பவன் கற்றவர் தங்களுக் குற்றநண்பன்
சாகைகளோடு கணித ககோளங்க டாமுணர்ந்தோர்
சேகர மாமணி வண்ணைச் சபாபதி தேசிகனே.

ஆரிய நூல்க ளருந்தமிழ் நூல்க ளறிந்தறிவிற்
கூரிய சிந்தைய னுகமந் தேர்ந்து குருத்துவம்பூண்
டேரியல் சைவக் கிரியைகள் செய்யு மியல்பின்மிகுஞ்
சீரியன் பூசுரர் கோமான் சபாபதிதேசிகனே.

அருந்தமி ழோடு வடமொழி யாள ரறியுமுறை
பொருந்திய நூல்களுஞ் சோதிடந் தன்னிற் புகுமறிஞர்
விருந்தெனக் கொள்ளும் விதானநன் னூல்களும் வேறுளவுந்
திருந்துற வச்சி லிடுவோன் சபாபதி தேசிகனே.

நீர்வேலி

குருக்களாதீனத்தைச்சார்ந்த

வாய்க்காற்றரவை விநாயகராலயத்திலே

விகாரி௵ ஐப்பசிமீ ௩௨ கூடியசபையாரின்

அங்கீகாரபத்திரம்.

ஸ்ரீமத். வி. சபாபதிஐயர் அவர்கள் சொல்லிவருஞ் சோதிடபலன்கள் அனுபவத்துக்கு முழுதும் ஒத்திருத்தல்உலகறிந்த உண்மை. இவர் பஞ்சாங்கத்திற் குறித்த போதாயன அமாவாசை முதலிய விரதங்களின் நிர்ணங்கள் முழுதுஞ் சாத்திரசம்மதமே என்பது நாம் ஆராய்ந்துகண்ட உண்மை.

இப்படியாயினும் இவருடைய விகாரிவருஷபஞ்சாங்கம் வழக்கிற்கிடமாய் நின்றமையால் நாம் ஐயுற்று, இத்தேதியில் நமது கோயிலில் இவரை வருவித்துச் சிலசன சமூகத்திற் பல ஆட்சேபங்களையுந் தொடுத்தேம். நம்முடைய ஆட்சேபங்கட்கெல்லாம் இவர் பொருந்துமாறு தகுந்த சமாதானங்களை உடனே உடனே திடமாகச் சொல்லி நமது சந்தேகத்தை முழுதுமொழித்த சாதுரியத்தை மிகப் பாராட்டுகின்றோம். இதுமுதல் இவர் பஞ்சாங்கத்தையே நாமெல்லாம் அங்கீகரிப்பதற்குத் தடையில்லை.

சோ. சந்திரசேகரக்குருக்கள் (நீர்வேலி.) வே. பஞ்சாட்சரக்குருக்கள் (நீர்வேலி.) வி. பாலசுப்பிரமணியக்குருக்கள் (சிதம்பரம் ஜோதிஷர்,) கு. வைத்தியநாதக்குருக்கள் (நவிண்டில்) ; ச. கதிரேசக்குருக்கள் (ஷெகோயிலருச்சகர் நீர்வேலி,) கு. கார்த்திகேயக்குருக்கள் (நீர்வேலிக் கந்தசுவாமிகோயில்)

ச. சிவப்பிரகாசன் (நீர்வேலி,) இவர் சம்ஸ்கிருத வியுற்பத்தியிலே இத்தேசத்திலே தமக்கு இணையில்லாது பெரும்புகழ்படைத்த சிறீமத் சங்கரபண்டிதரவர்களுடைய புத்திரரும் மாணாக்கருமாகிய பண்டிதர்)

# விஷய அனுக்கிரமணி.


| பக்கம், | விஷயம். |
|---|---|
| 1 | முகவுரை |
| ,, | தெய்வவணக்கம் |
| 3 | மங்களாசரணமும், நூற்பெயரும். |
| 3 | காலப்பிரமாணம் |
| 4 | சதுர்யுகம் |
| 5 | திதியாதிகளின் குணவிசேஷம் |
| 5 | ௯ கிரகங்களின் பெலன் |
| 6 | கிரகங்களின் தானவலிது |
| 6 | வர்க்கோத்தமம், இராசிகளிலும் கிரகங்களிலும் சரம் திரம் உபயம். |
| 6 | இராசிகளிலும் கிரகங்களிலும் சிரோதய பிருட்டோதய சிரபிருட்டோதயம். |
| 7 | இராசிகளிலும் கிரகங்களிலும் ஆண் பெண் அலி |
| 7 | இராசிகளும் கிரகங்களும் வலிதுபெறுங்காலம். |
| 7 | நட்பாட்சி உச்சம் பகைநீசபெலம் வர்க்கோத்தமபெலம் முதலியவை. |
| 8 | இரா,கிரகங்களின் நிறம் |
| 8 | இராசிகளின் வடிவு |
| 9 | கிரககாரகத்துவம் |
| 9 | ஒவ்வொருகிரகங்களும் செய்யும் பலன்கள் |

| பக்கம். | விஷயம். |
|---|---|
| 10 | ௧௨ ராசி ஸ்தானங்களிலும் வரும் பலன்கள் |
| 11 | கேந்திரதிரிகோண மாரகமிருத்துக்களை அறிய. |
| 12 | கிரகரேத்தினம் |
| 13 | முக்குணக்கிரகம் |
| | முப்பிணிக்கிரகம் |
| | கிரகசுவை |
| | கிரக அங்கம் |
| | ராசி அங்கம் |
| 14 | ஸ்திரீகாலம் புருஷகாலம் |
| | கிரகநோக்கு |
| 15 | சூரியசித்தாந்தத்திற்சொல்லிய ராசிப்பிரமாணம் |
| | பகல்நாழிகை |
| 16 | இரவு நாழிகை |
| 18 | நட்சத்திரங்களின் வடிவமும் உதயராசியும் |
| 21 | நட்பு, ஆட்சி, உச்சம், பகை நீசம் |
| 22 | மூலத்திரிகோணம் |
| | கிரகமித்துருக்கள் |
| | கிரகசத்துருக்கள் |
| 23 | லக்கினநிச்சயம் |
| | ஹோராலக்கினம் |
| 24 | கடிகாலக்கினம் |
| | ஆரூடலக்கினம் |
| | நட்சத்திரலக்கினம் |
| | காரகலக்கினம் |

| பக்கம். | விஷயம். | பக்கம். | விஷயம். |
|---|---|---|---|
| 24 | ஆதெரிசலக்கினம் | 38 | இராசிக்குணகாரம் |
| | ஆயுர்லக்கினம் | 39 | கிரகக்குணகாரம் |
| 25 | திரேக்காண லக்கினம் | | குணசமூகம் |
| | அங்கிஷலக்கினம் | | சர்வாஷ்டவர்க்கபலன் |
| | நவாம்சலக்கினம் | | கந்தாயபலன் |
| | பாவலக்கினம் | 40 | திக்குவிந்து |
| 26 | சந்திரனுக்கு ராசிக்கதி கூ0, | 42 | சூரியன் அஷ்டவர்க்க பலன் |
| | நட்சத்திரகதி கூ0. | | சந்திரன் அஷ்டவர்க்கபலன் |
| 28 | கிரக அங்கநிலை | 43 | செவ்வாய் அஷ்டவர்க்கபல. |
| | அங்கச்சூரியன் | 44 | புதன் அஷ்டவர்க்கபலன் |
| | அங்கச்சந்திரன் | | வியாழன் அஷ்டவர்க்கபல. |
| | அங்கச்செவ்வாய் | 45 | சுக்கிரன் அஷ்டவர்க்கபல |
| 29 | அங்கப்புதன் | 46 | சனி அஷ்டவர்க்கபலன் |
| | அங்கவியாழன் | 47 | அஷ்டவர்க்க பரமாயு |
| | அங்கவெள்ளி | 48 | தசவர்க்கம் ஹோரா |
| 30 | அங்கச்சனி | | கோட்கூறு |
| | கிரகசமயம் அறியும் விதி | | திரேக்காணம் |
| 32 | கிரியாகமனம் | 49 | திரிம்சாம்சம் |
| 33 | கிரக அவஸ்தை அறிய | | ஸப்தாம்சம் |
| | முக்குணவேளை | | நவாம்சம் |
| 34 | காலஹோரை | 50 | தசாம்சம் |
| 35 | கேந்திரம்முதலிய நி இடம் | | துவாதசாம்சம் |
| | சூரியன் அஷ்டவர்க்கம் | | ஷோடசாம்சம் |
| 36 | சந்திரன் அஷ்டவர்க்கம் | 51 | ஷட்டியாம்சம் |
| | செவ்வாய் அஷ்டவர்க்கம் | 53 | தசவர்க்க அம்சம் |
| | புதன் அஷ்டவர்க்கம் | 54 | தசவர்க்கத்தின்பலன் |
| 37 | வியாழன் அஷ்டவர்க்கம் | | தசவர்க்ககணிதநிர்ணயம் |
| | சுக்கிரன் அஷ்டவர்க்கம் | 55 | தசவர்க்கபெலம் |
| | சனி அஷ்டவர்க்கம் | 56 | கிரகபாவம், திரிகோணம், ஆட்சி, உச்சம் முதலியவைகளின்பலன் |
| 38 | திரிகோணசோதனை | | |
| | ஏகாதிபத்தியசோதனை | | |

| பக்கம். | விஷயம். |
|---|---|
| 57 | க--ம் பாவபலன் |
| | உ--ம் பாவபலன் |
| 58 | ங--ம் பாவபலன் |
| 59 | ச--ம் பாவபலன் |
| 60 | ரு-ம் பாவபலன |
| | சு--ம் பாவபலன் |
| | எ--ம் பாவபலன் |
| 61 | அ--ம் பாவபலன் |
| 62 | கூ--ம் பாவபலன் |
| 63 | க0-ம் பாவபலன் |
| 64 | கக--ம் பாவபலன் |
| | கஉ--ம் பாவபலன் |
| 65 | முக்குணவேளையின் பலன் |
| 66 | ஞாயிறுமுதலான ஏழுவாரங்களின் பலன் |
| | அசுவினியின்பலன் |
| 67 | பரணியின்பலன் |
| 68 | கார்த்திகையின்பலன் |
| | ரோகிணியின்பலன் |
| 69 | மிருகசீரிடத்தின்பலன் |
| | திருவாதிரையின்பலன் |
| 70 | புனர்பூசத்தின்பலன் |
| | பூசத்தின்பலன் |
| 71 | ஆயிலியத்தின்பலன் |
| | மகத்தின்பலன் |
| 72 | பூரத்தின்பலன் |
| 73 | உத்தரத்தின்பலன் |
| | அத்தத்தின்பலன் |
| 74 | சித்திரையின்பலன் |
| | சுவாதியின்பலன் |
| 75 | விசாகத்தின்பலன் |
| 75 | அனுஷத்தின்பலன் |
| 76 | கேட்டையின்பலன் |
| 77 | மூலத்தின் பலன் |
| | பூராடத்தின் பலன் |
| 78 | உத்தராடத்தின்பலன் |
| 79 | திருவோணத்தின்பலன் |
| | அவிட்டத்தின்பலன் |
| 80 | சதயத்தின் பலன் |
| 81 | பூரட்டாதியின் பலன் |
| | உத்தரட்டாதியின்பலன் |
| 82 | ரேவதியின்பலன் |
| | இந்த நட்சத்திரங்களோடு இவைகளின் ஒவ்வொருகால்களுக்கும் பலன். |
| 82 | கரு திதிகளின் பலன் |
| 84 | உஎ யோகங்களின் பலன் |
| 86 | கக கரணங்களின் பலன் |
| 88 | காலவோரையின்பலன் |
| | உதயலக்கினபலன் |
| | மேடலக்கினபலன் |
| 89 | இடபலக்கினபலன் |
| | மிதுனலக்கினபலன் |
| 90 | கடகலக்கின பலன் |
| | சிங்கலக்கினபலன் |
| 91 | கன்னிலக்கினபலன் |
| | துலாலக்கினபலன் |
| 92 | விருச்சிகலக்கினபலன் |
| | தனுலக்கினபலன் |
| 93 | மகரலக்கினபலன் |
| | கும்பலக்கினபலன் |
| | மீனலக்கினபலன் |

| பக்கம். | விஷயம். |
|---|---|
| 94 | மேடராசியின்பலன் |
| | இடபராசியின் பலன் |
| | மிதுனராசியின்பலன் |
| | கடகராசியின் பலன் |
| 95 | சிங்கராசியின்பலன் |
| | கன்னிராசியின்பலன் |
| | துலாராசியின் பலன் |
| | விருச்சிகராசியின் பலன் |
| | தனுராசியின் பலன் |
| 96 | மகரராசியின்பலன் |
| | கும்பராசியின் பலன் |
| | மீனராசியின் பலன் |
| | அம்சபலன் |
| 97 | சூரியன் அம்சம் |
| | சந்திரன் அம்சம் |
| | செவ்வாய் அம்சம் |
| | புதன் அம்சம் |
| 98 | வியாழன் அம்சம் |
| | சுக்கிரன் அம்சம் |
| | சனி அம்சம் |
| | கணபலன் |
| 99 | நக்ஷத்திரயோனி பலன் |
| 100 | துவாதசபாவம் |
| | கிரகபலன்-சூரியன்முதலிய கூ கிரகங்களும் கஉ தானங்களிலும் மாறி மாறி நிற்கும் க0அ வித பலன்களும் மிக விரிவாகவகும். இதனாலே ஒவ்வொருவருடைய குணம் நடை முதலிய யாவும். |

| பக்கம் | விஷயம். |
|---|---|
| 100 | சூரியன் க-ல் பலன் |
| | சூரியன் உ-ல் பலன் |
| | சூரியன் ங-ல் பலன் |
| | சூரியன் ச-ல் பலன் |
| 101 | சூரியன் ரு-ல் பலன் |
| | சூரியன் சு-ல் பலன் |
| | சூரியன் எ-ல் பலன் |
| | சூரியன் அ-ல் பலன் |
| | சூரியன் கூ-ல் பலன் |
| | சூரியன் க0-ல் பலன் |
| 102 | சூரியன் கக-ல் பலன் |
| | சூரியன் கஉ-ல் பலன் |
| | சந்திரன் க-ல் பலன் |
| | சந்திரன் உ-ல் பலன் |
| | சந்திரன் ங-ல் பலன் |
| | சந்திரன் ச-ல் பலன் |
| 103 | சந்திரன் ரு-ல் பலன் |
| | சந்திரன் சு-ல் பலன் |
| | சந்திரன் எ-ல் பலன் |
| | சந்திரன் அ-ல் பலன் |
| | சந்திரன் கூ ல்பலன் |
| | சந்திரன் க0-ல் பலன் |
| 104 | சந்திரன் கக-ல் பலன் |
| | சந்திரன் கஉ-ல் பலன் |
| | செவ்வாய் க-ல் பலன் |
| | செவ்வாய் உ-ல் பலன் |
| | செவ்வாய் ங-ல் பலன் |
| | செவ்வாய் ச-ல் பலன் |
| 105 | செவ்வாய் ரு-ல் பலன் |
| | செவ்வாய் சு-ல் பலன் |
| | செவ்வாய் எ-ல் பலன் |

| பக்கம். | விஷயம். |
| --- | --- |
| 105 | செவ்வாய் ௮-ல் பலன் |
| | செவ்வாய் ௯-ல் பலன் |
| | செவ்வாய் ௧0-ல் பலன் |
| 106 | செவ்வாய் ௧௧-ல் பலன் |
| | செவ்வாய் ௧௨-ல் பலன் |
| | புதன் ௧-ல் பலன் |
| | புதன் ௨-ல் பலன் |
| 107 | புதன் ௩-ல் பலன் |
| | புதன் ௪-ல் பலன் |
| | புதன் ௫-ல் பலன் |
| | புதன் ௬-ல் பலன் |
| | புதன் ௭-ல் பலன் |
| 108 | புதன் ௮-ல் பலன் |
| | புதன் ௯-ல் பலன் |
| | புதன் ௧0-ல் பலன் |
| | புதன் ௧௧-ல்பலன் |
| 109 | புதன் ௧௨-ல் பலன் |
| | வியாழன் ௧-ல் பலன் |
| | வியாழன் ௨-ல் பலன் |
| | வியாழன் ௩-ல் பலன் |
| 110 | வியாழன் ௪-ல் பலன் |
| | வியாழன் ௫-ல் பலன் |
| | வியாழன் ௬-ல் பலன் |
| 111 | வியாழன் ௭-ல் பலன் |
| | வியாழன் ௮-ல்பலன் |
| | வியாழன் ௯-ல் பலன் |
| | வியாழன் ௧0-ல் பலன் |
| | வியாழன் ௧௧-ல் பலன் |
| 2 | வியாழன் ௧௨-ல் பலன் |
| | சுக்கிரன் ௧-ல் பலன் |
| | சுக்கிரன் ௨-ல் பலன் |
| 113 | சுக்கிரன் ௩-ல் பலன் |
| | சுக்கிரன் ௪-ல் பலன் |
| | சுக்கிரன் ௫-ல் பலன் |
| | சுக்கிரன் ௬-ல் பலன் |
| | சுக்கிரன் ௭-ல் பலன் |
| 114 | சுக்கிரன் ௮-ல் பலன் |
| | சுக்கிரன் ௯-ல் பலன் |
| | சுக்கிரன் ௧0-ல் பலன் |
| | சுக்கிரன் ௧௧-ல் பலன் |
| 115 | சுக்கிரன் ௧௨-ல் பலன் |
| | சனி ௧-ல் பலன் |
| | சனி ௨-ல் பலன் |
| | சனி ௩-ல் பலன் |
| 116 | சனி ௪-ல் பலன் |
| | சனி ௫-ல் பலன் |
| | சனி ௬-ல் பலன் |
| | சனி ௭-ல் பலன் |
| 117 | சனி ௮-ல் பலன் |
| | சனி ௯-ல் பலன் |
| | சனி ௧0-ல் பலன் |
| | சனி ௧௧-ல் பலன் |
| | சனி ௧௨-ல் பலன் |
| 118 | ராகு ௧-ல் பலன் |
| | ராகு ௨-ல் பலன் |
| | ராகு ௩-ல் பலன் |
| | ராகு ௪-ல் பலன் |
| | ராகு ௫-ல் பலன் |
| 119 | ராகு ௬-ல் பலன் |
| | ராகு ௭ ல் பலன் |
| | ராகு ௮ ல் பலன் |
| | ராகு ௯ ல் பலன் |

| பக்கம், | விஷயம். | பக்கம். | விஷயம். |
|---|---|---|---|
| 119 | ராகு ௧0-ல் பலன் | 134 | சூரியனிற் புதபுக்தி |
| 120 | ராகு ௧௧ ல் பலன் | | சூரியனிற் கேதுபுக்தி |
| | ராகு ௧௨ ல் யலன் | 135 | சூரியனிற் சுக்கிரபுக்தி |
| | கேது ௧ ல் பலன் | 136 | சந்திரதெசாபலன் |
| | கேது ௨ ல் பலன் | | சந்திரனிற் சந்திரபுக்தி |
| 121 | கேது ௩ ல் பலன் | 137 | சந்திரனிற் செவ்வாய் புக்தி |
| | கேது ௪ ல் பலன் | 138 | சந்திரனில் ராகுபுக்தி |
| | கேது ௫ ல் பலன் | 139 | சந்திரனில் வியாழபுக்தி |
| | கேது ௬ ல் பலன் | 140 | சந்திரனிற் சனிபுக்தி |
| | கேது ௭ ல் பலன் | | சந்திரனிற் புதபுக்தி |
| | கேது ௮ ல் பலன் | 141 | சந்திரனிற் கேதுபுக்தி |
| | கேது ௯ ல் பலன் | 142 | சந்திரனிற் சுக்கிரபுக்தி |
| | கேது ௧0 ல் பலன் | 143 | சந்திரனிற் சூரியபுக்தி |
| 122 | கேது ௧௧ ல் பலன் | 144 | செவ்வாய்தெசாபலன் |
| | கேது ௧௨ ல் பலன் | | செவ்வாயிற்செவ்வாய் புக். |
| | இரண்டுகிரகங்கள் கூடினால் எந்தக்கிரகத்துக்குப் பெலவீனமென்பது. | 145 | செவ்வாயில் ராகுபுக்தி |
| | | 146 | செவ்வாயில்வியாழபுக்தி |
| | | 147 | செவ்வாயிற் சனிபுக்தி |
| 124 | திரிகோணபெலம் | | செவ்வாயிற் புதபுக்தி |
| | மாரகஸ்தானம் | 148 | செவ்வாயிற் கேதுபுக்தி |
| 125 | மகாதெசைபிரிக்கும்வழி. | 149 | செவ்வாயிற் சுக்கிரபுக்தி |
| 162 | காலசக்கரதெசைபிரிக்க. | | செவ்வாயிற் சூரிய புக்தி |
| 128 | மகாதெசைக்குப்போதகன் முதலிய ௬. | 150 | செவ்வாயிற் சந்திரபுக்தி |
| | | 151 | இராகுதெசாபலன் |
| | சூரியன்தெசாபலன் | | இராகுவில் இராகுபுக்தி |
| 129 | சூரியனிற் சூரியபுக்தி | 152 | இராகுவில வியாழபுக்தி |
| | சூரியனிற் சந்திரபுக்தி | 153 | இராகுவிற் சனிபுக்தி |
| 130 | சூரியனிற் செவ்வாய்புக்தி | 154 | இராகுவிற்புதபுக்தி |
| 131 | சூரியனில் ராகுபுக்தி | 155 | இராகுவிற் கேதுபுக்தி |
| 132 | சூரியனில் வியாழபுக்தி | | இராகுவிற் சுக்கிரபுக்தி |
| 133 | சூரியனிற் சனிபுக்தி | 156 | இராகுவிற் சூரியபுக்தி |

| பக்கம் | விஷயம். |
|---|---|
| 157 | இராகுவிற் சந்திரபுக்தி |
| 158 | இராகுவிற் செவ்வாய்புக்தி |
| 159 | வியாழதெசாபலன் |
| | வியாழனில் வியாழபுக்தி |
| 160 | வியாழனிற் சனிபுக்தி |
| 161 | வியாழனிற் புதபுக்தி |
| 162 | வியாழனிற் கேதுபுக்தி |
| | வியாழனிற் சுக்கிரபுக்தி |
| 163 | வியாழனிற் சூரியபுக்தி |
| 164 | வியாழனிற் சந்திரபுக்தி |
| 165 | வியாழனிற் செவ்வாய்புக்தி |
| 166 | வியாழனில் இராகுபுக்தி |
| | சனிதெசாபலன் |
| 167 | சனியிற் சனிபுக்தி |
| | சனியிற் புதபுக்தி |
| 168 | சனியிற் கேதுபுக்தி |
| 169 | சனியிற் சுக்கிரபுக்தி |
| 170 | சனியிற் சூரியபுக்தி |
| | சனியிற் சந்திர புக்தி |
| 171 | சனியிற் செவ்வாய்புக்தி |
| 172 | சனியில் இராகுபுக்தி |
| | சனியில் வியாழபுக்தி |
| 173 | புதன்தெசா பலன் |
| 174 | புதனிற் புதன்புக்தி |
| | புதனிற் கேதுபுக்தி |
| 175 | புதனிற் சுக்கிரபுக்தி |
| 176 | புதனிற்சூரியபுக்தி |
| 177 | புதனிற் சந்திரபுக்தி |
| | புதனிற் செவ்வாய்புக்தி |
| 178 | புதனிற் ராகுபுக்தி |
| 179 | புதனிற் வியாழபுக்தி |
| 180 | புதனிற் சனிபுக்தி |
| 181 | கேதுதெசாபலன் |
| | கேதுவிற் கேதுபுக்தி |
| 182 | கேதுவிற் சுக்கிரபுக்தி |
| 183 | கேதுவிற் சூரியபுக்தி |
| | கேதுவிற் சந்திரபுக்தி |
| 184 | கேதுவிற் செவ்வாய்புக்தி |
| 185 | கேதுவிற் ராகுபுக்தி |
| | கேதுவிற் வியாழ்புக்தி |
| 186 | கேதுவிற் சனிபுக்தி |
| | கேதுவிற் புதபுக்தி |
| 187 | சுக்கிரதெசாபலன் |
| 188 | சுக்கிரனிற் சுக்கிரபுக்தி |
| 189 | சுக்கிரனிற் சூரியபுக்தி |
| | சுக்கிரனிற்சந்திரபுக்தி |
| 190 | சுக்கிரனிற்செவ்வாய்புக் |
| 191 | சுக்கிரனில் ராகுபுக்தி |
| | சுக்கிரனில் வியாழபுக்தி |
| 192 | சுக்கிரனிற் சனிபுக்தி |
| 193 | சுக்கிரனிற் புதன்புக்தி |
| | சுக்கிரனிற் கேதுபுக்தி |
| 194 | மகாதெசாபுக்திகளின் வருஷ, மீ, நாள் அவைகளைக்கூட்டியறியுங்கணக்கும். |
| 197 | யோகபலன் |
| | நீசபங்கராஜயோகம் |
| | கேசரியோகம் |
| | பர்வதயோகம் |
| 198 | தர்மயோகம் |
| | ஆயுள்யோகம் |
| | கேதாரயோகம் |

| பக்கம். | விஷயம். | பக்கம். | விஷயம். |
|---|---|---|---|
| 198 | சூலயோகம் | 206 | தாந்திரியோகம் |
| 199 | கிரகமாலியாயோகம் | | உபரியோகம் |
| | சக்கரயோகம் | | மேதினியோகம் |
| | பாசயோகம் | | நாபியோகம் |
| | சுனபாயோகம் | | யூபயோகம் |
| 200 | அனபாயோகம் | | மீனயோகம் |
| | துரதுராயோகம் | 207 | மதனயோகம் |
| | அஸ்வயோகம் | | கெஜ்யோகம் |
| | வேசியோகம் | | கந்துகயோகம் |
| 201 | புஷ்களயோகம் | | சந்திரிகாயோகம் |
| | வானயோகம் | | மகுடயோகம் |
| | கந்தர்வயோகம் | | சித்திரயோகம் |
| | சிவயோகம் | | சாலயோகம் |
| 202 | விட்ணுயோகம் | | வீணையோகம் |
| | பிரமயோகம் | 208 | ரவியோகம் |
| | கௌரியோகம் | | சாமரையோகம் |
| | லட்சுமியோகம் | | கமலயோகம் |
| | சரஸ்வதியோகம் | | சாரதாயோகம் |
| 203 | பாஸ்கரயோகம் | | பரமானந்தயோகம் |
| | இந்திரயோகம் | | பிதிர்பாக்கியம் |
| | கலாநிதியோகம் | 209 | (உக)வித ராசயோகம் |
| | புண்ணியயோகம் | 211 | காலசக்கர தெசாபுக்திகளின் வலவோட்டு நாள் கரு மேடாதி மீனந்தம். இட வோட்டுநாள் கஉ விருச்சிகாதி தனுவந்தம். இப்படியே மாறிமாறிவரும் உககூ புக்திகளின் கணக்கு. |
| 204 | சந்நியாசியோகம் | வரை 219 | |
| | புதயோகம் | | |
| | கிரந்தயோகம் | | |
| 205 | சுமந்திரயோகம் | | |
| | சாபயோகம் | | |
| | சக்கரதரயோகம் | 220 | காலசக்கரதெசாபலன் |
| | நாகயோகம் | 221 | தத்துக்கள் |
| | பதுமயோகம் | 222 | தத்துக்களின் பலர்பலன் |
| 206 | காளயோகம் | | |

# முகவுரை.

சத்தஷாட் குண்ணியராகிய சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச்செய்த முதனூலாகிய நான்கு வேதங்களுக்கும் அங்கமாயுள்ளன ஆறு சாஸ்திரங்கள். அவை—சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடமென்பன. இவற்றுள், வேதங்களை உதாத்தம் அநுதாத்தம் முதலிய சுரவேறுபாட்டுடனே உச்சரிக்குமுறைமையை அறிவிப்பது சிக்ஷை; வேதங்களிலே விதிக்கப்பட்டகருமங்களை அநுட்டிக்குமுறைமையை அறிவிப்பது கற்பம்; வேதங்களின் எழுத்துச் சொல்லிலக்கணங்களை அறிவிப்பது வியாகரணம்; வேதங்களின்சொற்பொருளை அறிவிப்பது நிருத்தம்; வேதமந்திரங்களின் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரையும், அவைகளுக்கு எழுத்து எவ்வளவென்பதையும் அறிவிப்பது சந்தோவிசிதி; வேதங்களிலே விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்வதற்குரிய காலங்களை அறிவிப்பது சோதிடம். வேதபுருஷனுக்கு சிக்ஷை நாசி, கற்பம் கரம், வியாகரணம் வாக்கு, நிருத்தம் செவி, சந்தோவிசிதி பாதம், சோதிடம் நேத்திரம். ஒவ்வொருகருமத்துக்குமுரிய காலவிசேஷங்களைத் தெரிவிப்பதாதலால் சோதிடம் எல்லோர்க்குமின்றியமையாச் சிறப்புடையது. இது கணிதஸ்கந்தம், ஜாதகஸ்கந்தம், முகூர்த்தஸ்கந்தம், சம்மிதாஸ்கந்தமெனப் பலபகுப்பைக் கொண்டிருக்கும். இச்சோதிடத்தைப்பற்றிப் பிரமா, சூரியன், சந்திரன், சுக்கிரன், வியாசர், வசிஷ்டர், ரோமசர், பைலர், நாரதர், பாராசரர், அத்திரி, கசியபர், கார்க்கியர், மரீசி, அங்கிரா, சௌனகர், மனு, ப்ருகு, பிரமகுப்தர், ஆரியபட்டர், பாஸ்கராசாரியர், வராஹமிஹிரர், ஆசாரியஸ்ரீபதி, லல்லாசாரியர், யவனாசாரியர், கணேசதைவஞ்ஞர், மல்லாரிமிசிரர், சூரியதேவயச்சுவா, பிரமதூதகசுவாமி முதலியோரால் அநேக நூல்கள் முன்னே செய்யப்பட்டிருக்கின்றன.

அவையாவும் சம்ஸ்கிருத பாஷையிலே உள்ளன. அவற்றை ஆதாரமாகக்கொண்டு தமிழிலே செய்யப்பட்ட நூல்களோ (மூலபஞ்

ஷையிலுள்ள நூல்களோடு சேர்த்துப்பார்க்கும்போது) மிக அற்பமாக இருக்கின்றன. இந்நூல்களில் ஒன்றிலேனும் ஒருவருக்கு வேண்டிய பலாபலன் முழுவதும் சொல்லப்படவில்லை. அன்றியும் அவை கற்றறிந்தோர்க்கேயன்றிச் சதாரண கல்வியறிவுடையவர்களுக்கு, ஒருவரிடத்தேயிருந்து பாடங்கேட்டாலேயன்றி, விளங்குதற்கரிய பாடல்களாகவும் இருக்கின்றன. ஆகலால், ஜாதகபலன்களை எவர்களும் அறியும்படி, இருபாஷைகளிலும் எனக்குக் கிடைத்த சோதிட நூல்களில் ஆராய்ந்து, முதல் பொதுவாக அறியவேண்டியவைகளாகிய ஒவ்வொருவருடைய ஜன்மநட்சத்திரம், உதயலக்கினம், சந்திரலக்கினம் ஆகியாயுள்ளவைகளின் பலன்களும், கூ கிரகங்களும் கஉ இராசிகள்தோறும் சஞ்சரித்தலால்வரும் கOஅ விதமாகும் ஸ்தானபலன்களும், மகாதெசை ஒன்பதாலும்வரும் அகூ புத்திகளின் பலன்களும் காலசக்கர புக்திகளின் பேதமான உகசு விதபுத்திகளின் பலன்களும், அஷ்டவர்க்கபலன்களும், கிரகஸ்திதிகளைக்கொண்டு அறியும் ராஜயோக பலன்களும், ஆகிய இவைகளையும், மேலும் விசேஷபலன்களை அறிவதற்குவேண்டிய (கிரகங்களின்) சமயவிலை, அங்கவிலை, கிரியாகமனம், அவஸ்தை, கதி முதலியவைகளையும், தசவர்க்க கணிதநிர்ணயங்களையும் அறிவதற்குக் கிரகஸ்புடகணிதவிதியையும், இதிலே சேர்த்திருப்பதால் இவைகளாலும் கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம், நோக்கு முதலியவைகளாலும், கேந்திரம், திரிகோணம், தனம், லாபம் முதலாகிய (ராசிஸ்) தானபலன்களாலும், ஒரு ஜாதகியின் பலன்களை அறிவதுமல்லாமல், பிதா மாதா புத்திரர் சகோதரர் தாரம் சத்துரு இவர்களுக்குரிய பலனையும், கல்வி, ஈசுரபக்தி, செல்வம், கீர்த்தி, ஆயுள், புண்ணியபலன், தொழில், சீவனம் சத்தியநெறி, சுகம், நோய் இவைகளையும் எவரும் இலகுவில் இந்நூலைக்கொண்டு யூகித்தறிந்துகொள்ளலாம்.

வி. சபாபதிஐயர்,

ஜோதிஷர்.

## மங்களாசரணமும், நூற்பெயரும்.

---

உதயகாலத்திலே பிரமாவின் ரூபத்தையும், மத்தியானகாலத்திலே மஹேசுரனுடைய ரூபத்தையும், சாயங்காலத்திலே விஷ்ணுவின் ரூபத்தையும் பொருந்துபவரும், சிவபெருமானுடைய அஷ்டமூர்த்தங்களுளொன்றாயுள்ளவரும், சிவபெருமானின் வேறாகாதவரென்று வேதங்களாலே புகழப்படுபவரும், இருக்குவேதமாகிய விம்பத்தையும், யஜுர்வேதமாகிய கிரணத்தையும், சாமவேதமாகிய தேகத்தையுமுடையவரும், ராசிகளையும் நட்சத்திரங்களையும் முறையே ஆர்களும் ஆணிகளுமாகிய அங்கங்களாகிக்கொண்ட சம்வற்சரம் ஒருருளாகவும், சப்தசந்தஸுக்கள் குதிரைகளாகவும் பொருந்திய திரிலோகமாகிய ரதத்தின்கண் ஆரோகணிப்பவருமாகிய சிவசூரிய பகவானை மனம் வாக்குக் காயங்களினால் முறையே சிந்தித்துத் துதித்துச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து அவருடையநாமத்தையே (ஜாதக) பாஸ்கரன் என்று இந்நூலுக்குத் தரித்து இனிது முடியுமாறு பிரார்த்திக்கின்றேன்.

---

## காலப் பிரமாணம்.

---

௬ சுவாசங்கொண்டது ௧ விநாடி, ௬0 விநாடிகொண்டது ௧ நாழிகை, ௬0 நாழிகைகொண்டது ௧ மானுஷதினம், ௩௬௫ நாளும் சில விநாடி தற்பரைகளுங்கொண்டது ௧ மானுஷ வருஷம். அந்தவருஷம் ௩௬0 கொண்டது ௧ தேவவருஷம். அந்தத் தேவ வருஷம் ௧௨000 க்குச் சரியாகிய மானுஷ வருஷம் ௪௩௨000 கொண்டது ஒரு மகாயுகம். தேவவருஷம் ௪௮000 க்குச் சரியாகிய மானுஷ வருஷம் ௧௭௨௮000 கொண்டது கிருதயுகம். தேவவருஷம் ௩௬00க்குச் சரியாகிய மானுஷவருஷம் ௧௨௯௬000 கொண்டது திரேதாயுகம் தேவவருஷம் ௨௪00 க்குச் சரியாகிய மானுஷ வருஷம் ௮௬௪000 கொண்டது துவாபரயுகம். தேவவருஷம் ௧௨00 க்குச் சரியாகிய மா

னுஷவருஷம் ௪௩௨௦௦௦ கொண்டது கலியுகம். இந்த நான்குங்கூடியது ஒரு மகாயுகம். இந்த மகாயுகம் ௧௦௦௮ கொண்டது பிரமாவுக்கு ஒரு பகல். அப்பகலிலே ௧௪ மனுக்கள் அதிகாரஞ் செய்வார்கள். இவ்விதம் ௧௦௦௮ மகாயுகம் பிரமாவுக்கு ஒரு இரவும், ௧௦௦௮ மகாயுகம் ஒருபகலுமாக ௨௦௧௬ மகாயுகங்கொண்டது ௧ தினம். அப்படி ௩௬௦ தினங்கொண்டது ஒரு வருஷம். அப்படி ௧௦௦ வருஷங்கொண்டது பிரமாவுடைய ஆயுசு. இதுவரை ஆறு மனுக்கள் காலங்கழிய ஏழாவது வைவஸ்வதமனுவின் காலம் ஆரம்பித்து அதில் ௨௭ மகாயுகங் கழிந்து ௨௮ வது யுகத்திலே கிருதத் திரேதத் துவாபரம் என்னும் மூன்று யுகமுங் கழிந்தன். இப்பொழுது கலியுகம் ஆரம்பித்து அதில் ௫௦௧௦ ம் வருஷத்தில் பிரபவாதி கீலகவருஷம் நடக்கின்றது. இதில் இந்நூலை இயற்றி அச்சிட்டேன்.

---

## சதுர்யுகம்.

| | |
|---|---|
| கிருதயுகம் | ௧௭௨௮௦௦௦. |
| திரேதாயுகம் | ௧௨௯௬௦௦௦. |
| துவாபரயுகம் | ௮௬௪௦௦௦. |
| கலியுகம் | ௪௩௨௦௦௦ |

# ஜாதக பாஸ்கரன்.

ஐங்கரனீசனுமைகுகன் மாலயனாரணனா
மங்கைநற்சூரியன் சந்திரன்செய்புதன் மன்னிபொன்
சுங்கன் சனிராகுகேதுவெனும்படிசொல்லிநின்ற
புங்கவர் தம்மைமுறையேபணிந்தடிபோற்றுதுமே.

---

## க-ம் அத்தியாயம்.

---

### திதியாதிகளின் குணவிசேடம்.

திதி ஒருபங்குகுணம். கரணம் இரண்டுபங்குகுணம். யோகம் மூன்றுபங்குகுணம். நட்சத்திரம் நான்குபங்குகுணம். வாரம் எட்டுப்பங்குகுணம் வாரயோகம் பதினாறுபங்குகுணம். நல்ல சுபலக்கினம் நூறுபங்குகுணம். இவையெல்லாம் நல்லனவாகவும், கிரகங்களும் நல்லதானங்களிலே இருக்கப்பெற்ற சுபமுகூர்த்தம் பதினாயிரம்பங்குகுணம். இவ்விதமான முகூர்த்தத்திலே ஜெனித்த குழந்தையும் செய்தகருமமும் சிறப்படையுமென்பதாம்.

---

### கிரகபெலம்.

புதன் சாதாரணமான பெலமுடையவர். புதனிலுஞ் செவ்வாய் பெலமுடையவர். புதன், செவ்வாய் இருவரிலும் சனி பெலமுடையவர், புதன், செவ்வாய், சனி மூவரிலும் வியாழன் பெலமுடையவர், புதன், செவ்வாய், சனி, வியாழன் நால்வரினும் சுக்கிரன் பெலமுடை

யவர். புதன், செவ்வாய், சனி, வியாழன், சுக்ரன் ஐவரிலும் சந்திரன் பெலமுடையவர், புதன், செவ்வாய், சனி, வியாழன், சுக்கிரன், சந்திரன் அறுவரிலும் சூரியன் பெலமுடையவர். புதன், செவ்வாய், சனி, வியாழன், சுக்கிரன், சந்திரன், சூரியன் எழுவரிலும் ராகு கேது பெலமுடையவர். அபரபட்சச் சந்திரனும் புதனும் ஒத்த பெலமுடையவர்களாகக் கொள்ளவேண்டியது.

---

## கோட்களினது ஸ்தானவலிது.

புதன் வியாழன் இருவரும் உதயத்தில் வலியர். சந்திரன் சுக்கிரன் இருவரும் கீழ்க்கீழில் (௪ல்) வலியர். சனி பாம்பு இருவரும் பாட்டில் (௭ல்) வலியர். சூரியன் செவ்வாய் இருவரும் உச்சியில் (௧௦ல்) வலியர்.

---

## வர்க்கோத்தமும், இராசிகளிலுங் கோட்களிலும் சரம் திரம் உபயமும்.

மேடம், கர்க்கடகம், துலாம், மகரம் ௪ம் சரராசி.
இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் ௪ம் திரராசி.
மிதுனம், கன்னி, தனு, மீனம் ௪ம் உபயராசி.
சந்திரன், செவ்வாய், ராகு, கேது—சரம்.
சூரியன், சுக்கிரன்—திரம்.
புதன், குரு, சனி—உபயம்.

---

## இராசிகளிலும் கோட்களிலும் சிரோதய பிருட்டோதய சிரப்பிருட்டோதயம்.

மிதுனம், சிங்கம், கன்னி, துலாம் விருச்சிகம், கும்பம் ௬ம் சிரோதயம்
மேடம், இடபம், கடகம், தனு, மகரம், ௫—ம் பிருட்டோதயம்.

மீனம்—சிர பிருட்டோதயம்.
புதன், வியாழன், சுக்கிரன், ராகு—சிரோதயம்.
சூரியன், செவ்வாய், சனி—பிருட்டோதயம்.
சந்திரன், கேது—சிர பிருட்டோதயம்.

---

## இராசிகளிலும் கிரகங்களிலும் ஆண்பெண்ணும் கிரக அலியும்

மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனு, கும்பம், ௬-ம் ஆண்.
இடபம், கர்க்கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம், ௬—ம் பெண்
சூரியன், செவ்வாய், வியாழன், ௩-ம் ஆண்.
சந்திரன். சுக்கிரன், ராகு, ௩-ம் பெண்.
புதன், சனி, கேது ௩-ம் அலி

---

## இராசிகளும் கோட்களும் வலிதுபெறுங்காலம்.

சிரோதயராசி பகலிலும், பிருட்டோதய ராசி இரவிலும், சிரபிருட்டோதயராசி இருகாலத்திலும் வலிமையுடையன.

சூரியனும வியாழனும் சுக்கிரனும் பகலில் வலியவர். சந்திரனும் செவ்வாயும் சனியும் இரவில் வலியர். புதன் ராகு கேது இரண்டுகாலங்களிலும் வலியர்.

## நட்பாதிஐவகைப்பெலம்.

நட்புப்பெற்ற கிரகங்களுக்கு உள்ளவலிதே வலிது. ஆட்சிப்பெற்ற கிரகங்களுக்கு உள்ளவலிதில் இரட்டிப்பான வலிது. உச்சம்பெற்ற கிரகங்களுக்கு உள்ளவலிதிற் பத்துப்பங்கு வலிது. பகைபெற்றகிரகங்களுக்கு உள்ளவலிதில் அரைப்பங்குவலிது. நீசம்பெற்ற கிரகங்களுக்கு உள்ளவலிதிற் கால்பங்கு வலிது.

கிரகங்கள் நட்பாட்சி உச்சத்தில் வர்க்கோத்தமபெலமேறுடு வக்கிரித்துமிருப்பின் சொல்லிய பெலத்தினும் மும்மடங்குபெலம் பெறுவர்.

சூரியனுக்கு உத்தராயணகாலம் பெலம். சந்திரன்முதலிய சுபர்களுக்குப் பூர்வபட்சம் பெலம். மற்றையோர் ஒருவரோடொருவர் கூடினும் வக்கிரித்திருப்பினும் பெலம்பெறுவர்.

---

## ராசிகளினதும், கோட்களினதும் நிறம்.

மேடம். சிங்கம், தனு இவை சிகப்பு. ரிஷபம், கடகம், துலாம் இவை வெண்மை. விருச்சிகம், கும்பம், மீனம் இவை பசுமை. மிதுனம், கன்னி, மகரம் இவை கருமை. சூரியன் அக்கினிநிறம். சந்திரன் படிகநிறம். செவ்வாய் இரத்தநிறம். புதன் பசுமை நிறம். குரு—பொன்னிறம். சுக்கிரன் பால்நிறம். சனி ராகு கருநிறம். கேது சிகப்பு.

---

## இராசிகளின் வடிவு.

மேஷம் ஆடு. ரிஷபம் எருது. மிதுனம் ஒருபுருஷனும் ஸ்திரீயும் புருஷன்கையிலே தடியும், ஸ்திரீகையிலே வீணையுங்கொண்டு ஒரு ஆசனத்திலே இருப்பார்கள். கர்க்கடகம் நண்டு. சிங்கம் சிங்கம். கன்னி ஒரு கன்னிகை ஒருகையிலே முளைப்பாலிகையும், மற்றொருகையிலே விளக்குங்கொண்டு ஒரு ஆசனத்திலே இருப்பாள். துலாம் ஒரு புருஷன் தராசுதூக்கிநிற்பன். விருச்சிகம் தேள். தனுசு அரைக்குக்கீழே குதிரைவடிவும், அரைக்குமேலே புருஷவடிவுமாக விற் பிடித்து நிற்கும். மகரம் அரைக்குக்கீழே சுறுவடிவும் அரைக்குமேலே மான் வடிவுமாக நிற்கும். கும்பம் ஒருபுருஷன் குடமேந்திநிற்பன். மீனம் ஒன்றற்குமாற்றாக விழுவதுமெழுவதுமான இரண்டுமீன்களாக இருப்பன.

---

## கிரககாரகத்துவம்.

சூரியன்—பிதிர்காரகன். சந்திரன்—மாதுருகாரகன். செவ்வாய்—சகோதரகாரகன். புதன்—வித்தியாகாரகன். வியாழன்—புத்திரகாரகன். சுக்கிரன்—களத்திரகாரகன். சனி—ஆயுள்காரகன். ராகு—பிணிகாரகன். கேது—ஞானகாரகன்.

---

சூரியனால்—ஈசுரவழிபாடு, சத்தியநெறி, சௌனம், சீவாதாரமான சுகங்கள், தேகம், மனச்சிந்தனை, கீர்த்தி, சிநேகவெறுப்பு, ராஜகாரியம் இவைகளையும், பிதாவின் பலாபலன்களையும்

சந்திரனால்—புத்தி, மனோவியாபாரம், வீட்டுக்கட்டடம் முதலிய சிறப்பு, நற்குணம், வாசனாதிரவியங்கள், ஸ்நானாதிகள், பால்முதலிய போசனாதிகள், ரூபலெட்சணம் இவைகளையும் மாதாவின் பலாபலன்களையும்

செவ்வாயினால்—பூமி, சரீரபெலம், உற்சாகம், கோரவசனம், அவமிருத்துவுக்குரியநோய், கடன், சத்துருபீடை, அகங்காரம், இவைகளையும் சகோதரபலாபலன்களையும்

புதனால்—கல்வி, விவேகம், ஞானஅறிவு, வாக்குவல்லபம், வாதவாய்வு ரோகாதிகள், நுட்பமானவேலை, கணக்குவல்லபம், வியாபாரம, பண்டிதத்தன்மை இவைகளையும், மாமன் வெர்க்கங்களின் பலா பலன்களையும்

வியாழனால்—சரீரபுஷ்டி, திரவியம், ஞானசாஸ்திர வுணர்ச்சி, முதன்மை, மந்திரோபதேசம், வேதாகம ஆராய்வு, ஒழுக்கம், ஆலோசனை இவைகளையும், புத்திரரின்பலாபலன்களையும்

சுக்கிரனால்—விவாகம், போகாதிசுகானுபவம், குளிர்ந்தவாக்குவிலாசம், விஷயப்பிரவேசம், ஸ்திராதியலங்காரச்சிறப்பு, வாகனாதிகள், கப்பல் முதலானவை, நவரெத்தினங்கள், தேவப்பிரசாதம் இவைகளையும், மனையாளின் பலாபலன்களையும்

சனியினால்—வேளாண்மை, பசுமுதலியவைகளின் விருத்தி, புராதன சீவனமாற்றம், ஒழுக்கந்தவறுதல், ராஜவிரோதம், தேசசஞ்சாரம், சேவகாவிருத்தி இவைகளையுந் தனது ஆயுட்பெலன் முதலிவைகளையும்

ராகுவினால்—மோக்ஷபாதை, மந்திரசாதனை, அன்னியதேசவாசம், விஷம், விகடம், சுவாசம் (மூச்சு) முதலியவைகளின்நோய், சத்துருதன்பர், ரெணுஇகள், விஷநீர் முதலியவைகளையும் பிதிர்பாட்டனின் பலாபலன்களையும்

கேதுவினால்—ஞானசாதனை, உதரரோய், வலிப்புமுதலியவை, சித்தசுவாதீனமில்லாதவார்த்தை, கீழ்த்தொழில்செய்ய அஞ்சாமை, குஷ்டம், பரிகாசவார்த்தை முதலியவைகளையும், மாதுரு பாட்டன் முதலியோரின் பலாபலன்களையுமறியலாம்.

---

லக்கினம்—தேகம், புலன், குணம், கீர்த்தி, தெய்வவணக்கம், சரீரசீலை இவைகளுக்குரிய ஸ்தானமென்றும்

உ-ம் இடம் நேத்திரம், வாக்கு, தனம், குடும்பம், சத்தியவசனம், தத்துவவிசாரணை, இவைகளுக்கும் வித்தியாகுருவுக்குமுரிய ஸ்தானமென்றும்

௩-ம் இடம் சகோதரத்துக்கும், பராக்கிரமம், வீரியம், கேள்வி, போசனம் இவைகளுக்குமுரிய ஸ்தானமென்றும்

௪-ம் இடம் மாதுருவுக்கும், வெந்துக்களுக்கும் வாகனம், பூமி, சுகம வீடு, பாற்பசு, பரவிஷயம், சாஸ்திராப்பியாசம் இவைகளுக்குமுரிய ஸ்தானமென்றும்

௫-ம் இடம் புத்திரர், பிதா, மாமன், இவர்களுக்கும், விவேகம், ஞானம், மந்திரம், பூர்வபுண்ணியம், யோகாப்பியாசம், இவைகளுக்குமுரிய ஸ்தானமென்றும்

௬-ம் இடம் சத்துரு, சோரர், இவர்களுக்கும், ரோகம், ஆயுதவிரணம், கடன் இவைகளுக்குமுரிய ஸ்தானமென்றும்

௭-ம் இடம் களத்திரத்துக்கும், காமம், விவாகம், குணம், இன்பம், ஜனவசியம் இவைகளுக்குமுரிய ஸதானமென்றும்

௮-ம் இடம் ஆயுள், மரணம், துக்கம், விஷபயம் இவைகளுக்கு முரிய ஸதானமென்றும்

௯-ம் இடம் பிதா, குரு இவர்களுககும், தர்மம் திரவியம் திருப்பணி உபதேசம், இவைகளுக்குமுரிய ஸதானமென்னும்.

௧௦-ம் இடம் சீவனம், கீர்த்தி, ஞானம், சத்கர்மம், தயை, பூஜை தேவபக்தி இவைகளுக்குரிய ஸ்தானமென்றும்

௧௧-ம் இடம் மூத்தசகோதரத்துக்கும, லாபம, ராஜவித்தை, துக்கநிவிர்த்தி, ஞான அறிவு இவைகளுக்குமுரிய ஸதானமென்றும்

௧௨-ம் இடம் வியம், தேசசஞ்சாரம், கீர்த்தி, திரவியசேதம் இவைகளுக்குமுரிய ஸதானமென்றும்பெயர்.

இன்னும் இவைகளின் விரிவானபலன்கள் லக்கினம்முதலிய ௧௨ ராசிகள்தோறும் ஒவ்வோருகிரகமும்நிற்கும் ௧௦௮வித பலன்களுக்கு முன்னே எழுதப்படும்.

---

## கேந்திரதிரிகோண பெலம்.

கேந்திரங்களாகிய ௧-ம் ௪-ம், ௭-ம் ௧௦-ம் இடங்களில் ௧ ம் இடத்தை உதயமென்றும், ௪-ம் இடத்தை நீர்க்கீழ் என்றும், ௭-ம் இடத்தைப் பாடு என்றும், ௧௦-ம் இடத்தை உச்சியென்றும் இவற்றை முறையாகவே லக்கினகேந்திரம், சதுர்த்தகேந்திரம், ஸப்தமகேந்திரம், தசமகேந்திரம் என்றும் சோதிடநூல்களிலே வழங்கிவருவதுண்டு. இக்தத் தானுதிபர்கள் ஒருவரினும் பார்க்க ஒருவர் ஏற்றமான யோகபலனைச்செய்வர்.

இவ்விதமாகவே திரிகோணமாகிய ௧-ம் ௫-ம், ௯-ம் இடங்களுக் கதிபர்களும் (கேந்திராதிபர்களைப்போலவே) ஒருவரிலும்பார்க்க ஒருவர் ஏற்றமான யோகபலனைச் செய்பவர்களாகி உயர்ந்த கேந்திராதிபதியாரும் பத்தாமிடத்ததிபதியும், உயர்ந்த திரிகோணத்தானதிபதியாரும் ௯—மிடத்ததிபதியுமே விசேஷபலனைச் செய்யத்தக்கவர்கள்.

பாபக்கிரகங்கள் கேந்திராதிபதிகளானால் விசேஷமான சுபபலனைச் செய்வார்களென்றும், சுபக்கிரகங்கள் கேந்திராதிபதிகளானால் அவ்வளவு விசேஷபலனைச் செய்யார்களென்றும் சிலநூற்சம்மதம்.

மிருத்துகாரகன், மாரகன், சட்டமாதிபன், அட்டமாதிபன், விரயஸ்தானாதிபன் ஆகிய இவர்களும், இவர்களுக்குச் சம்பந்தமானவர்களும் நற்பலனைச்செய்யார்கள். மிருத்துகாரகன் ராகுநின்ற நட்சத்திரபாதத்துக்கதிபதி. மாரகர் ௨-ம், ௩-ம், ௭-ம், ௮-ம் இடங்களுக்கதிபர்கள். இன்னும், நவாம்சலக்கினாதிபதி நவாம்சத்தில் சூரியன் நின்றவீட்டுக்கதிபதி, நவாம்சத்தில் சனிநின்றவீட்டுக்கதிபதி, நவாம்சத்தில் கேதுநின்றவீட்டுக்கதிபதிகளையும் (பலவகை) மிருத்துக்களாகவும் வழங்குவர்.

மேற்சொல்லியவற்றின் நியாயங்களை இங்கே சுருக்கமாகக் காட்டப்பட்டன. பின்னே இந்தநூலில் அவையவை வேண்டுமிடங்களிலே விரிவாக எழுதப்படுமே.

---

## கிரகரெத்தினம்.

சூரியனுக்கு—மாணிக்கம்.
சந்திரனுக்கு—முத்து.
செவ்வாய்க்கு—பவளம்.
புதனுக்கு—(பச்சை)மரகதம்.
குருவுக்கு—புஷ்பராகம்.
சுக்கிரனுக்கு—வைரம்.
சனிக்கு—நீலம்.
ராகுவுக்கு—கோமேதகம்
கேதுவுக்கு—வைடூரியம்.

---

## முக்குணக்கிரகம்

சூரியன், செவ்வாய், சுக்கிரன்—ராஜதம்;
சந்திரன், குரு—சாத்விகம்.
புதன், சனி, ராகு கேது—தாமதம்.

---

## முப்பிணிக் கிரகம்

புதன், குரு, சனி—வாதம்;
சூரியன், செவ்வாய், ராகு, கேது—பித்தம்;
சந்திரன், சுக்கிரன்—சிலேட்டுமம்.

---

## கிரகசுவை.

சூரியனுக்கு—காரப்பு.
சந்திரன், குரு, சுக்கிரனுக்கு—தித்திப்பு;
செவ்வாய்க்கு—துவர்ப்பு.
புதனுக்கு—உவர்ப்பு.
சனிக்கு—கைப்பு.
இராகு கேதுவுக்கு—புளிப்பு.

---

## கிரக அங்கம்

| | | |
|---|---|---|
| சூரியனுக்கு...சிரசு. | புதனுக்கு...முதுகு. | சனிக்கு......தொடை; |
| சந்திரனுககு...முகம். | வியாழனுக்கு வயிறு. | ராகுவுக்கு.........கை, |
| செவ்வாய்க்கு மார்பு. | சுக்கிரனுக்கு அரை. | கேதுவுக்கு.........கால், |

---

## இராசி அங்கம்.

| | | |
|---|---|---|
| மேஷத்துக்கு... தலை | சிங்கத்துக்கு... மார்பு. | தனுவுக்கு......தொடை |
| ரிஷபத்துக்கு...முகம் | கன்னிக்கு... பக்கம். | மகரத்துக்கு முழந்தாழ். |
| மிதுனததுக்.கழுதது | துலாத்துக்கு...வயிறு | கும்பத்துக்கு கணைக்கால். |
| கடகத்துக்கு தோள், | விருச்சிகத்துக்குகுறி, | மீனத்துக்கு...... பாதம், |

## ஸ்திரீகாலம் புருஷகாலம்.

உதயாதி சென்றுஞ்சென்றநாழிகையை ஒவ்வொருவாரத்து க்குஞ் சொன்னமுறைப்படியே ௧௰ நாழிகைவீதம் கழித்துக் காண்பது. பகலிற் பார்ப்பதுபோலவே இரவுக்கும் பார்க்கவேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை இந்த நான்குவாரங்களிலும காலே சூரியோதயம்முதல் ௧௰ நாழிகைவரையும் புருஷகாலம். ௧௰ நாழிகைக்குமேல் ௨௰ நாழிகை வரையும் ஸ்திரீகாலம். திங்கட்கிழமை புதன்கிழமை வெள்ளிக்கிழமை இந்தமூன்று வாரங்களிலும் சூரியோதயம் முதல் ௧௰ நாழிகை வரையும் ஸ்திரீகாலம். ௧௰ நாழிகைக்குமேல் ௨௰ நாழிகை வரை புருஷகாலம். இவ்விதமாகவே ஒன்றேகால்நாழிகைக்கு ஒவ்வொருகாலமாக ௬௰ நாழிகைவரையும் கணக்கிட்டு அறிந்துகொள்ளவேண்டும். பத்துநாழிகைசென்றால் பின்பு பதினொராவது நாழிகை தொடங்கும்போது முதல்வந்தகாலந்தான் வரும்.

---

## கிரகநோக்கு.

கிரகங்களின் நோக்கு (பார்வை) கள் கால்நோக்கு, அரைநோக்கு, முக்கால்நோக்கு முழுநோக்கு என்னும் ௪ பிரிவாக இருப்பனவாகும். சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், ராகு, கேது இந்த அறுவரும் தாம் தாம் இருக்குமிராசியையும், அதிலிருந்து ஏழாமிடத்தையும் முழுப்பார்வையாக நோக்குவார்கள். செவ்வாய் நான்காமிடத்தையும், எட்டாமிடத்தையும் முக்காற்பார்வையாக நோக்குவர். வியாழன் ஐந்தாமிடத்தையும் ஒன்பதாமிடத்தையும் அரைப்பார்வையாக நோக்குவர். சனி மூன்றாமிடத்தையும், பத்தாமிடத்தையும் கால்பார்வையாக நோக்குவர். எல்லாருந் தமக்கு ஏழாமிடத்தை நோக்குவரென்பதுமொன்று.

---

## இராசிப் பிரமாணம்
## சூரியசித்தாந்தத்திற் சொல்லியபடி.

| இராசி. | நாடி. | விநாடி. | தற்பரை. | இராசி. | நாடி. | விநாடி. | தற்பரை. |
|---|---|---|---|---|---|---|---|
| மேடம் | ௪ | ௩௪ | ௫௩. | துலாம்...... | ௫ | ௯ | ௫௯. |
| இடபம் ... ... | ௫ | ௭ | ௨௭. | விருச்சிகம் | ௫ | ௨௯ | ௪௩. |
| மிதுனம்... ... | ௫ | ௨௭ | ௫௪ | தனுசு... ... | ௫ | ௨௧ | ௪௨. |
| கர்க்கடகம் ... | ௫ | ௨0 | ௭. | மகரம்...... | ௪ | ௫௧ | ௫௫, |
| சிங்கம்... ... | ௫ | ௨ | ௧௨. | கும்பம்...... | ௪ | ௨௩ | ௪௨ |
| கன்னி......... | ௪ | ௫௯ | ௫௬. | மீனம்... ... | ௪ | ௧௯ | ௩௫. |

## பகல்நாழிகை.

பகலிலே எந்தநேரத்துக்கு நாழிகை அறியவேண்டுமோ, அப்பொழுது அடியளந்து, இங்கே குறித்திருக்கும்பிரகாரம் (அந்தமாதத்துக்குரிய) அவச்சாயை பாதச்சாயை நீக்கி, மீதத்தை இரண்டாற் பெருக்கி அத்துடனே ௧௪ கூட்டி, வந்ததொகையினாலே அந்தத்தினத்தின் (சூரியோதயாதி அஸ்தமனந்தமுள்ள ராசிகளின் நாழிகைக்குச் சரியாகிய) பகல்மானநாழிகையை ௭-ல் பெருக்கிய தொகையைப் பிரித்து வந்தது நாழிகை. மீதத்தை ௬0 ஆற் பெருக்கி (முன்போல) பிரித்துவந்தது விநாடி,

இது முன்பகலாகில் உதயாதி சென்றநாழிகையாகவும், பின்பகலாகில் குறித்தநேரத்துக்குப் பின்னே (சூரியாஸ்தமனம்வரை)நின்றநாழிகையாகவும் காணப்படும். பின்பகலில் நின்றநாழிகையைப் பகல்மானநாழிகையிலே கழித்தால் உதயாதிநாழிகையாக வரும்.

---

## அவச்சாயை பாதச்சாயை. -

| மாதம். | ௧௳ முதல் | ௧௧௳ முதல் | ௨௧௳ முதல் | மாதம். | ௧௳ முதல் | ௧௧௳ முதல் | ௨௧௳ முதல் |
|---|---|---|---|---|---|---|---|
| சித்திரை... | ௧\|\| | ௧ | ௧\|\| | ஆனி... ... | ௨\|\| | ௩ | ௨\|\| |
| வைகாசி... | ௧\|\| | ௨ | ௨\| | ஆடி......... | ௨\|\|\| | ௨ | ௪\|\|\| |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆவணி......௧\|\| | ௧ | ௧\|\| | மார்கழி ...௪\|\| | ௪\|\| | ௪\|\| |
| புரட்டாதி...௧\|\| | ௨ | ௨\|\| | தை.........௪\|\| | ௪ | ௩\|\| |
| ஐப்பசி... ...௨\|\| | ௩ | ௩\|\| | மாசி... ... ...௩\|\| | ௩ | ௨\|\| |
| கார்த்திகை ௩\|\| | ௪ | ௪\|\| | பங்குனி......௨\|\| | ௨ | ௧\|\| |

அளந்துகண்ட அடியிலே இலைகளைக் கழிப்பது. அளக்கும்போது முதல் மிதித்த அடியையுஞ் சேர்த்துக்கொள்ளவும்.

## இரவு நிலவுநாழிகை.

சந்திரன் எப்போதும் ஒரேவிதமாக உதயமாகாமல் நாளுக்குநாள் வித்தியாசமாக உதயமாதலால் குறித்த நேரத்துக்கு நாழிகை அறிய முன் சந்திரோதயத்தை நிதானித்தல்வேண்டும்.

அமாவாசைக்கடுத்த பிரதமைமுதல் சதுர்த்தசியீறாக உள்ள நாட்களிலே (தோற்றாவிடினும்) பகலிலே நிலவுதிப்பதாகவும், பூரணைக்கடுத்த பிரதமைமுதல் சதுர்த்தசியீறாகவுள்ள நாட்களிலே இரவிலே நிலவுதிப்பதாகவும் கவனிக்கவேண்டும்.

அமாவாசைக்கடுத்துவரும் (பூர்வபக்கப்,பிரதமைமுதல், நிலவுதிக்கின்ற திதிக்கு முதல் திதி முடிவாக உள்ள திதிகளை எண்ணி இரட்டித்துக் கண்ட நாழிகையைக் குறித்துக்கொண்டு, அந்தநேரத்தில் நிற்குந் திதியிற் சென்றநாழிகையை அந்தத் திதிக்குள்ள பரம நாழிகையினாற் (பிரிக்கப் போதாதாயின் ௬௦-ஆற் பெருக்கி விநாடியாக்கி) பிரித்துவந்ததை இரட்டித்து முன் திதியை இரட்டித்த நாழிகையோடுகூட்டச் சந்திரன் மத்திமோதயநேரமாகும்.

மத்திமோதயநேரத்தில் என்ன நட்சத்திரம், அதில் எத்தனையாவதுபாதம் அப்பாதத்தில் எவ்வளவு சென்றதென்றும் (ஒருராசிக்குள்ள இரண்டேகால் நட்சத்திரத்துக்கு ௯ காற்களாதலால்) நிலவுதிக்கின்ற ராசிக்குள்ள கால் ௯ல் எத்தனைகால் சென்றதென்றும் நிதானித்தறிந்து, சென்றகாலை நிலவுதிக்கின்ற ராசிநாழிகையாற்பெருக்கி

கூ-ஆல் பிரித்துவந்ததொகை சந்திரன் உதயமாகும்போது அந்த (உதிக்கின்ற) ராசியிற் சென்றநாழிகையாகும். குறித்ததினத்திலே சூரியோதயமாகும்போது உதயராசியில் சூரியனுதித்தபின் நின்றநாழிகை (சூரியோதயாற்பரம்) முதல் சந்திரனுதிக்கின்ற ராசியிற் சந்திரனுதிக்க முன் சென்றநாழிகை (சந்திரஉதயாற்பர பூருவம்) அளவும் கிரமமாக ராசிகளின் நாழிகைகளைக்கூட்டிக் கண்டது சூரியோதயாதி நிலவுதயாந்தஞ் சென்றநாழிகையாகும்.

இந்தநேரத்திலே சந்திரனுதிக்கின்ற ராசிமுதல் கூ ராசிக்குள்ள நாழிகையுடனே க கூட்ட வருவது நிலவுதயாதி அஸ்தமனாந்தமுள்ள நிலவுமானமாகும்.

அளந்துகாணப்பட்ட அடியிலே சந்திரனுதிக்கும்போது அந்த ராசி முற்கூறோ, நடுக்கூறோ, பிற்கூறோவென்றறிந்து, அந்தராசிமாதமெதுவென்றும், முற்கூறானால் முற்பத்தும், நடுக்கூறானால் நடுப்பத்தும், கடைக்கூறானால் கடைசிப் பத்துத் தேதிகளுக்குமுரிய அலச்சாயை பாதச்சாயையைப் பகல் நாழிகைக்குச்சொன்ன கிரமமாகத் தள்ளி, மீதத்தை இரட்டித்து கஉ கூட்டி வந்ததொகையினால், நிலவுதயாதி அஸ்தமனாந்தமுள்ள கூ ராசி நாழிகையுடனே க நாழிகை கூட்டி எ-ல் பெருக்கியதொகையை (ஈப) பிரிக்க வருவது நிலவு முன்னேரமானால் நிலவுதயாதி சென்றாந்தஞ் சென்ற நாழிகையும், நிலவு பின்னேரமானால் சென்றாதி நிலவஸ்தமனாந்தம் நின்ற நாழிகையுமாகும்.

நிலவுமானத்திலே சென்றாதி நிலவு அஸ்தமனாந்தம் நின்றநாழிகையைக் கழிக்க நிலவுதயாதி சென்றநாழிகையாகும். உதயாதி நிலவுதயாந்தஞ் சென்றநாழிகையுடனே நிலவுதயாதி சென்றாந்தஞ் சென்றநாழிகையைக் கூட்டச் சூரியோதயாதி சென்றாந்தஞ் சென்றநாழிகைவரும்.

## நட்சத்திரங்களின் வடிவமும் உச்சமாகும்போது இராசிகளிற்சென்றநாழிகையும் அறிய.

அச்சுவினி—குதிரைமுகம்போல ௩ நட்சத்திரம் உச்சமாகும்போது கர்க்கடகத்தில் ௨ நாழிகை.

பரணி—அடுப்பு [முக்கோணம்]போல மூன்று; உச்சமாகும்போது கர்க்கடகத்தில் ௪| நாழிகை.

கார்த்திகை—சௌரக்கத்திபோல ௬; உச்சமாகும்போது சிங்கத்தில் ௧ நாழிகை.

ரோகிணி—வண்டிச்சக்கரம்போல ௧௨; உச்சமாகும்போது சிங்கத்தில் ௫ நாழிகை.

மிருகசீரிடம்—தேங்காய்க் கண்போல ௩; உச்சமாகும்போது சிங்கம் முடிவு. மான்தலைபோல் என்றுஞ் சொல்வதுமுண்டு,

[illegible]—பவளம்போல ௧; இது உச்சமாகும்போது கன்னியில் ௧|| நாழிகை.

புநர்பூசம்—வீடுபோல ௫; உச்சமாகும்போது துலாத்தில் || நாழிகை.

பூசம்—புடலம்பூப்போல ௩; உச்சமாகும்போது துலாத்தில் ௨|| நாழிகை.

ஆயிலியம்—அம்மிபோல ௬; உச்சமாகும்போது துலாத்தில் ௪|நாழிகை. சர்ப்பம்போல என்றுஞ் சொல்வதுமுண்டு.

மகம்—நண்டுகைக்கெகப்புபோல ௫, இவை உச்சமாகும்போது விருச்சிகத்தில் ௧|| நாழிகை. முடநகம்போல வென்று சொல்வதுமுண்டு.

பூரம், உத்தரம் இரண்டுங்கூடி — கட்டிற்கால்போல இரண்டிரண்டாக வுள்ளன. இவற்றில், பூரமுச்சமாகும்போது விருச்சிகத்தில் ௩ நாழிகை. உத்தரமுச்சமாகும்போது தனுவில் || நாழிகை.

அத்தம் — உள்ளங்கைவிரல்போல ௫; உச்சமாகும்போது தனுவில் ௨ நாழிகை.

சித்திரை — முத்துப்போல ௧; உச்சமாகும்போது தனுவில் ௫ நாழிகை.

சுவாதி — மாணிக்கம்போல ௧; உச்சமாகும்போது மகரராசியில் ௧|| நாழிகை

விசாகம் — குயவனின் சக்கரம்போல ௫; உச்சமாகும்போது மகரராசியில் ௪ நாழிகை.

அனுஷம் — வளைந்த பனைபோல ௬; உச்சமாகும்போது கும்பராசியில் || நாழிகை.

கேட்டை - ஈட்டிபோல ௩; உச்சமாகும்போது கும்பத்தில் ௧|| நாழிகை

மூலம் — தோட்டிபோல ௬, உச்சமாகும்போது கும்பத்தில் ௩ நாழிகை

பூராடமும், உத்தராடமும் சேர்ந்து — பூம்பந்தற்கால்போல ௪; இவற்றில் பூராடமுச்சமாகும்போது மீனத்தில் || நாழிகை, உத்தராடமுச்சமாகும்போது மீனத்தில் ௪ நாழிகை.

திருவோணம் — கோல் போல ௩, உச்சமாகும்போது மேஷத்தில் ௩ நாழிகை.

அவிட்டம் — மத்தளம்போல ௬, உச்சமாகும்போது இடபத்தில் || நாழிகை. சக்கரம் போல எனவுஞ் சொல்வதுமுண்டு.

சதயம் — சிறு புஷ்பக்கும்பல்போல ௧00, உச்சமாகும் போது இடபத்தில் ௨|| நாழிகை.

பூரட்டாதியும், உத்தரட்டாதியும் சேர்ந்து — கட்டில்போல, இவற்றில் பூரட்டாதி உச்சமாகும்போது மிதுனத்தில் ௧|| நாழிகை, உத்தரட்டாதி உச்சமாகும்போது மிதுனத்தில் ௪ நாழிகை.

ரேவதி—மீன்போல ௫௰; உச்சமாகும்போது கர்க்கடகத்தில் ||| நாழிகை சென்றது, மீதஞ் செல்லாயவிருப்பது. முன்குறித்தவைகளும் இப்படியே காண்க.

இங்கே குறிக்கப்பட்ட நாழிகைகள் அந்த அந்த நட்சத்திரங்களிலே யோகநட்சத்திரம உச்சமாக இருக்கும்போது அவ்விராசியிற் சென்றநாழிகையாகும்.

கேட்டைமுதலாக ௯ நட்சத்திரங்கள் உச்சந்திரும்பும்போதும்; ரேவதி முதல் ௬-நட்சத்திரங்கள் உச்சத்தில் வரும்போதும், திருவாதிரைமுதல் ௧௨ நட்சத்திரங்கள் உச்சத்தில் நிற்கும்போதும் உச்சமாகக்கொள்ளவும்.

சுவாதி, விசாகம் ௨-ம் வடதிசையிலும், அனுஷமுதலைந்தும் தென்திசையிலும், திருவோண முதல் ௨௰-ம் மத்தியிலும், உச்சமாகும் போதுகாணலாம்.

இங்கே கூறிய விதியினால், ஆகாயத்திலே நக்ஷத்திரங்கள் உச்சத்தில் வரும்போது கட்பார்வைக்குத் தோற்றப்படும் வடிவமும், அப்போது எந்தராசியிலே எத்தனை நாழிகை சென்றதென்றும், அறியத்தக்கது. இதைக்கொண்டு உதயாதியாகச் சென்றநாழிகையை அறியுமிடத்துக் குறித்ததினத்திற்(பஞ்சாங்கத்திலே)உதயாற்பர நாடி விநாடிகளையும், அதற்கடுத்தராசிமுதல் நட்சத்திர உச்சராசிக்கு முதலிராசிமுடிவாக உள்ள ராசிகளின் நாழிகை விநாடிகளையும நட்சத்திர உச்சராசியிற் சென்றநாழிகை விநாடிகளையுங் கிரமமாகக்கூட்ட உதயாதிநாழிகை வரும.

## உதாரணம்.

கீலக௵ சித்திரைமீ ௪ ந்தேதி சுவாதி நட்சத்திரம் உச்சம், மகரத்தில் ௪௫ நாழிகைசென்றது.

| | நாடி. | விநாடி. |
|---|---|---|
| மேடம.உதயாற்பரம | ௩ | ௫ |
| இடபமுதல் தனுவந்தம | ௩௧ | ௧௫ |
| மகரத்திற்சென்றது | ௪ | ௫௰ |
| உதயாதிநாழிகை | ௩௭ | ௨௮ |

## கிரக நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம்

| மேஷம் ச\|\| — | இடபம் ரு = | மிதுனம் ரு; ≡ |
|---|---|---|
| சூரியன் ... உச்சம் | சூரியன் ...... பகை | சூரியன் ..... பகை |
| சந்திரன் ... பகை | சந்திரன் ... உச்சம் | சந்திரன் ...... நட்பு |
| செவ்வாய் ... ஆட்சி | செவ்வாய் ... நட்பு | செவ்வாய் ... நட்பு |
| புதன் ......... நட்பு | புதன் ......... நட்பு | புதன் ... ... ஆட்சி |
| வியாழன் ... பகை | வியாழன் ... நட்பு | வியாழன் ... நட்பு |
| சுக்கிரன் ... நட்பு | சுக்கிரன் ... ஆட்சி | சுக்கிரன் ... நட்பு |
| சனி ... ... ... நீசம் | சனி ...... ... நட்பு | சனி ...... ... நட்பு |
| ராகுகேது ... பகை | ராகு கேது நீசம் | ராகு கேது ... நட்பு |

| கர்க்கடகம் ரு \| — | சிங்கம் ரு — | கன்னி ச\|\|; ≡ |
|---|---|---|
| சூரியன் ...... பகை | சூரியன் ... ஆட்சி | சூரியன் ...... பகை |
| சந்திரன் ... ஆட்சி | சந்திரன் ... பகை | சந்திரன் ... நட்பு |
| செவ்வாய் ... நீசம் | செவ்வாய் ... பகை | செவ்வாய் ... நட்பு |
| புதன் ... ... நட்பு | புதன் ... ... பகை | புதன் - ஆட் உச்சம் |
| வியாழன் ... உச்சம் | வியாழன் ... நட்பு | வியாழன் ... நட்பு |
| சுக்கிரன் ... பகை | சுக்கிரன் ... பகை | சுக்கிரன் ...... நீசம் |
| சனி ...... ... பகை | சனி ...... .. பகை | சனி ... ...... நட்பு |
| ராகு கேது ... பகை | ராகு கேது ... பகை | ராகுகேது ... நட்பு |

| துலாம் ரு = | விருச்சிகம் ரு \| = | தனுசு ரு = |
|---|---|---|
| சூரியன் ... நீசம் | சூரியன் ...... பகை | சூரியன் ...... நட்பு |
| சந்திரன் ... பகை | சந்திரன் ...... நீசம் | சந்திரன் ... நட்பு |
| செவ்வாய் ... நட்பு | செவ்வாய் ... ஆட்சி | செவ்வாய் ... பகை |
| புதன் ... ..... நட்பு | புதன் ... ... நட்பு | புதன் ...... ... நட்பு |
| வியாழன் . நட்பு | வியாழன் ... பகை | வியாழன் ... ஆட்சி |
| சுக்கிரன் ... ஆட்சி | சுக்கிரன் ... நட்பு | சுக்கிரன் ... நட்பு |
| சனி ... ... உச்சம் | சனி . ...... பகை | சனி ...... ... நட்பு |
| ராகு கேது ... நட்பு | ராகு கேது உச்சம் | ராகுகேது ... நட்பு |

| மகரம் ச\|\|= | கும்பம் ச\|= | மீனம் ச; |
|---|---|---|
| சூரியன் ...... பகை | சூரியன் ... பகை | சூரியன் ...... நட்பு |
| சந்திரன் ... பகை | சந்திரன் ... பகை | சந்திரன் ... நட்பு |
| செவ்வாய் .. உச்சம் | செவ்வாய் ... பகை | செவ்வாய் ... பகை |
| புதன் ... ... நட்பு | புதன் ......... நட்பு | புதன் ......... நீசம் |
| வியாழன் .. நீசம் | வியாழன் ... நட்பு | வியாழன் ... ஆட்சி |
| சுக்கிரன் ... நட்பு | சுக்கிரன் ... நட்பு | சுக்கிரன் ... உச்சம் |
| சனி ......... ஆட்சி | சனி ......... ஆட்சி | சனி ... ... ... நட்பு |
| ராகு கேது ... நட்பு | ராகு கேது பகை | ராகு கேது நட்பு |

## மூலத் திரிகோணம்.

சூரியனுக்கு......................சிங்கம்.
சந்திரனுக்கு......................இடபம்.
செவ்வாய்க்கு......................மேடம்.
புதனுக்கு......................கன்னி.
வியாழனுக்கு......................தனு.
சுக்கிரனுக்கு......................துலாம்.
சனிக்கு......................கும்பம்.

☞ இவை மூலத்திரிகோண ராசிகள்.

---

## கிரக மித்துரு.

சூரியனுக்கு மித்துரு க—வியாழன்.
சந்திரனுக்கு மித்துரு உ—புதன், வியாழன்.
செவ்வாய்க்கு மித்துரு உ—புதன், சுக்கிரன்.
புதனுக்கு மித்துரு ரு—சந்திரன், செவ்வாய், வியாழன், சுக்கிரன், சனி.
வியாழனுக்கு மித்துரு ரு—சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், சனி.
சுக்கிரனுக்கு மித்துரு ச—செவ்வாய், புதன், வியாழன், சனி.
சனிக்கு மித்துரு ங—புதன், வியாழன், சுக்கிரன்.

---

## கிரக சத்துரு.

சூரியனுக்கு சத்துரு ரு—சந்திரன், செவ்வாய், புதன், சுக்கிரன், சனி.
சந்திரனுக்கு சத்துரு ச—சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி.
செவ்வாய்க்கு சத்துரு ச—சூரியன், சந்திரன், வியாழன், சனி.
புதனுக்கு சத்துரு க—சூரியன்.
வியாழனுக்கு சத்துரு க—செவ்வாய்.

சுக்கிரனுக்கு சத்துரு உ—சூரியன், சந்திரன்
சனிக்கு சத்துரு ௩—சூரியன், சந்திரன், செவ்வாய்

---

## முதலாமத்தியாயம் முற்றிற்று.

---

# இரண்டாம் அத்தியாயம்.

---

## துவாதசலக்கினம்.

---

### க-வது உதய(ஜன்ம) லக்கினம்.

ஜாதகி எந்தமாதத்திலே எந்தத்தேதியிலே, எந்தநேரத்திலே ஜனனமென்றறிந்து அந்தத்தேதிக்குப்பஞ்சாங்கத்திலே சூரியோதய லக்கினத்தில் உதயாற்பர நாடி விநாடி எவ்வளவிருக்கின்றதென்றறிந்து சூரியோதயம் முதல் ஜாதகியின் ஜெனனகாலம் வரையுள்ளநாழிகையில் முதல் உதயாற்பரத்தையும் (உதயாற்பரம் ஒரு சூரியோதயம் முதல் மற்றச் சூரியோதயம்வரையும் ௬0 நாழிகைக்கே உள்ளதாதலால், உதயத்துக்குமேல் ௬0 நாழிகைவரை எந்தநேரத்திற் ஜனனமாயினும், உதயாற்பரத்தை முத்தொகைவினுக்கணிதப்படி பங்கிட்டுக் கழித்து) அதற்கடுத்தராசிகளின் நாழிகைகளையும் முறையே கழித்துக் கழிக்கப்படாமல் நின்றராசி எதுவோ அதுவே ஜன்மலக்கினமாகும்.

### உ வது ஹோராலக்கினம்.

உதயாதி ஜனனாந்தஞ் சென்றநாழிகையிலே உதயம்முதல் இராசியொன்றுக்கு உஇ நாழிகையாகக் கழித்து வந்தலக்கினம்.

இதை ஆணிராசிக்கு வலமாகவும், பெண்ணிராசிக்கு இடமாகவும் பார்க்கவும். ஆண்பெண்ணிராசிகளை ௬-ம் பக்கத்திற்காண்க.

## ௩ வது கடிகாலக்கினம்.

உதயாதி ஜனனாந்த நாழிகையை உதயமுதல் ராசியொன்றுக்கு நாழிகையொன்றாகக் கழித்துவந்த லக்கினம்.

இதை ஆணிராசிக்கு வலமாகவும், பெண்ணிராசிக்கு இடமாகவும் பார்க்கவும்.

## ௪ வது ஆரூடலக்கினம்.

லக்கினம் முதல் லக்கினாதிபதி நின்ற ராசிவரை எண்ணிக் கண்டதொகை எவ்வளவோ அதை லக்கினாதிபதி நின்றராசிமுதல் எண்ணிவந்த லக்கினம். லக்கினாதிபதி லக்கினத்திலாவது ஏழிலாவது நின்றால் நின்றராசியே லக்கினமாகும்.

## ௫ வது நட்சத்திரலக்கினம்.

ஜன்மநட்சத்திரத்திலே ஜெனனம்வரை எவ்வளவு நாழிகை சென்றதென்று கண்டு ராசியொன்றுக்கு ௫ நாழிகையாகக் கழித்து வந்தலக்கினம்.

## ௬ வது காரகலக்கினம்.

உதயநாழிகையை ராசியொன்றுக்கு ௫ நாழிகையாகக் கழித்து வந்ததொகையை, எந்தக் கிரகஸ்புடத்தில் அதிகபாகை இருக்கின்றதோ அந்தக் கிரகமிருக்கின்ற ராசிமுதலாக எண்ணிக்கண்ட லக்கினம்.

## ௭ வது ஆதேரிச லக்கினம்.

ஜன்மலக்கினத்துக்கு ஏழாமிலக்கினம்.

## ௮ வது ஆயுர் லக்கினம்.

உதயாதி ஜனனாந்தநாழிகையை ராசியொன்றுக்கு ௫ நாழிகையாகக் கழித்து வந்ததொகையைச் சந்திரன்நின்ற அம்சலக்கினமுதலாக எண்ணிக்கண்ட லக்கினம்.

### கூ வது திரேக்காண லக்கினம்.

லக்கினத்தை மூன்றுகூறுசெய்து, சரராசிக்கு க-ரு-கூ ஆகவும் ஸ்திரராசிக்கு கூ-க-ரு ஆகவும், உபயராசிக்கு ரு-கூ-க ஆகவும் எண்ணிக்கண்ட லக்கினம்.

சரராசி—மேஷம், கடகம், துலாம், மகரம்.

திரராசி—இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம்.

உபயராசி—மிதுனம், கன்னி, தனு, மீனம்.

### க0 வது அங்கிசலக்கினம்.

முன்சொன்ன காரகக்கிரகத்தின் துவாதசாம்ச லக்கினம்.

### கக வது நவாம்ச லக்கினம்.

லக்கினத்தை ஒன்பதுபாகஞ்செய்து எத்தனையாம்பக்கிற் செனனமோ அதை அந்தராசித் திரிகோணராசிபாதியாக எண்ணிக்கண்ட லக்கினம். இதைத் தசவர்க்கத்திலே நவாம்சவிதியில் விபரமாகக் காண்க

### கஉ வது—பாவலக்கினம்.

உதயாதி ஜெனனாந்த நாழிகையை ராசி ஒன்றுக்கு ரு நாழிகையாகக் கழித்து வந்ததொகையை மேஷமுதலாக எண்ணிக்கண்ட லக்கினம்.

---

## சந்திர கதி.

இதிற் சொல்லப்படுங் கிரமமாக கூ0 நாழிகையும், யாதாயினும் ஒரு நக்ஷத்திரத்தின் முதல்நாழிகை தொடக்கிக் கிரமமாக எண்ணிக்கண்டது நட்சத்திர கதியாம்.

ராசிக்கதியில் வரும்போது ஒருராசிக்குஐந்துகதியாகச் சந்திரன் நின்ற ராசிமுதல் இடபமிறுதியாக எண்ணிவந்த தொகையை உதய ராசிமுதலாகக் கழித்து வந்தது ராசிக்கதி.

க-தானச்சேதம்.
உ-தவஞ்செய்தல்.
௩-பரதாரபரிக்கிரகம்.
௪-களவைக்காண்குதல்.
௫-பாம்பினுற் கடிபடல். இவை மேஷத்தின் கூறு.
௬-சிங்காசனத்திருத்தல்.
௭-ராச்சியஞ்செய்தல்.
௮-ராஜசேர்வை.
௯-சத்துருவைச் சயித்தல்.
க0-சேனைத்தலைவனுக இருத்தல். இவை இடபத்தின்கூறு.
கக-பிராணனைவிடல்.
கஉ-தலைவெட்டுண்ணல்.
க௩-கால்வெட்டுண்ணல்.
க௪-கட்டுண்ணல்.
க௫-சரீரத்துக்குச் சேதம். இவை மிதுனத்தின்கூறு.
க௬-ராச்சியஞ் செதல்.
க௭-வேதாத்தியயனஞ்செய்தல்.
க௮-தியாகங்கொடுத்தல்.
க௯-தருமஞ்செய்தல்.
உ0- பலசாஸ்திரங்களை அப்பியாசித்தல். இவை கடகத்தின்கூறு.
உக-நல்லகுலத்திலே பிறத்தல்,
உஉ தனந்தேடல்.
உ௩ துலாக்கோல்கொண்டு நிறுத்தல்.
உ௪ வித்தையதிகரித்தல்.
உ௫ சத்துருவைச்செயித்தல். இவை சிங்கத்தின்கூறு.

உ௬ வெப்புநோய்கொள்ளல்,
உ௭ நிலைகுலைதல்.
உ௮ சத்துருக்களின்நாட்டை அழித்தல்.
உ௯ பரஸ்திரீகமனஞ்செய்தல். (று
௩0 சத்துருக்களின் தனத்தை அபகரித்தல். இவைகன்னியின் கூ
௩௧ சபையிலிருத்தல்,
௩௨ சத்துருவைச்செயித்தல்.
௩௩ மந்திரித்துவஞ்செய்தல்.
௩௪ தன்தேவியுடனே கூடுதல்.
௩௫ யானையேறல். இவை துலாத்தின்கூறு.
௩௬ மந்திரியாயிருத்தல்.
௩௭ யுத்தத்திலயபசெயப்படல்.
௩௮ பிரகாசமாயிருத்தல்.
௩௯ பிராமணபோசனஞ் செய்தல்.
௪0 அக்கினிகாரியஞ்செய்தல் இவை விருச்சிகத்தின்கூறு.
௪௧ பசியுண்டாதல்
௪௨ உண்ணுதல்
௪௩ தியாகமிடல்
௪௪ நரமாமிசம்புசித்தல்
௪௫ உதிரக்குடித்தல் இவை தனுவின்கூறு
௪௬ மனைவியைக்கைப்பிடித்தல்
௪௭ பந்துவிளையாடுதல்
௪௮ தூதுபோதல்
௪௯ ராச்சியஞ்செய்தல்
௫0 விசனப்படல் இவை மகரத்தின்கூறு
௫௧ சயனித்தல்
௫௨ அரசருடன்பகைத்தல்
௫௩ ராசசிநேகஞ்செய்தல்
௫௪ யோகாப்பியாசஞ்செய்தல்
௫௫ சன்னியாசியாயிருத்தல் இவை கும்பத்தின் கூறு
௫௬. அன்னம்புசித்தல்

௫௭ பாலன்னம்புசித்தல்
௫௮ பலரையுமுண்பித்தல்
௫௯ ஆடுதல்
௬௦ சுகாசனத்திருத்தல் இவை மீனத்தின்கூறு.

---

# அங்கநிலை.

---

## அங்கச்சூரியன்.

சூரியன் நின்ற நாள்முதலாக ஜனனநாள்வரை எண்ணி ௩ நாள் தலையில், பின் ௩ நாள் வாயில், பின் ௫ நாள் வயிற்றில், பின் ௮ நாள் கையில், பின் ௮ நாள் காலில், இந்தவிதமாகக் கணித்துவந்த நாள் தலையாகிற் பூவுலகத்துக்கு இராசாவாம். வாயாகில் வித்துவானாம். வயிறாகில் செல்வமுடையவனாம். கையாகில் திரவியவீனனாம். காலாகிற் சகல இடங்களிலும் யாசிப்பவனாம்.

## அங்கச்சந்திரன்

ஜென்மராசிமுதலாகப் பன்னிரண்டிராசிக்கும் தலை, தொடை, கணைக்கால், கால்கள், உச்சி, கண்கள், வாய், செவிகள், தோட்கள், கழுத்து, மார்பு, வயிறு, இப்பன்னிரண்டங்கமும் முறையே இன்பம், நற்காலம், சுகம், நோய், ஸ்திரீசேவை, துன்பம், உண்டி, இடர், இன்பம், பிரியம், இலாபம், நோய் இவையாம்.

## அங்கச்செவ்வாய்.

செவ்வாய் நின்ற நாள்முதல் தன்ஜெனனநாள்வரை முதல் ௩ நாள் அரை. பின் ௯ நாள் தொடை. பின் ௫ நாள் கால். பின் ௬ நாள் உச்சி. பின் ௧ நாள் கண். பின் ௨ நாள் வாய். பின் ௧ நாள் இருதோள். பின் ௪ நாள் வயிறு. பின் ௨ நாள் நெஞ்சு. இந்த ஒன்பது அங்கத்துக்கும் முறையே பலன்கள் மரணம், இடர், பொருட்சேதம், பொருட்பேறு, நோய், போகம், மகப்பேறு, இலாபம், நோய் இவைகளாம்.

## அங்கப் புதன்.

புதன் நின்றநாள்முதல் ஜென்மநாள்வரை, ௧ நாள் கால், பின் ௩ நாள் தொடை. பின் ௩ நாள் தலை. பின் ௨ நாள் வயிறு, பின் ௫ நாள் மார்பு. பின் ௩ நாள் தோள். பின் ௪ நாள் முகம். பின் ௬ நாள் உச்சி. இந்த எட்டங்கட்கும் முறையே பலன்கள் யாத்திரை, போகம், புத்திரப்பேறு, நோய், பகை, துன்பம், மரணம், நன்மை இவைகளாம்

## அங்கவியாழன்

வியாழன் நின்றநாள்முதல் ஜென்மநாள் வரை முதல் ௪ நாள் தலை. பின் ௪ நாள் தோள். பின் ௧ நாள் கழுத்து. பின் ௫ நாள் மார்பு. பின் ௯ நாள் கால். பின் ௫ நாள் வயிறு. பின் ௨ நாள் கண். இந்த ஏழங்கங்களுக்கும் முறையே பலன்கள் — போகம், உண்டி, செல்வம் பகை பீடை, இன்பம், சுகம் இவைகளாம்.

## அங்கவெள்ளி

மீனம் முதலாக வெள்ளிநின்ற ராசிநாள் வலநாளோ இடநாளோ வென்றறிந்து வலநாளாயின் வலப்புறத்திலுள்ள அங்கத்துக்கும் இடநாளாயின் இடப்புறத்திலுள்ள அங்கத்துக்கும்பலன் சொல்லுக.

| | |
|---|---|
| மீனம் | உச்சி. |
| மேடம் | கண், |
| இடபம் | வாய் |
| மிதுனம் | கழுத்து. |
| கர்க்கடகம் | தோள். |
| சிங்கம் | மார்பு. |
| கன்னி | வயிறு. |
| துலாம் | லிங்கம், |
| விருச்சிகம் | தொடை; |
| தனு | புறங்கால், |

மகரம் உள்ளங்கால்.
கும்பம் மேல்விரல்.

இவைகளில் வலப்புறம் நன்மை. இடப்புறந் தீமை. உச்சி மிக நன்மை.

வலநாள்—

அச்சுவினி பரணி கார்த்திகை புனர்பூசம் பூசம் ஆயிலியம் அத்தம் சித்திரை சுவாதி மூலம் பூராடம் உத்தராடம் பூரட்டாதி உத்தரட்டாதி ரேவதி இவைகள்.

இடநாள்—

ரோகிணி மிருகசீரிடம் திருவாதிரை மகம் பூரம் உத்தரம் விசாகம் அனுஷம் கேட்டை திருவோணம் அவிட்டம் சதயம் இவைகள்.

## அங்கச்சனி.

சனி நின்ற நாள்முதலாக ஜனனநாள்வரை முதல் ௧ நாள் வாய். பின் ௪ நாள் வலக்கை. பின் ௬ நாள் கால். பின் ௪ நாள் இடக்கை. பின் ௫ நாள் வயிறு. பின் ௩ நாள் உச்சி. பின் ௨ நாள் கண். பின் ௨ நாள் லிங்கம். இவ்வெட்டங்கத்துக்கும் பலன்கள் முறையே அழிவு, மரணம், வழிப்போக்கு, இடர், செல்வம், நன்மை, நன்று, தீமை இவைகளாம்.

---

## கிரகசமயம்

மேஷமுதல் ஜாதகலக்கினம்வரை எண்ணிய தொகையையும் லக்கினமுதல் அர்க்க அங்கச்சனி இருந்தராசிவரையும் எண்ணிய தொகையையும் பெருக்கி ௨௭-ல் கழித்தசேஷத்தையும் அவரவர்ஜென்ம சாவருஷத்தையும் பெருக்கி ௨௭-ல் கழித்தசேஷம் கிரகசமயம்.

௧-ஸ்நானஞ்செய்தல்-
௨.-அலங்காரஞ்செய்தல்.
௩.-விபூதி சந்தனமணிதல்.
௪-செபஞ்செய்தல்.
௫. சிவபூசைசெய்தல்.
௬- ஔபாசனாக்கினிகாரியஞ்செய்தல்.
௭-விஷ்ணுபூசைசெய்தல்.
௮- பிராமணபூசைசெய்தல்.
௯-நமஸ்காரஞ்செய்தல்.
௧௦-பிரதட்சணஞ்செய்தல்.
௧௧-வைசுவதேயஞ்செய்தல்.
௧௨-அதிதிபூசைசெய்தல்.
௧௩-போசனஞ்செய்தல்.
௧௪-புராணப்பிரசங்கஞ்செய்தல்.
௧௫-கோபங்கொள்ளுதல்,
௧௬- தாம்பூலமருந்தல்,
௧௭-இராசாங்கஞ்செய்தல்.
௧௮-கிரீடம்பூணல்
௧௯-சலபானஞ்செய்தல்
௨௦-ஆலிங்கனஞ்செய்தல்,
௨௧-சயனஞ்செய்தல்.
௨௨ அமுதபானஞ்செய்தல்
௨௩ மதனாலங்காரஞ்செய்தல்.
௨௪ லீலைசெய்தல்.
௨௫ போசனஞ்செய்தல்.
௨௬ நித்திரைசெய்தல்
௨௭ ரத்தினப்பரீட்சைசெய்தல்.

## கிரியாகெமனம்.

பாகை ௧க்கு ௧ கெமனமாக ஒற்றைராசிக்கு நேரும், இரட்டை ராசிக்கு மாறுகவும் கொள்க.

௧ நிர்ச்சலபோசனம்,
௨ அன்னதானம்,
௩ சயம்பாகம்.
௪ விருந்தூண்புசித்தல்,
௫ பரவீட்டிலன்னசிந்தை
௬ சகபோசனம்
௭ வாகனசஞ்சாரம்,
௮ அநேகவாகனம்
௯ தீர்த்தயாத்திரை
௧௦ தானப்பிரஷ்டம்
௧௧ மங்களயாத்திரை
௧௨ மண்டலாதிக்கம்
௧௩ சூலாதிக்கம்
௧௪ கிராமாதிக்கம்
௧௫ குடும்பாதிக்கம்
௧௬ பூர்வாதிக்கம்
௧௭ தேசாதிகாரம்
௧௮ களத்திரகோபம்
௧௯ தீர்க்கநித்திரை
௨௦ களத்திரமோகம்
௨௧ நிர்ச்சலநித்திரை.
௨௨ சயனப்பிரதாபம்
௨௩ பரதாரகெமனம்
௨௪ உத்றதுக்கம்
௨௫ பூமிகெமனம்

௨௬ வர்ச்சிதம்.
௨௭ ஆபத்துக்காலம்.
௨௮ ராஜதண்டனை.
௨௯ [illegible].
௩௦ தேகமெலிவு.

---

## கிரக அவஸ்தை.

லக்கினத்தை ஐந்தாகச் செய்து, ௧-க்கு வாலிபம், ௨-க்கு யௌவனம், ௩-க்கு கௌமாரம், ௪-க்கு விருத்தாப்பியம், ௫-க்கு மரணம், ஆனால் [illegible]க்கு வாலிபம் முதலாகவும், [illegible]ராசிக்கு இடமாகவும் பார்க்கவும், சனி ராகு கேது விருத்தாவஸ்தையும், சுக்கிரனுக்கு வாலிபமும் மரணமும் தவிர மற்ற அவஸ்தையும், புதனுக்கு மரணந்தவிர மற்ற அவஸ்தையும், சூரியனுக்கும் குருவுக்கும் மரணம் நீங்கிய மற்ற அவஸ்தையும் உத்தமம், சந்திரனுக்கு யௌவனமுத்தமம்; வாலிபமும் கௌமாரமும் மத்திமம்; மற்றவை ஆகா.

## முக்குண வேளை:

| நாடி. | ஞாயிறு, புதன். | திங்கள், வியாழன். | செவ்வாய், வெள்ளி. | நாடி | சனி. |
|---|---|---|---|---|---|
| ௩ ‖ | தாமதம் | சாத்விதம் | ராசதம் | ௪ ... .. | தாமதம் |
| ௭ ‖ | சாத்விதம் | ராசதம் | தாமதம் | ௮ ... .. | சாத்விதம் |
| ௧௧ \| | ராசதம் | தாமதம் | சாத்விதம் | ௧௨ ...... | ராசதம் |
| ௧௫ | தாமதம் | சாத்விதம் | ராசதம் | ௧௬ ..... | தாமதம் |
| ௧௮ ⁞ | சாத்விதம் | ராசதம் | தாமதம் | ௨௦ ...... | சாத்விதம் |
| ௨௨ ‖ | ராசதம் | தாமதம் | சாத்விதம் | ௨௪ ..... | ராசதம் |
| ௨௬ \| | தாமதம் | சாத்விதம் | ராசதம் | ௨௮ ..... | தாமதம் |
| ௩௦ | சாத்விதம் | ராசதம் | தாமதம் | ௩௨ ... | சாத்விதம் |
| ௩௩ ⁞ | ராசதம் | தாமதம் | சாத்விதம் | ௩௬ ... | ராசதம் |
| ௩௭ ‖ | தாமதம் | சாத்விதம் | ராசதம் | ௪௦ ..... | தாமதம் |
| ௪௧ \| | சாத்விதம் | ராசதம் | தாமதம் | ௪௪ ... . | சாத்விதம் |
| ௪௫ | ராசதம் | தாமதம் | சாத்விதம் | ௪௮ .. | ராசதம் |
| ௪௮ ⁞ | தாமதம் | சாத்விதம் | ராசதம் | ௫௨ ... | தாமதம் |
| ௫௨ ‖ | சாத்விதம் | ராசதம் | தாமதம் | ௫௬ .. | சாத்விதம் |
| ௫௬ \| | ராசதம் | தாமதம் | சாத்விதம் | ௬௦ ..... | ராசதம் |
| ௬௦ | தாமதம் | சாத்விதம் | ராசதம் | ... ..... | ..... ... |

## காலஹோரை.

| நாடி. | ஞாயிறு. | திங்கள். | செவ்வாய். | புதன். | வியாழன். | வெள்ளி. | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| ௨½ | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| ௫ | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு |
| ௭½ | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் |
| ௧௦ | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| ௧௨½ | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் |
| ௧௫ | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் |
| ௧௭½ | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| ௨௦ | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| ௨௨½ | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு |
| ௨௫ | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் |
| ௨௭½ | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| ௩௦ | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் |
| ௩௨½ | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் |
| ௩௫ | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| ௩௭½ | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| ௪௦ | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு |
| ௪௨½ | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் |
| ௪௫ | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| ௪௭½ | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் |
| ௫௦ | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் |
| ௫௨½ | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| ௫௫ | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| ௫௭½ | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் | புதன் | குரு |
| ௬௦ | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | குசன் |

## கேந்திராதி ஐந்துவித இடம்

௧......௪......௭......௧௦-ம் இடங்கள்..............கேந்திரம்
௨......௫......௮......௧௧-ம இடங்கள்..............பணபரம்
௩......௬......௯......௧௨ம்- இடங்கள்..............ஆபோக்கிலீபம்
௩......௬......௧௦ ... ௧௧ம் இடங்கள்.............. உபசயம
௧......௫......௯... ... ...ம இடங்கள்..............திரிகோணம.

## இரண்டாமத்தியாயம் முற்றிற்று.

---

வி சபாபதி ஐயர்.

---

# ௩-ம் அத்தியாயம்.

---

## சூரியன் அஷ்டவர்க்கம்,

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன்... | ௧ | ௨ | ௪ | ௭ | ௮ | ௯ | ௧௦ | ௧௧ |
| சந்திரன் | ௩ | ௬ | ௧௦ | ௧௧ | | | | |
| செவ்வாய்... | ௧ | ௨ | ௪ | ௭ | ௮ | ௯ | ௧௦ | ௧௧ |
| புதன்...... | ௩ | ௫ | ௬ | ௯ | ௧௦ | ௧௧ | ௧௨ | |
| வியாழன்... | ௫ | ௬ | ௯ | ௧௧ | | | | |
| சுக்கிரன்... | ௬ | ௭ | ௧௨ | | | | | |
| சனி... ... | ௧ | ௨ | ௪ | ௭ | ௮ | ௯ | ௧௦ | ௧௧ |
| லக்கினம்... | ௩ | ௪ | ௬ | ௧௦ | ௧௧ | ௧௨ | | |

ஆக ௪௮,

## சந்திரன் அஷ்டவர்க்கம

சூரியன்... ௩ ௬ ௭ ௮ ௧௦ ௧௧
சந்திரன்... ௧ ௩ ௬ ௭ ௯ ௧௦ ௧௧
செவ்வாய்... ௨ ௩ ௫ ௬ ௯ ௧௦ ௧௧
புதன் ... ௧ ௩ ௪ ௫ ௭ ௮ ௧௦ ௧௧
வியாழன்... ௧ ௨ ௪ ௭ ௮ ௧௦ ௧௧
சுக்கிரன்... ௩ ௪ ௫ ௭ ௯ ௧௦ ௧௧
சனி ... ௫ ௬ ௧௧
லக்கினம் ௩ ௬ ௧௦ ௧௧

ஆக—௪௯.

## செவ்வாய் அஷ்டவர்க்கம

சூரியன்... ௩ ௫ ௬ ௧௦ ௧௧
சந்திரன்... ௩ ௬ ௧௧
செவ்வாய்... ௧ ௨ ௪ ௭ ௮ ௧௦ ௧௧
புதன் ... ௩ ௫ ௬ ௧௧
வியாழன்... ௬ ௧௦ ௧௧ ௧௨
சுக்கிரன்.... ௬ ௮ ௧௧ ௧௨
சனி ... ௧ ௩ ௫ ௮ ௯ ௧௦ ௧௧
லக்கினம்... ௧ ௩ ௬ ௧௦ ௧௧

ஆக—௩௯.

## புதன் அஷ்டவர்க்கம்.

சூரியன்... ௫ ௬ ௯ ௧௧ ௧௨
சந்திரன் ....௨ ௪ ௬ ௮ ௧௦ ௧௧
செவ்வாய்... ௧ ௨ ௪ ௭ ௮ ௯ ௧௦ ௧௧
புதன் ... ௩ ௫ ௬ ௯ ௧௦ ௧௧ ௧௨
வியாழன்... ௬ ௮ ௧௧ ௧௨
சுக்கிரன் ௧ ௨ ௩ ௪ ௫ ௮ ௯ ௧௧
சனி ௧ ௨ ௪ ௭ ௮ ௯ ௧௦ ௧௧
லக்கினம் ௧ ௨ ௪ ௬ ௮ ௧௦ ௧௧

ஆக—௫௩.

## வியாழன் அஷ்டவர்க்கம

சூரியன்... ௧ ௨ ௩ ௪ ௭ ௮ ௯ ௧௦ ௧௧
சந்திரன்... ௨ ௫ ௭ ௯ ௧௧,
செவ்வாய்... ௧ ௨ ௪ ௭ ௮ ௧௦ ௧௧
புதன் ... ௧ ௨ ௪ ௫ ௬ ௯ ௧௦ ௧௧
வியாழன்... ௧ ௨ ௩ ௪ ௭ ௮ ௧௦ ௧௧
சுக்கிரன்... ௩ ௨ ௫ ௬ ௯ ௧௦ ௧௧
சனி ... ௩ ௫ ௬ ௧௨
லக்கினம் ௧ ௨ ௪ ௫ ௬ ௭ ௯ ௧௦ ௧௧

ஆக—௫௬.

## சுக்கிரன் அஷ்டவர்க்கம,

சூரியன்... ௮ ௧௧ ௧௨
சந்திரன்... ௧ ௨ ௩ ௪ ௫ ௮ ௯ ௧௧ ௧௨
செவ்வாய்... ௩ ௪ ௬ ௯ ௧௧ ௧௨
புதன் ... ௩ ௫ ௬ ௯ ௧௧
வியாழன்... ௫ ௮ ௯ ௧௧
சுக்கிரன்.... ௧ ௨ ௩ ௪ ௫ ௮ ௯ ௧௦ ௧௧
சனி ... ௩ ௪ ௫ ௮ ௯ ௧௦ ௧௧
லக்கினம... ௧ ௨ ௩ ௪ ௫ ௮ ௯ ௧௧

ஆக—௫௨.

## சனி அஷ்டவர்க்கம்

சூரியன்... ௧ ௨ ௪ ௭ ௮ ௧௦ ௧௧
சந்திரன் ....௩ ௬ ௧௧
செவ்வாய்...௩ ௫ ௬ ௧௦ ௧௧ ௧௨
புதன் ... ௬ ௮ ௯ ௧௦ ௧௧ ௧௨
வியாழன்... ௫ ௬ ௧௧ ௧௨
சுக்கிரன் ௬ ௧௧ ௧௨
சனி ௩ ௫ ௬ ௧௧
லக்கினம் ௧ ௩ ௪ ௬ ௧௦ ௧௧

ஆக—௩௯.

## திரிகோணசோதனை.

மேட சிங்க தனு, இடபகன்னியா மகரம், மிதுன துலா கும்பம் கடகவிருச்சிகா மீனம், என்று சொல்லப்படுந் திரிகோணராசி மூன்றினும் பரல் கணக்குத்தொகை சரியாக இருந்தால் மூன்றுராசியிலும் உள்ளவைகளை நீக்கவும். ஒருராசியிற் குறைந்தால் அப்படியே மற்றராசியிலுள்ளவைகளையும் சரியாகச்செய்யவும். ஒருராசி சூனியமாகவிருந்தால் சோதனையில்லை.

---

## ஏகாதிபத்திய சோதனை.

திரிகோணசோதனை செய்தபின்பு, மேட விருச்சிகம், இடப துலாம், மிதுனகன்னி, தனு மீனம், மகரகும்பம் என்னு மிராசிகளிற் கிரகமிருந்தராசியில் தொகை குறைந்தும் கிரகமில்லாதராசியில் தொகை அதிகமாகவு மிருந்தால் குறைந்தபடி மற்றதையும் சரியாகச் செய்யவும். சரியாக இருந்தாலும் கிரகமில்லாதராசியில் தொகை குறைந்தாலும் கிரகமில்லாத ராசியில் தொகையை நீக்கிவிடவும். இரண்டிராசியிலும் கிரகமில்லாமலிருக்கத் தொகை கூடியுங் குறைந்துமிருந்தால் குறைந்தபடி சரியாகச் செய்யவும். சரியாக விருந்தால் உ ராசியில் தொகையையும் நீக்கவும். இரண்டுராசியிலும் கிரகமிருந்து தொகை கூடியுங் குறைந்துமிருந்தாலும், சரியாக இருந்தாலும் ஒருராசியில் இல்லாதிருந்தாலும் இரண்டுராசியிலும் கிரகமில்லாமலிருக்க ஒருராசியில் இருந்தாலும் சோதனையில்லை. கிரகமிருந்தராசியில் தொகையில்லாமல் மற்றொன்றிலிருந்தால் அதை நீக்கவும்.

---

## இராசிக் குணகாரம்.

ஏகாதிபத்திய சோதனை ஆனபின் இருந்ததொகைப் பரலைப் பெருக்கும்விதம்:—இடபத்திலும் சிங்கத்திலும் இருந்ததொகையைக்

கூட்டிப் பத்திலும்,—மிதுனத்திலும் விருச்சிகத்திலும் இருந்ததொகையைக் கூட்டி எட்டிலும்,—மேஷத்திலும் துலாத்திலும் இருந்த தொகையைக் கூட்டி ஏழிலும்,—கன்னியிலும் மகரத்திலும் இருந்த தொகையைக் கூட்டி ஐந்திலும்,—கர்க்கடகத்தி லிருந்த தொகையை நான்கிலும்,—தனுசிலிருந்த தொகையை ஒன்பதிலும்,— கும்பத்திலிருந்ததொகையைப் பதினொன்றிலும்,—மீனத்திலிருந்ததொகையைப் பன்னிரெண்டிலும் பெருக்கி வைத்துக்கொள்வது ராசிக்குணகாரம்.

---

## கிரகக் குணகாரம்.

குரு இருந்த ராசித்தொகையைப் பத்திலும், செவ்வாயிருந்தராசித்தொகையை எட்டிலும், சுக்கிரனிருந்த ராசித்தொகையை ஏழிலும், சூரியன் சந்திரன் புதன் சனி இவர்களிருந்த ராசித் தொகையை ஐந்திலும் பெருக்கி வைத்திருப்பது கிரகக்குணகாரம்.

## குண சமூகம்.

ராசிக்குணகாரம், கிரகக்குணகாரம் இரண்டையும் ஒன்றாகக் கூட்டினதொகை குணசமூகம்.

---

## சர்வாஷ்டகவர்க்க பலன்.

சர்வாஷ்டகவர்க்க தொகை (௩௩௭) ல் லக்கினம் முதல் ௧௨-ம் இடம்வரை முறையே தேகம், குடும்பம், சகோதரர், மாதுரு, புத்திரர் சத்துரு, மனையாள், ஆயுள், பிதா, தொழில், லாபம், செலவு, இவைகளுக்குரிய தானங்களாதலால் லக்கினமுதலான ராசிகளில் ௩0க்கு மேலிருந்தால் அந்தந்த ஸ்தானாதிபதிகளுக்கு நல்லபலனும், ௩0க்குக் கீழிருந்தால் மத்திமபலனும், ௨0க்குக் கீழிருந்தால் அதமபலனுமாகும். இந்தவிதப்படியே அஷ்டவர்க்கபுள்ளி தொகையைக் கொண்டு யூகித்துப் பலனறியலாம்.

சூரியன் முதலான ஒவ்வொரு கிரகங்களின் அஷ்டவர்க்கத்திலும் ஒவ்வொரு ராசியிலும் மூன்றுபரலுக்குள்ளிருந்தால் அற்பபலன்; நாலிருந்தால் மத்திமபலன்; ஐந்துக்குமேல் எட்டுவரையிலும் விசேஷபலன்.

௧ இருந்தால் திரவியசேதம், ௨ இருந்தால் பீடை, ௩ இருந்தால் சஞ்சலம். ௪ இருந்தால் லட்சுமீகரம். ௫ இருந்தால் விவாகசித்தி. ௬ இருந்தால் திரவியலாபம். ௭ இருந்தால் ஐசுவரியம். ௮ இருந்தால் ராஜயோகம். தொகை குறைந்திருக்கிற ராசியிலும் பகை நீச ராசிகளிலும் சூரியன்வரும்போது தீமையும், தொகைகூடிய ராசியிற் சூரியன் வரும்போது லாபமுமுண்டாகும்.

லக்கினாதிபதி லக்கினத்திலாவது நாலு ஏழு பத்திலாவது ௫ பரலாயினும் அதற்குமேற்பட்ட பரலோடாயினும் இருக்கப்பெற்றால் அதிகலாபமுண்டாகும். சூரியன் நான்கு கிரகங்களோடுகூடி ௫ பரலோடாயினும் அதற்குமேற்பட்ட தொகையோடாயினும் இருப்பினும நட்பாட்சி உச்சம்பெற்ற கிரகங்கள் ௪ பரலுக்குமேல் லக்கினமுதலிய கேந்திரங்களிலிருப்பினும், ராஜயோகமுண்டாம்.

சூரியன் நின்ற ராசிக்கு ௯ம் ராசியிலுள்ள தொகை எவ்வளவோ அவை பிதாவின் சகோதரர். அவை ஆண்கிரகங்கொடுத்ததானால் ஆணும், பெண்கிரகங்கொடுத்ததானால் பெண்ணுமாகும்.

ஆண் பெண் அலிக்கிரகத்தை ௯ம் பக்கத்திற்காண்க.

---

## கந்தாயம்.

சர்வாஷ்டகவர்க்கத்தில் லக்கினமுதல் ௪ ராசிப்பரலை ஒன்றாகக் கூட்டியதொகை முதற்கந்தாயம். ௫ம் ராசிமுதல் ௪ ராசிப்பரலை ஒன்றாகக் கூட்டியதொகை இரண்டாங்கந்தாயம். ௯ம் ராசிமுதல் ௪ ராசிப்பரலை ஒன்றாகக்கூட்டியதொகை மூன்றாங்கந்தாயம். இந்தமூ

ன்றுகந்தாயங்களையும் பிரதமகண்டம், துதியகண்டம், திருதியகண்டமென்று சொல்வதுமுண்டு.

மூதற்கந்தாயத்திலுள்ளதொகை அதிகமானால் பால்யத்திலும், இரண்டாங்கந்தாயத்திலுள்ள தொகை அதிகமானால் யௌவனத்திலும், மூன்றாங்கந்தாயத்திலுள்ள தொகை அதிகமானால் வயோசத்திலும் சகலவிதயோகமும் இலாபமுமுண்டாகும். பால்யத்தில் உண்டாகும் யோகம் ௧௬ வயசுக்குள் ப்ரபலமுண்டாகுமென்பது விதி. இன்னும் பகல்விழிப்பு ராசித்தொகை அதிகமானால் பகலிலும், இராவிழிப்பு ராசித்தொகை அதிகமானால் இரவிலும் சுகமுஞ் சந்தோஷமுமுண்டாகும்.

---

## இராசிகளிலுங் கிரகங்களிலும் பகலில்விழிப்பன, இரவில்விழிப்பன, எப்பொழுதும்விழிப்பன.

மிதுனம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், இவை பகலில் விழிப்பனவும் தலையாலுதிப்பனவுமாம்.

மேஷம், ரிஷபம், கடகம், தனு மகரம் இவை இரவில் விழிப்பனவும் காலாலுதிப்பனவுமாம்.

மீனம் எப்போதும் விழிப்பதுந் தலை கால் என்னு மிருபுறத்தாலுமுதிப்பதுமாகும்.

புதன், குரு, சுக்கிரன், ராகு நால்வரும் பகலில்விழிப்பவர்களும் சிரோதயகோட்களுமாம்.

சூரியன் செவ்வாய் சனி மூவரும் இரவில் விழிப்பவர்களும் பிருட்டோதய கோட்களுமாம்.

சந்திரன் கேது இருவரும் எப்பொழுதும் விழிப்பவர்களுஞ் சிரப்பிருட்டோதய கோட்களுமாம்.

## திக்குவிந்து.

சர்வாஷ்டகவர்க்கத்தில் மேடமுதல் மூன்றிராசித்தொகையைக் கூட்டியது கிழக்குவிந்து. கர்க்கடகமுதல் மூன்றிராசித்தொகையைக் கூட்டியது தெற்குவிந்து. துலாம் முதல் மூன்றிராசித்தொகையைக்கூட்டியது மேற்குவிந்து. மகரம் முதல் மூன்றிராசித்தொகையைக்கூட்டியது வடக்குவிந்து.

எந்தத் திக்கில் தொகை அதிகமிருக்கிறதோ அந்தத்திக்கிலிருந்து சகலகாரியத்திற்கு மதிக விசேஷித்த பலனுண்டாகும். ௧௧ம் இடத்து விந்து அதிகமாகவும், ௧௦ம ௧௧ம் இடங்களின் விந்து (அதிலும்) குறைந்திருந்தால் ராஜயோகமுண்டாகும், ௧௧—மிடம் விந்து குறைந்தும ௧௨—மிடம் விந்து அதிகமாகவுமிருந்தால் வரவுக்குமிஞ்சிய செலவுண்டாகும். ௧௦—மிடத்தில் குறைந்தும், ௧௨—மிடத்தி லதிகமுமிருந்தால் செய்தொழில் விருத்தியாகாமலும், செய்தொழிலாற்பலனில்லாமலுமிருக்கும். எடுத்தகாரியம் முடியாது. ௩-மிடத்திற் குறைந்தும், ௪—மிடத்திற் கூடியுமிருந்தால் சுகங் கூடுதலாகவுந் துக்கங்குறைவாகவுமிருக்கும். ௧௧-மிடத்திலும் ௧௨—மிடத்திலுங் குறைந்து ௧௦ல் அதிகமாயிருந்தால் ராஜயோகமுண்டாகும்.

---

## சூரியன் அஷ்டவர்க்கபலன்.

ஜன்ம லக்கினத்திலும் சந்திரலக்கினத்திலும் பரல் தொகை குறைந்திருப்பினும சூரியனீசமடைந்தும பங்கமாயிருப்பினும் பிதாவுக்குப்பீடையுண்டு. ௫ம் ௯-ம ராசிகளில் ௬க்குக் குறைந்த தொகையோடுசூரியனிருப்பினும, ௨-௫ல் குரூரரோடு சூரியனிருக்க ௯ல் ராகு இருப்பினும பிதாவுக்கு ௫ வருஷ வரைபீடை யுண்டாகும். குறைந்தபரலோடு ௫-ல் சூரியன், சந்திரன், செவவாய், சனி, இவர்களிருப்பின் பிதா மாதாசகோதரருக்கு அரிஷ்ட முண்டாம. பிதாவின் ஜன்மலக்கினத்திபதி உதயத்திலிருக்க அதுவே லக்கினமாகப் பிறப்பினும

பிதாவின் ஜன்மராசிக்கு இரண்டாமிடத்ததிபதி சந்திரனுடனே கூடியிருப்பினும் அல்லது ௯-ம இடத்திலாயினும் இருப்பினும் பிதாவின் அந்தியகாலத்திலே சமீபத்திலிருந்து பிதிர்காரியஞ் செய்வன், பிதாவின் பாக்கியங்களையும் அனுபவிப்பன். பிதாவின் லக்கினத்துக்கு ௯-ம ராசியிற்செனித்தால் பிதாவுக்குச் சமமான கீர்த்தியை அடைவன். பிதாவின் ௯-ம இடத்ததிபதி இவன் பிறந்த லக்கினத்திலிருந்தால் பிதாவினும் மேலிதத்தாலும் விசேஷத்தனுமாவான். பிதிர்த்தானாதிபதி லக்கினத்தைப் பார்த்தால் வம்சம விருத்தியாகும பிதாவினும் பிரபலனாவான்.

சூரியன் நின்றராசிக்கு ௯-ம ராசியிலுள்ள பரலின் தொகையை சோத்திய சேஷத்தினாற்பெருக்கி உ௭—ல் பிரித்து வந்த சேஷம எத்தனையென்றுகண்டு, பூர்வ பட்ச ஜாதகமாயின் அசுவினி முதலாகவும், அபரபட்ச ஜாதகமாயின் அவிட்டம்முதலாகவுமெண்ணிவந்த நக்ஷத்திரத்திலாவது அதற்குத் திரிகோணராசியிலாவது குருவருங்காலம பிதாவுக்குச் சுபமும சனி வருங்காலம பிதாவுக்கு [illegible]மாகும.

---

## சந்திரன் அஷ்டவர்க்க பலன்.

சந்திரன் நின்றராசிக்கு நான்காமிராசியிலுள்ள பரல்த்தொகை எவ்வளவோ அவ்வளவு மாதாவின் சகோதரர். இதுவும முன்சொல்லிய படியே ஆண் கிரகம கொடுத்த விந்தும பெண்கிரகம கொடுத்த விந்துமறிந்து ஆண் பெண் நிச்சயிக்கவும். லக்கினத்துக்கு நான்காமிராசியிலுள்ள பரலைக்கொண்டு அறிவதுமொன்று. ஜென்மலக்கினத்திலும் சந்திரலக்கினத்திலும் பரல் அதிகமாகவிருந்து அவற்றிற் சுபக்கிரகமிருப்பினும் பார்ப்பினும் மாதாவுக்கு அதிகசுகமும், தீர்க்காயுளுமுண்டாம். சந்திரன் நின்றராசிக்கு நான்காமிராசியிலுள்ள பரலின்தொகையைத் சோத்தியசேஷத்தாற் பெருக்கி உ௭-ற் கழித்தசேஷமெத்தனையென்று கண்டு, பூர்வபட்சமாயின் அசுவினிமுதலாகவும், அபர

பட்சமாயின் அவிட்டமுதலாகவுமெண்ணி வந்த நட்சத்திரத்திலாவது அதற்குத் திரிகோணராசியிலாவது குருவருங்காலம் மாதாவுக்கு அதிகசுகமுஞ் சனிவரில் மாதாவுக்கு நிரியாணமுமுண்டாம்.

---

## செவ்வாய் அஷ்டவர்க்கபலன்.

செவ்வாய் நின்றராசிக்கு மூன்றாமிராசியில் எவ்வளவு பரலென்று கண்டு இளையசகோதரர்களை நிச்சயிக்கவும். இதையும் முன்போலவே ஆண்கிரகங் கொடுத்த விந்துவையும் பெண்கிரகங் கொடுத்த விந்துவையும் அறிந்து ஆண் பெண் இத்தனையென்று தெரியவேண்டியது. செவ்வாய்நின்ற ராசியின் மூன்றாமிராசிப்பரல் தொகையை சோத்தியசேஷத்தாற்பெருக்கி ௨௭-ற் கழித்து வந்ததை பூர்வபட்சமாயின் அசுவினிமுதலாகவும், அபரபட்சமாயின் அவிட்டமுதலாகவும் எண்ணிவந்த நட்சத்திரத்திலும் அதன் திரிகோணராசியிலும் குருவருங்காலம் சகோதரபலனும்; இதிற் சனிவரில் சகோதரபீடையுமுண்டாம்.

செவ்வாய் நின்றராசிக்கு எட்டாமிராசிக்கதிபதி உச்சம்பெற்று அதிகபெலனோடிருப்பின் சகோதரருக்குத் தீர்க்காயுளும் தனக்குப் பூமிலாபந் தானியலாபம் கிருஷிமேன்மேலும் பலித்து விருத்தியடைதலுமாகும். எட்டாமிராசிக்கதிபதியுஞ் செவ்வாயும் பகை நீசமுமாயில் சகோதர ஒற்றுமையின்மையும் பீடையும் கிருஷிபலிதமாகாமையுமாம்.

---

## புதன் அஷ்டவர்க்கபலன்.

புதன் லக்கினம் ௪—௭—௧௦ என்னும கேந்திரத்தானங்களிலாவது ௫—௯ என்னுந் திரிகோண ஸ்தானங்களிலாவது ௫ பரலோடாயினும அதற்குமேற்பட்ட பரல்களோடாயினும் இருக்கக் குருபார்த்தால் நல்ல கல்வியுண்டு. இரண்டாமிடத்துக்கதிபதி ௫ பரலோடு நீசமடையாமலும் சஷ்டாஷ்டமங்களல்லாத இடங்களிலி

ருப்பின் கணிதம் சில்ப்பம் முதலியகல்வி வரும். புதனிருக்கும் ராசிக்கதிபதி சுபக்கிரகமாய் இபரலுக்குமேலிருந்தால் வித்துவானும்.

புதனிருந்தராசிக்கு நஂஙகாமிராசிப் பரலைச் சோத்தியசேஷத்தாற் பெருக்கி உஎ—ற் கழித்துவந்தது பூர்வபட்சமாயின் அசுவினிமுதலாகவும், அபரபட்சமாயின் அவிட்டம் முதலாகவு மெண்ணிவந்த நட்சத்திரத்திலாவது அதற்குத் திரிகோண ராசியிலாவது சனிவரில் தாயின் சகோதரரான மாதுலர்க்குப் பீடையுண்டாம்.

---

## வியாழன் அஷ்டவர்க்க பலன்.

குரு இருந்தராசிக்கு ஐந்தாமிராசிப் பரல் எத்தனையோ அத்தனை புத்திரருண்டு. ஆண்கிரகங் கொடுத்த பரல் ஆணுகவும், பெண்கிரகங் கொடுத்தபரல் பெண்ணுகவு மிருக்கும். ஜென்மலக்கினத்துக்கு ருஂ இடத்திலிருக்கும் பரலின்கணக்காலுஞ் சொல்வதுமுண்டு. நவக்கிரகங்களுள்ளும் குரு பெலமாக இருந்தால் பாக்கியமுந் தீர்க்காயுளு முள்ள புத்திரருண்டாம். லக்கினத்திலும் ருஂ—மி—த்திலும் பாபக்கிரக மிருந்து அதற்கு மேற்பட்ட பெலமுள்ள சுபக்கிரகத்தின் பார்வையேனுமில்லாதிருப்பின் புத்திரஹானியுண்டாகும். லக்கினத்துக்கு ருஂ—ல மூன்றுபரலிருந்தால் அற்பபுத்திரயோகம். ருஂ—க்கு மேற்படில் அநேக புத்திரருண்டு. சோதித்தபின் இருக்கும் பரலின் தொகையைக் கொண்டு பார்ப்பதே விசேஷமாகும்.

குரு இருந்தராசிக்கு ஐந்தாமிராசிப்பரலைச் சோத்தியசேஷத்தாற்பெருக்கி உஎ—ல் கழித்து வந்தது பூர்வபட்சமாயின் அசுவினிமுதலாகவும், அபரபட்சமாயின் அவிட்டம் முதலாகவும் எண்ணிவந்த நட்சத்திரத்திலும் அதன் திரிகோண ராசியிலும் குரு வருங்காலம் புத்திரருண்டு, சனிவரும்போது பீடையுண்டாம்.

---

## சுக்கிரன் அஷ்டவர்க்கபலன்.

சுக்கிரனிருக்கும் ராசிக்கு ஏழாமிராசிப் பரல் எவ்வளவோ அவ்வளவு ஸ்திரீகளுண்டாம். அது சூரியன் கொடுத்ததாயின் பிதிர்வர்க்கத்திலும், சந்திரன் கொடுத்ததாயின் மாதுருவர்க்கத்திலும், சனி செவ்வாய் கொடுத்ததாயின் அன்னியவர்க்கத்திலும் களத்திரமுண்டாம். இது சோதித்தபின் நின்ற பரலாலறிவது விசேஷம்.

சுக்கிரன் இருந்தராசிக்கு ஏழாமிராசிக்கதிபதி எந்தராசியிலிருந்ததோ அந்தராசியில் அவனுடைய ஸ்திரீ ஜெனனமாவள். அந்த ஸ்திரீக்கு இவன் புருஷனுகில் பிரபல ராஜயோகமுள்ளவனாவன். அந்த ஸ்திரீக்கு பெண்பிரஜை குறையும். சுக்கிரன் ஏழாமிடத்திலே பாபக்கிரகங்களோடு கூடி விந்து குறையப்பெற்று இருந்தால் புருஷனுடு இஷ்டமாக இருந்து அவனுக்குத் தீமைசெய்வள்.

லக்கினத்துக்கு ஏழில் சுக்கிரனிருந்தால் ரூபகளத்திரம். சனியிருந்தால் ரோககளத்திரம். புதனிருந்தால் களத்திரவீனம். ரவி குசனிருந்தால் காந்தருவகளத்திரமாம். சுக்கிரனிருந்தராசிக்கு ஏழாமிடத்திலிருந்த பரலின்தொகையைச் சோத்தியசேஷத்தாற்பெருக்கி உஎ-ற் கழித்து வந்ததைப் பூர்வபட்சமாயின் அசுவினி முதலாகவும், அபரபட்சமாயின் அவிட்ட முதலாகவும் எண்ணி வந்த நட்சத்திரத்திலாயினும், அதன் திரிகோணராசியிலாயினும் குருவாரில் களத்திரபலனும் சனிவாரிற் களத்திரபீடையுமுண்டாம்.

---

## சனி அஷ்டவர்க்கபலன்.

சனி அஷ்டவாக்கத்தில் லக்கினம் முதல் சனி நின்றராசிவரை எத்தனை பரலிருந்ததோ அத்தனையாவது வருஷத்தில் தத்து உண்டாகும். சனி நின்ற ராசிமுதல் லக்கினம வரையுள்ள பரல் தொகை எவ்வளவோ அத்தனையாவது வருஷத்தில் திரவியசேதமுண்டாகும், தேகபீடையுஞ் சம்பவிக்கும். சனிநின்ற ராசிக்கு எட்டா மிராசிப் பரலி

ன் தொகையைச் சோத்தியசேஷத்தினும் பெருக்கி ௨௭—ற் கழித்து வந்ததைப் பூர்வபட்சமாகுல் அசுவினிமுதலாகவும், அபரபட்சமாகுல் அவிட்டம் முதலாகவு மெண்ணி வந்த நட்சத்திரத்திலும் அதன் திரிகோணராசியிலுங் குருவரிற் சுகமும், சனிவரில் நிரியாணமுமுண்டாம்.

---

## அஷ்டவர்க்க பரமாயு.

குணசமூகத்தை ௭-ல் பெருக்கி ௨௭-ல் பிரித்துவந்தது வருஷம். சேஷத்தை ௧௨-ல் பெருக்கி ௨௭-ல் பிரித்துவந்தது மாதம். சேஷத்தை ௩௰-ல் பெருக்கி ௨௭-ற் பிரித்துவந்தது நாள். சேஷத்தை ௬௰-ல் பெருக்கி ௨௭ ல் பிரித்துவந்தது நாழிகை. இந்தவிதமாகவே எல்லாக்கிரகங்களின் அஷ்டவர்க்கத்திலுங் கணக்கிட்டு வந்த தொகையை ஒன்றாகக் கூட்டி அதிலே வருஷம் ஒன்றுக்கு ௩.௬ நாளும், மாதமொன்றுக்கு ௩ நாளும், நாள் ஒன்றுக்கு ௬ நாழிகையும, நாழிகையொன்றுக்கு ௬ விநாழியுமாகக் கழித்து வந்ததில் நீசாஸ்தமனக் கிரகங் கொடுத்தால் பாதியும், பகை நீசக்கிரகங் கொடுத்தால் மூன்றிலொன்றும் கழித்து வந்ததுடனே கட்பு ஆட்சி மூலத்திரிகோணங்களி லிருக்குங் கிரகங்கள் கொடுத்ததை இரட்டித்தும் இவற்றையெல்லா மொன்றாய்க் கூட்டிக் கண்டது ஜாதகற்குத் துலபரமாயுவாம். இது சிலநூல்களில் அர்ப்பபேதமாகவுமுள்ளது.

---

மூன்றுமத்தியாயம் முற்றிற்று.

---

வி. சபாபதி ஐயர்.

---

# ச ம் அத்தியாயம்.

## தசவர்க்கம்.

௬௰ விகலை ஒரு கலை.
௬௰ கலை ஒரு பாகை.
௩௰ பாகை ஒரு ராசி.
௧௨ ராசி ஒரு பகணம்.

ஒவ்வொரு ராசிகளிலும் கிரகங்கள் நிற்கும் நிலையைப் பத்துவித அளவைகளால் நிதானித்து அறிந்து கிரகங்களுக்குள்ள பெலனையறிவது தசவர்க்கமாகும்.

### ௧—ஹோரா.

௧—வது கிரகமிருந்த இடம் (இங்கே) ராசி அல்லது லக்கினம்.

### ௨—கோட்கூறு.

௨—வது கிரகமிருந்தராசியை இரண்டுகூறு செய்தது கோட்கூறு. ஆணிராசிக்கு முதற்கூறு சூரியன்; இரண்டாங்கூறு சந்திரன். பெண்ணிராசிக்கு முதற்கூறு சந்திரன்; இரண்டாங்கூறு சூரியனுமாவரும்

(மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனு கும்பம் இவை ஆறும் ஆணிராசி. இடபம், கர்க்கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இவை ௬-ம் பெண்ணிராசி)

### ௩—திரேக்காணம்.

௩—வது கிரகமிருந்தராசியை மூன்றுகூறு செய்தது திரேக்காணம், ௧௰ பாகைக்குள் அந்தலக்கினமாகவும், ௨௰ பாகைக்குள் அதிலிருந்து ஐந்தாமிராசியாகவும் ௩௰ பாகைக்குள் ஒன்பதாமிராசியாகவும் காண்க.

## ௪—திரிம்சாம்சம்.

௪—வது-கிரகமிருக்கும் ராசியை ௩௰ கூறுசெய்தது திரிம்சாம்சம். ஆணிராசிக்கு முதலைந்து பாகைக்குட் செவ்வாயாகவும், ௰ பாகைக்குட் சனியாகவும், ௧௮ பாகைக்குட் குருவாகவும், ௨௫ பாகைக்குட் புதனாகவும், ௩௰ பாகைக்குட் சுக்கிரனாகவும், பெண்ணிராசிக்கு ௫ பாகைக்குட் சுக்கிரனாகவும், ௰ பாகைக்குட் புதனாகவும், ௧௮ பாகைக்குட் குருவாகவும், ௨௫ பாகைக்குட் சனியாகவும், ௩௰ பாகைக்குட் செவ்வாயாகவுங் காண்க.

## ௫—ஸப்தாம்சம்.

௫—வது. கிரகமிருந்த ராசியை ஏழுகூறுசெய்தது ஸப்தாம்சம். ஆணிராசிக்கு லக்கினமுதல் நேராகவும், பெண்ணிராசிக்கு ஏழாமிடம் முதலாகவும் அறிக.

(இதன் விபரம்.)

| | பாகை | கலை | விகலை |
|---|---|---|---|
| ௧—வது | ௪ | ௰௭ | ௮ |
| ௨—வது | ௮ | ௩௪ | ௰௭ |
| ௩—வது | ௰௨ | ௫௧ | ௨௫ |
| ௪—வது | ௰௭ | ௮ | ௩௪ |
| ௫—வது | ௨௧ | ௨௫ | ௪௨ |
| ௬—வது | ௨௫ | ௪௨ | ௫௧ |
| ௭—வது | ௩௰ | ௦ | ௦ |

## ௬—நவாம்சம்.

௬—வது-கிரகமிருந்த ராசியை ஒன்பதுகூறுசெய்தது நவாம்சம். ராசியை ஒன்பதுகூறுசெய்து மேட சிங்க தனுவில ஜனனமானால் மேட

முதலாகவும், இடப கன்னி மகரத்திற் ஜெனனமானால் மகரமுதலாகவும், மிதுன துலா கும்பத்திற் ஜென்னமானால் துலாமுதலாகவும், கடக விருச்சிக மீனத்திற் ஜெனனமானால் கடகமுதலாகவும், லக்கினமமைத்துக்கொண்டு, அச்சுவினி முதற்பாத முதல் மூன்று நட்சத்திரம் பன்னிரண்டு ராசியாக அந்தந்தப் பாதத்திலே நிற்கும் கிரகத்தை அதற்குரிய ராசிகளிலே அமைத்துக்கொள்க.

### ௭—தசாம்சம்.

௭—வது கிரகமிருந்தராசியைப் பத்துக்கூறு செய்தது தசாம்சம்.

### ௮—துவாதசாம்சம்.

௮—வது கிரகமிருந்தராசியைப் பன்னிரண்டுகூறுசெய்தது துவாதசாம்சம்.

ராசியொன்றுக்குப் பாகை ௨½ விதம் ஆணிராசிக்கும் பெண்ணிராசிக்கும் லக்கினமுதல் கிரமமாக அறிக.

### ௯—ஷோடசாம்சம்

௯—வது-கிரகமிருந்தராசியைப் பதினாறுகூறுசெய்தது ஷோடசாம்சம். (இதைக் கலாம்சமென்று சொல்வதுமுண்டு.)

பங்கொன்றுக்கு பாகையொன்றும் கலை ௫௨½ யுமாக ஆணிராசிக்கு சிக்கு மேஷமுதலாகப் பன்னிரண்டிராசியும் எண்ணிப் பின்பு பிரமன், மாயோன், உருத்திரன், இரவிவரை ௪௯ ஆகவும், பெண்ணிராசிக்கு இரவி, உருத்திரன், மாயோன், பிரமன் என மேஷமவரை இடமாகவும் அறிக.

| | பாகை. | கலை. |
|---|---|---|
| ௧ | ௧ | ௫௨½ |
| ௨ | ௩ | ௪௫ |
| ௩ | ௫ | ௩௭½ |
| ௪ | ௭ | ௩0 |
| ௫ | ௯ | ௨௨½ |

| பாகை | கலை |
|---|---|
| ௬ ......... ௧௧ | ௧௫ |
| ௭ ......... ௧௩ | ௭இ |
| ௮ ......... ௧௫ | ௦ |
| ௯ ......... ௧௬ | ௫௨இ |
| ௧௦ ......... ௧௮ | ௪௫ |
| ௧௧ ......... ௨௦ | ௩௭இ |
| ௧௨ ......... ௨௨ | ௩௦ |
| ௧௩ ......... ௨௪ | ௨௨இ |
| ௧௪ ......... ௨௬ | ௧௫ |
| ௧௫ ......... ௨௮ | ௭இ |
| ௧௬ ......... ௩௦ | ௦ |

## ௧௦—ஷஷ்டியாம்சம்

௧௦—வது கிரகமிருந்தராசியை அறுபதுகூறு செய்தது ஷஷ்டியாம்சம். ஆணிராசிக்கு முதலிலிருந்து கிரமமாகவும், பெண்ணிராசிக்குக் கடைசியிலிருந்து முதல்வரையும் பங்கொன்றுக்கு ௩௦ கலைவீதம் அறிக. கலை ௩௦ கொண்டது ௧ பாகை.

௧—கோரம்.
௨—இராக்கதம்.
௩—தேவபாகம்,
௪—குபேரம்.
௫—ராட்சதபோகம்.
௬—கின்னரம்.
௭—இஷ்டகுள்போகம்.
௮—குலதிலகம்.
௯—விஷம்.
௧௦—அகளங்கம்,
௧௧—மாயாந்தகம்
௧௨—பிரேதபுரி.
௧௩—அதிதெய்வம்.
௧௪—கணேசம்.
௧௫—ஈசுரபாகம்.

௧௬—காலபாகம்
௧௭—அக்கினிபாகம்
௧௮—அபிராமம்.
௧௯—சந்திரம்
௨0—கோபாலம்
௨௧—பிரபலம்.
௨௨—பதுமம்.
௨௩—இலட்சுமி.
௨௪—வாகீசம்.
௨௫—நாகபாசம்.
௨௬—தேவேந்திரம்
௨௭—கவிதை
௨௮—நாசபாகம்
௨௯—பூபதி
௩0—கமலாகரம்
௩௧—காரகுளிகன்
௩௨—மந்தாந்திரியம்.
௩௩—அமிருத்து
௩௪—காலமிருத்து.
௩௫—தபாக்கினி
௩௬—அமிர்தபூரணம்
௩௭—பூரணசந்திரம்
௩௮—அபசம
௩௯—ஞேதிர்தம
௪0—விஷப்பிரீதி
௪௧—குலநாசம்
௪௨—வெகுமானம்
௪௩—வம்சக்ஷயம்
௪௪—உற்பாதம்
௪௫—சௌரியம்
௪௬—காளரூபம்
௪௭—சுசீதனம
௪௮—மிருத்துவம்
௪௯—திவாமதி
௫0—சந்திரமுகம்
௫௧—பிரதட்சணம்
௫௨—பிரவீணம்

ருங—காலாக்கினி
ருச—தண்டாயுதம்.
ருரு—விமலம்.
ருசு—சுகம்.
ருஎ—அதீதம்.
ருஅ—சுபதாவத்திரம்.
ருகூ—பிரமாணம்.
சுo—சந்திரரேகை.

---

## தசவர்க்க அம்சம்.

இந்தத் தசவர்க்கங்களாலும், ஒவ்வொருகிரகங்களும் நின்றராசிகளின் *நட்பு, ஆட்சி, உச்சம், பகை நீசங்களாலும் ○மூலத்திரிகோணம், §வர்க்கோத்தமம் முதலியவைகளாலும் ஒவ்வொருகிரகத்துக்கும் எவ்வளவுபங்கு பெலன் உண்டாயிற்றென்று நிச்சயித்துக்(குறித்து) கொண்டு பின்பு தேவாம்சமறிதல்வேண்டும்.

தசவர்க்கங்களிலே ஆதித்தியாதி கிரகங்கள் ஒவ்வொன்றுக்கும் பாபவர்க்கம் எவ்வளவென்றும், சுபவர்க்கமெவ்வளவென்றுங் கண்டு,

க சுபவர்க்கம்மாத்திரமேறினால்—நிஷ்பலம்.
உ சுபவர்க்கமேறினால்—பாரிசாதாங்கிஷம்.
ங சுபவர்க்கமேறினால்—உத்தமாங்கிஷம்.
ச சுபவர்க்கமேறினால்—கோபுராங்கிஷம்.
ரு சுபவர்க்கமேறினால்—சிங்காசனாங்கிஷம்.
சு சுபவர்க்கமேறினால்—பாராவதாங்கிஷம்.
எ சுபவர்க்கமேறினால்—தேவலோகாங்கிஷம்.
அ சுபவர்க்கமேறினால்—வைசேஷிகாங்கிஷம்.

* உக ம் பக்கத்திலும், ○ உஉம் பக்கத்திலும், § சு ம் பக்கத்திலும் காண்க.

௯ சுபவர்க்கமேறினல்—ஐராவதாங்கிஷம்.
௰ சுபவர்க்கமேறினல்—தெய்வேந்திராங்கிஷம்.

---

## தசவர்க்கத்தின் பலன்.

௧ சுபவர்க்கமாத்திரம்வருவது—துர்ப்பலம்.
௨ சுபவர்க்கம்—சுசீகரம்,
௩ சுபவர்க்கம்—ரோகம்,
௪ சுபவர்க்கம்—வாகனம்;
௫ சுபவர்க்கம்—செல்வம்,
௬ சுபவர்க்கம்—வித்தை, செல்வம், கீர்த்தி.
௭ சுபவர்க்கம—ஸைன்னியபதி.
௮ சுபவர்க்கம்—லோகாதிபதி.
௯ சுபவர்க்கம்—அஷ்டைஸ்வரியம்.
௰ சுபவர்க்கம்—இந்திரபோகிசார்வபௌமன்.

---

## தசவர்க்ககணித நிர்ணயம்.

ஒரு கிரகம் ராசியிலே உச்சம்பெற்றல் பெலம..........:.........௧
மூலத்திரிகோணம் பெற்றல்பெலம்..........................முக்கால்
ஆட்சிப்பெற்றல் மெலம்.................. ............ ....... ......இ
நட்புப்பெற்றல் பெலம................... ......... ..................வ
பகை நீசம் பெற்றல் பெலம்......................................வீசம்

வெற்றை இப்படியே நிதாணித்துக் (குறித்துக்) கொண்டு—

## தசவர்க்க பேலம்.

தசவர்க்கத்திலே ராசிக்குப் பெலம்...க.
கோட்கூறுக்குப்பெலம் ... ...இ
திரேக்காணத்துக்குப் பெலம்... ...இ
ஸப்தமாம்சத்துக்குப் பெலம் ... ...வ
நவாம்சத்துக்குப் பெலம் ... ...இ
தசாம்சத்துக்குப் பெலம் ... ...வ
துவாதசாமசத்துக்குப் பெலம... ...இ
சோடசாம்சத்துக்குப் பெலம ... ...இ
திரிம்சாம்சத்துக்குப் பெலம ... ...இ
ஷஷ்டியாம்சத்துக்குப் பெலம...... .வ

இப்படியே கO வர்க்கங்களிலும், அதற்குச்சொல்லிய கணிதப்படியுள்ள கணக்கில், கிரகமிருந்தராசியிலே உச்சம்பெற்ருல், அதிற்சொல்லிய முழுப்பங்கும், மூலத்திரிகோணம்பெற்ருல் அதற்சொலியகணக்கில் முக்காற்பங்கும், ஆட்சிப்பெற்ருல் அதிற்சொல்லியகணக்கில் அரைப்பங்கும், நட்புப்பெற்ருல் அதிற்சொல்லியகணக்கிற் காற்பங்கும், பகை நீசம் பெற்ருல் அதிற்சொல்லியகணக்கில் வீசம்பங்கும, ஆகவந்தகணக்கெல்லாவற்றையும [ஓரிடத்திலே] கூட்டி வைத்துக்கொண்டு, அதிற் பாபவர்ககமெத்தனையென்றும், சுபவர்க்க மெத்தனையென்று மறிந்து சுபவர்க்கத்துக்குச் சொல்லிய யோகாம்சங்களை அறியவும்.

ஜாதக பலாபலன்களை நிச்சயித்தறிதற்கு அனேகம் வழிகளுண்டு, இந்தத் தசவாக்கமோ மற்றெந்த வழியால் நிச்சயிப்பதிலும் மிகப் பிரதானமானது, சாதகத்தை ஸ்தூலமாகப் பார்க்கும்போது, கிரக ஆட்சி உச்சம் முதலியவைகளால் நல்லதாகக் காணப்படின் அது தசவர்க்கத்தால் பெலன் குறைந்திருக்குமாயில் நற்பலன் நடவாது, ஸ்தூலமாகப் பார்ப்பதில் நன்ருகக் காணப்படாவிடினும், தசவர்க்கத்தாற் பெலனுண்டாயில் நர்பலனுக நடக்கும், ஆதலால் தசவர்க்கமும் ஆவசியகம் ஆவசிகப்வேண்டற்பாலதொன்று.

நாலாமத்தியாயம் முற்றிற்று.

வி சபாபதி ஐயர்.

# ௫-ம் அத்தியாயம்.

## துவாதசபாவபலன்.

1. ஒருகிரகம் ஜனனகாலத்திலே நீசமாகி உச்சாம்சம் பெற்றால் நற்பலனும், உச்சமாகி நீசாம்சம்பெற்றால் துற்பலனுமாகும். மூலதிரிகோணபலன்- சோகமில்லாமல் இருக்குமிடத்திலே சுகசீவியாக இருத்தல்.

2. உச்சபலன்—சரீரகாந்தி, அதிகசெல்வம். ஆட்சிப்பலன்— சுபசோபனாதிகளால் மங்களபுருஷனாக வாழுதல். நட்புப்பலன்—நடசித்தம, சாந்தகுணம், நியாயம்பேசுதல், பகைப்பலன்—அங்கவீனம, நோய், சனவிரோதம, துஷ்டபுத்தி. நீசபலன்—வறுமை, இழிவு, பயம.

3. ஒருகிரகம ௬-௮-௧௨-ல் பகை நீசவீட்டில் இருப்பினும்; இத்தானங்களுக்கதிபதியுடனே கூடினும விபரீதபலனாகும்.

4. பன்னிரெண்டுதானங்களுள்ளே ஒருதானத்துக் கதிபதி அந்தகாரகனுமாகிக் கேந்திரதிரிகோணங்களிலே பெலத்தோடு நின்றால் அந்தக் காரகருக்கு உத்தமபலன்.

5 பன்னிரண்டு தானாதிபதிகளுள்ளும் அதிக பெலன் பெற்று யோகபலன் கொடுக்கும்போது தங்கள் தங்களுக்குரிய காலத்திலே கொடுப்பர். லக்கினாதிபதிமாத்திரம் முதலிலே கொடுப்பர்.

6. ௧-௪-௫-௯-௧௦ம் இடங்களுக்கதிபர்கள் இருந்த தானாதிபர்களும், இவர்களோடுகூடினவர்களும, உச்ச முதலிய சுபபெலனைப்பெற்றிருந்தால் அதிகபலனைச் செய்வார்கள்.

7. சுபக்கிரகம நின்றராசிக்கதிபதி சேர்க்கும்பலன் நன்மை. தீயகிரகம் நின்றராசிக்கதிபதி சேர்க்கும்பலன் தீமை.

8. ஜன்மலக்கினத்திலே அஷ்டமாதிபதி நின்றால் நின்ற நட்சத்திரமும் அந்தராசிமாதமும் கஷ்டபலனைக் கொடுக்கும்.

## லக்கின பாவம்.

9. லக்கினாதிபதி பெலமாக இருக்கச் சூரியன் கேந்திரகோணத்திலேற ஒன்பதாமிடத்ததிபதி சுபக்கிரகத்துடனிருக்கப் பாக்கியமுங் கீர்த்தியுமுண்டாம்.

10. லக்கினத்திற் பாவியிருக்க இரண்டிற் சுபரிருக்க நற் பாவியிருக்கப் பாலியத்திலே சுகம்; பின்பு துக்கம்.

11. லக்கினாதிபதி ௧௦—மிடத்திலிருக்கச் சுபக்கிரகம்பார்க்க மத்தியவயதிலே சுகமும், யோகமுமுண்டு.

12. லக்கினாதிபதி பெலனாயிருக்கச் சுபக்கிரகங் கேந்திர திரிகோணங்களிலிருக்க ௧௦—மிடத்ததிபதி கூட, சுபர்பார்க்க, ஆயுள் கீர்த்தி செல்வமுமுண்டாம்.

13. லக்கினாதிபதி கேந்திர திரிகோணங்களிலே பெலமாயிருக்கச் சுபக்கிரகம் பார்த்தால் மிருத்துப்பிணியில்லாமல் ஆயுளுண்டாம்.

14. கேந்திர திரிகோணங்களிலும் எட்டிலும் பாவிகளில்லாமலிருக்க லக்கினாதிபதியும் வியாழனும் ௧—௭—௧௦—ல் இருக்கக் கீர்த்தியும் புண்ணியபலனுமுண்டாம்.

லக்கினம், ௨, ௪, ௫, ௭, ௯, ௧௦ இவைகளுடையவர்கள் தசா புத்திகளில் அதிக யோக பலனுண்டாம். லக்கினாதிபதி பாவியாக அந்தத்தசையில் ௩, ௬, ௮, ௧௨-க்குடையவர்கள் புத்தி வரும்போது மிகுந்த கஷ்டபலனுண்டாம்.

## ௨—ம் பாவம்.

15. இரண்டாதிபதி உச்சம்பெற லக்கினாதிபதி பெலமாயிருக்க ௨—மிடத்ததிபதியிருந்த வீட்டுக்குடையவன் கேந்திர திரிகோணங்களிலிருக்க வெகுசன மித்துருத்துவமுங் கீர்த்தியுமுண்டாம்.

16. இரண்டாதிபதி பாராவதாங்கிஷமேறத் திரவியமுண்டாம்.

17. லக்கினாதிபதி சிங்காசனாங்கிஷமேற வியாழன் பாராவதாங்கிஷமேறத் திரவியவிருத்தியுண்டாம்.

18. லக்கினாதிபதி, இரண்டாதிபதி வியாழன் மூவருமுச்சமாகிச் சுபபெலனோடிருக்க மிகுந்த ஐசுவரியமுண்டாம.

19. வியாழன் சிங்காசனாங்கிஷமும், சுக்கிரனு மைந்துக்குடையவனுங் கோபுராங்கிஷமும், சந்திரனு மிரண்டாமிடத்துக்குடையவனும் ஐராவதாங்கிஷமேற மிகுந்தசெல்வமுண்டாம்.

20. ௨-௪-௧௦-க்கதிபர்கள் ௪-ற் சுபபெலனோடிருக்கச் சுகஜீவனமுண்டாம்.

21. இரண்டாதிபதி குரு சுக்கிரராலே பார்க்கப்பட்டுக் குரூரசஷ்டியாங்கிஷமேற லாபாதிபதியும் லக்கினாதிபதியுஞ் சஷ்டாஷ்டமத்திலிருக்கப் பொருள் முன்வந்து பின்னாலே சேதப்படும்.

22. லக்கினாதிபதி இரண்டிலிருக்க, லாபாதிபதி ஆறாதிபதியோடு கூட ஏழிற்சுக்கிரனிருக்க ஸ்திரீமூலமாகப் பொருளழியும்,

23. இரண்டாதிபதி சுபக்கிரகமாய் இரண்டிற் சுபரிருக்க அத்திசையிற் சுபர்புத்தியிற் சுபபலன்களுண்டாம்.

24. இரண்டாதிபதி பாபியாக இரண்டிற்பாபியிருக்க அத்தெசையிற் செவ்வாய் சனி ராகு புத்திவரும்போது கீர்த்தி செல்வங் குன்றும் ராஜகோபம வரும். இரண்டிற் சுபரிருந்தாற் சமபலன்.

## ௩-ம் பாவம்.

25. மூன்றாதிபதி நின்ற ராசியதிபதி நீசமாக மூன்றிற் பாபக்கிரகங்களிருக்கப் பாபர்பார்க்க மூன்றாதிபதி ௬-அ-௧௨-லிருக்க இந்தத்தானங்களைச் சுபர் பார்க்காமலிருப்பின் சகோதரபலனில்லை.

26. மேற்சொல்லியபடி இல்லாமலிருப்பினும், மூன்றதிபதியுஞ் செவ்வாயும சுபாங்கிஷமேற இந்தத்தானங்களையுந் தானதிபதியையும சுபர்பார்க்கச் சகோதரபலனுண்டாம.

27. சுக்கிரனுஞ் சந்திரனும் பெலமாக இருக்கச் சுபர்கூட, மூன்றிற் புதனிருக்கச சுபர்பார்க்க நல்லஆபரணங்களும பாத்திரங்களுமுண்டாம்.

28- சந்திரன், புதன், வியாழன், சுக்கிரன் இவர்கள் மூன்றிலிருக்க அனேகதருமநூல்களைக் கேட்டறிதலுண்டாம. மூன்றில் ஒருகிரகமுச்சம்பெறில் அத்தெசையிற் சமபலனுண்டு, மூன்றுக்குடையவன் பாபியாய்ப் பாபருடன்கூடியிருக்க அத்தெசாபுத்தியிற் கஷ்டபலன்

## ௪—ம் பாவம.

29. நாலாமிடத்திலே சுக்கிரனிருக்க நாலாதிட்தி கேந்திர திரிகோண உச்சத்திலிருக்க வியாழன் பெலமேறச் சுகமும வாகனமு முண்டாம்.

30. சுக்கிரன் வியாழனுடனே கூடினாலும், ஒருவரை யொருவர் பார்த்தாலும ௯—மிடத்ததிபதி ௪—மிடத்ததிபதியோடுகூடினாலும்வாகனமுஞ் சுகமுமுண்டாம்.

31 ௯—மிடத்ததிபதி நாலாமிடத்ததிபதியோடு கூடியிருக்க வியாழன் நாலிற் பெலமாயிருக்க லக்கினாதிபதி இரண்டிலிருக்கவாகனஞ் சுக மிவையுண்டாம.

32 நாலாமிடத்ததிபதி பத்தாமிடத்ததிபதியுடனே கூடச், செவ்வாய் உச்சமபெற, காலாமிடத்ததிபதி கோபுராங்கிஷமேற நல்ல பூமிப் பலனுண்டாம்.

33 நான்காதிபதி பாபியாக அத்தெசையிற் பாபர் புத்தியிற் பந்து பொருள் நாசமுங் கிலேசமுமுண்டாம்.

34 நாலாதிபதி சுபக்கிரகமாக, அத்திசையிற் சுபர்புத்தியில் வாகனம் பூமிமுதலிய பலனுண்டு.

## ௫—ம் பாவம்.

35 புத்திரத்தானத்தைக் குருபார்க்க புத்திரத்தானாதிபதி பரிபூரணபெலமடைய புத்திரயோகமுண்டாம.

36 புத்திரத்தானாதிபதியும, வியாழனுங் கேந்திரத்தா திரிகோணங்களிலிருக்க இரண்டாதிபதி பெலவானாக புத்ரயோகமுண்டு

37 அஞ்சாமிடம புதனுடைய வீடாக இருக்க புத்ரத்தானாதிபதியாயினும, வியாழனாயினும ௬—௮—௧௨ ல் இருக்க, அல்லது பகை நீசமாகவிருக்க, ௫—மிடத்தையும புத்ரத்தானாதிபதியையுங் குருவையும பாபர்பார்க்க இராகு கேது ௫—ல் இருக்கப் புத்ரதோஷமுண்டாம

## ௬—ம் பாவம்.

38 ஆறுமிடத்துக் கதிபதியும் லக்கினாதிபதியும பெலவீனமாக இருக்க ஆறுதிபதியிருந்த அங்கிஷ்டாதிபதி சூரியன சம்யோகமாக நோயுங் கடனுமுண்டாம.

39. ௬ம் இடத்ததிபதி கேந்திரத்திலிருக்கப் பாபக்கிரகம்பார்க்க ஆறுமிடத்திற் பாபிருக்கச் சத்துருவிர்த்தியுண்டாம்.

40. ௬—ம் இடத்ததிபதி நீசாஸ்தமனமாகியிருக்க அல்லது நீசாஸ்தமனக் கிரகங்களின் வீடுகளிலிருக்க, லக்கினாதிபதி பெலவானாயிருக்கச் சத்துருநாசம்.

## ௭—ம் பாவம்.

41. ௭-ம் இடத்ததிபதியும் சுக்கிரனுங்கூடிக் கேந்திர திரிகோணத்திலிருக்க, அல்லது ஆட்சி உச்சவீடுகளிலிருக்க யோககளத்திரமுண்டாம்.

42. ஏழாமிடத்ததிபதி சுபக்கிரகங்களுடனே கூடிச் சுபக்கிரகம த்தியிலிருக்க நல்லகளத்திரம்.

43. சுக்கிரனும் ஏழாமிடத்ததிபதியும் சுபாங்கிஷத்தி லிருக்கப் பத்தாதிபதி அதிகபெலவானுயிருக்க நல்லகளத்திரம்.

44. எ-ம் அதிபதி ஆட்சி உச்சவீடுகளிலிருக்க அல்லது கோபுராங்கிஷம், ஷஷ்டியாங்கிஷமேற அனுகூலமுள்ள களத்திரம்.

45. ஏழாமதிபதியை வியாழன் பார்க்க வியாழனுஞ் சுக்கிரனும் அதிகபெலமாயிருக்கப் பதிவிரதையான களத்திரம்.

46. ஏழாதிபதி சனியுடனே கூடி வியாழனாலே பார்க்கப்பட, வியாழனும் ஒன்பதாதிபதியுங் கூடிக் கேந்திரத்திலிருக்கத் தருமக் குணமுள்ள களத்திரம்.

## அ—ம் பாவம்.

47. அட்டமாதிபதி ஆட்சி உச்சம்பெறச் சனிசுபக்கிரகத்துடனே கூடிப் பெலமாயிருப்பினும,

48. கேந்திராதிபதி லக்கினத்திலிருக்க லக்கினாதிபதி சுபக்கிரகத்துடனே கூடி கஉ ல் இருக்க ஆருதிபதியையும் லக்கினாதிபதியையும் சுபக்கிரகம் பார்ப்பினும,

49. பத்தாமதிபதியும் லக்கினாதிபதியும் லக்கினத்திலிருக்கச் சுபக்கிரகம் பார்த்தாலும்,

50. க—ச—எ—கO—மிடங்களிலே சுபக்கிரகங்களிருக்க லக்கினாதிபதி சுபர்வீட்டிலே சுபக்கிரகமத்தியிலிருந்து வியாழனாலே பார்க்கப்பட்டாலும்,

51. லக்கினாதிபதி சுபக்கிரகமாய் அஷ்டமாதிபதியைப் பார்க்க வியாழனுஞ் சுக்கிரனும் லக்கினாதிபதியைப் பார்க்கினும்,

52 அட்டமத்திலே ஒருகிரக முச்சமாக அட்டமாதிபதியை வியாழன் பார்க்கினும,

53. சுபக்கிரகங்களெல்லாம கேந்திர திரிகோணங்களி லிருக்கப் பாபக்கிரகங்கள் ௩—௬—௧௧—மிடங்களிலிருப்பினும,

54. அட்டமாதிபதி கேந்திர திரிகோணங்களி லிருக்க, வியாழன் பார்க்க, ஒருபாபக்கிரகம பெலவீனமாக அட்டமத்திலிருப்பினும,

55. லக்கினாதிபதியு மட்டமாதிபதியுஞ் சரராசி முற்கூறி லிருப்பினும, ஆயுள்வலிமையுண்டாம்.

## ௯—ம் பாவம.

56. ௯—ம் அதிபதி சுபக்கிரகமாய் மூலத்திரிகோணத்திலே நல்ல அங்கிஷமேற ௯—ல் வியாழன் சுபபெலனோடிருப்பினும்,

57. புதன், வியாழன், சுக்கிரன் இவர்களிலொருவர் ௯—ம் அதிபதியாகிச் சுபக்கிரகங்களின் மத்தியிலேயிருக்கப் பத்தாமிடத்திலே சுபக்கிரகங்கள் பெலனோடிருக்கப் பாபக்கிரகங்கள் குரூர சஷ்டியாங்கிஷமேறினும்,

58. ஒன்பதாமிடத்திலே ஒரு சுபக்கிரகம் குரு சுக்கிரரிலொருவரோடு கூடிக் கோபுராங்கிஷத்திலிருப்பினும்,

59. ௯—ம் அதிபதி சுபக்கிரகங்களோடு கூடித் திரிகோணங்களிலே இருந்து பாராவதாங்கிஷமேறினும்,

60. ௧௧—ம அதிபதி ஒன்பதிலிருக்க, ஒன்பதாமதிபதி லக்கினத்திலிருக்க, ௧௦—ம் அதிபதியைப் பாராவதாங்கிஷமேறின சுபக்கிரகங்கள் பார்ப்பினும்,

61. ஏழாதிபதி உச்சமாக, ஒன்பதாமதிபதி தசவர்க்கத்திலே ௬ சுபவர்க்கம்பெற,வியாழன் பார்ப்பினும், தேவபக்தியும் தருமச்செய்கையும் பாக்கியவிருத்தியுமுண்டாம்.

## ௧௰-ம் பாவம்.

62. ௧௰ம் அதிபதி சுபக்கிரகமாய் ௨, ௯, ௧௧—மிடங்களிலே உச்சம் ஆட்சிப்பெற்று இருப்பினும்,

63. ௧௰ம் அதிபதி சுபக்கிரகமாய் அதிக பெலத்தோடு பத்தாமிடத்திலே பாபக்கிரகங்களாலே பார்க்கப்படாமல் சுபபெலனோடிருப்பினும்,

64. ௧௰-ம் அதிபதி வியாழன் அல்லது சுக்கிரனாகி உச்சப்பெற்று சுபக்கிரகங்களுடனே கூடிச் சுபர்பார்வை பெறினும்,

65. வியாழனுஞ் சுக்கிரனும் அதிகபெலனோடு இருக்க அவர்களிருந்த வீட்டதிபர்கள் சுபக்கிரகமாகிச் சுபர்பார்வைபெறினும்,

66. பத்தாமதிபதியும் நாலாமதிபதியுஞ் சுபக்கிரகமாய்க் கூடியிருப்பினும்,

67. புதன் பத்தாமதிபதியோடு கூடிப் பத்திலிருக்க, ஒன்பதாமதிபதியைப் பாபக்கிரகங்கள் பாராமலிருப்பினும்,

68. ௧௧-ம் இடத்ததிபதி சுபக்கிரகங்களின் மத்தியிலே பாராவதாங்கிஷவர்க்கத்திலிருக்க, ஒன்பதாமிடத்ததிபதி பார்ப்பினும்,

69. ௧௧-ம் அதிபதி நின்ற அங்கிஷாதிபதி சுபக்கிரகமாக ஒன்பதாமதிபதி பார்ப்பினும்.

70. லக்கினாதிபதி உச்சக்கிரகத்துடனே கூடிச் சுபபெலனோடு இருப்பினும்,

71. ௨ ங் ௧௧—மிடத்ததிபதிகள் நாலாமதிபதியுடனே கூட, பத்தாமிடம் அல்லது இரண்டாமிடஞ் சுக்கிரன்வீடாக இருக்க அதை ஒன்பதாமதிபதி பார்ப்பினும் லாபமுண்டாம.

72. சனி ராகு ௧௨—ல் இருக்க, ௧௨ ம் அதிபதி குருராங்கிஷம் ஏறினும், பாவர் பார்ப்பினும் பொருட்சேதமாகும்.

## ௧௧—ம் பாவம்.

73. ௧௨-ம் அதிபதி பாபிகளுடனே கூடியிருக்கப் பாபிகள்பார்ப்பினும்,

74. ௧௨-ம அதிபதி செவ்வாயுடனே கூடிக் குருராங்கிஷமேறினும்,

75. ௬—ம் அதிபதியும ௧௨-ம் அதிபதியும ௧௨—மிடத்தி லிருப்பினும், குருராங்கிஷமேறினும், பொருட்சேதமாகும்

## ௧௨—ம் பாவம்,

76. ௧௨ ம் இடத்திலே ஒருகிரக மூச்சமாக இருக்க,ஒன்பதாமதிபதி பெலமாகவிருக்க ௧௨—ம அதிபதி சுபக்கிரகமாகக் கேந்த்திலிருப்பினும்,

77. பத்தாமதிபதி பெலமாக இருக்க, ௧௨-ம் அதிபதி சுபக்கிரகமாகவிருந்து பார்ப்பினும்,

78. சுபக்கிரகம் ஆட்சி உச்சமாக ௧௨ ல் இருக்க, ௧௨ம அதிபதி சுபக்கிரகமாகக் கேந்திரத்திலிருப்பினும்,

79. ௧0 ம் அதிபதியும ௧௨ ம அதிபதியுங் கூட, சுபக்கிரகமபார்ப்பினும், நல்லமரணமும நல்லபதவியுமுண்டாம்.

80. சூரியனுஞ் சந்திரனுமதிகபெலத்தோடு இருக்க, ௧௨ ம் அதிபதி கேந்திரம்பெற்றால் தெய்வீகமான சுபமரணமும, நற் பதவியுமுண்டாம்.

81. லக்கினாதிபதி கேந்திரம்பெற்றாலும, சந்திரன் தச வர்க்கத்தி

ல் ஆறுசுபவர்க்கமபெற்ற இயாங்கிரகங்களோடுகூட, சுஉல் ஒருகிரகம் ஆட்சியுச்சமாகவிருப்பினும்,

82. சுஉம் அதிபதி திரிகோணகேந்திரமபெறினும், மித்துருக்கிரகம பார்ப்பினும், சுஉல் ஒருகிரகமுச்சமபெறினும்,

83. நாலாமதிபதியும பத்தாமதிபதியுங் கூடியிருக்க, பன்னிரண்டாமதிபதி சுபக்கிரகமாகிக் கேந்ர திரிகோணங்களிலிருந்து பார்க்கினும்,

84. பூர்வபட்சச்சந்திரன் கேந்திரத்திலிருக்க வியாழன் சுபபெலனோடு சுஉல் இருந்துபார்ப்பினும, நித்தியும ராஜயோகமுமுண்டாம்.

---

## முக்குணவேளையின் பலன்.

இராஜதகுணத்திற்ஜெனித்தால் உயிர்களின்மீதிரக்கமும, நல்லறிவு, இனிமையானபேச்சு, கல்வித்தேர்ச்சி, இன்பசுகம, பரோபகாரம எவர்களுக்குந்தீமைநினையாமை, தானதருமங்கள் செய்யவிருப்பம், நடுவுநிலைமையாகப்பேசுதல் இவையுண்டாம்.

சாத்துவிதகுணத்திற் ஜெனித்தால்—அங்கச்சிறப்பு, நுட்பமான புத்தி, ஞானம் தெய்வபக்தி, குருபக்தி, தீமையைவிலக்கிநடத்தல், தனக்குள்ள சுகத்தையநுபவித்துக்கொள்ளுதல், இவைகளுண்டாம்.

தாமதகுணத்திற்ஜெனித்தால்—அதிகநித்திரை, பொய்பேசுதல், நிதானக்குறைவு, கோபக்குணம, பாவசிந்தை, ஆலோசியாமற் சிலகாரியங்களைச்செய்தல் இவைகளுண்டாம்.

---

## எ வாரங்களின் பலன்.

ஞாயிற்றுக்கிழமையின்பலன்—அழகு, பொருளாசை, வீரம், சமபத்து, தெய்வபக்தி இவை.

திங்கட்கிழமையின் பலன்—விரதநியமம், அபிமானம், தருமசிந்தை, அதிககீர்த்தி.

செவ்வாய்க்கிழமையின் பலன்—வாக்குவிதானம், வஞ்சகக்குணம் துஷ்டர்கள் சேர்வை.

புதன்கிழமையின் பலன்—உண்மைபேசுதல், பெரியோர்களுக்கு மரியாதைசெய்தல், தெய்வப்பிராமணபக்தி, புத்திநுட்பம், சற்கிருத்தியஞ்செய்தல், ஈசுரத்தியானம்.

வியாழக்கிழமையின் பலன்—பொய்பேசாமை, பல தருமங்களைச் செய்தல், யாகாதிக்கிரியைகள் செய்வித்தல், கல்விவேகம், நல்லொழுக்கம், கீர்த்தி, ராசப்பிரபுசிநேகம்.

வெள்ளிக்கிழமையின் பலன்—செல்வத்தைப்பெறுதல், தானியங்களுடைமை, அதிகாரஞ்செலுத்துதல், மேலானகாரியங்களைச்செய்தல், அதிக ஆலோசனை, ஸ்திரீகலகம்.

சனிக்கிழமையின்பலன்—பந்துசனங்களாற்சுகமில்லாமை, தைரியக்குறைவானதேகம், பரஸ்திரீகளிடத்தன்பு.

---

## உஎ நட்சத்திரங்களின் பலன்.

---

### அசுவினி.

தான்செய்யுங்கருமங்களை வழுவாது செய்தலும், ஸ்திரீ மோகமும், கொடையுபகாரமும், வீரத்தன்மையும், பொய்பேசாமையும், அல

ங்காரப்பிரியமும், கோபக்குணமும, சாமர்த்தியமும், சாந்தமும, நல்லறிவும, அதிகபுகழும், தேசாபிமானமும, உபாயக்குணமுமுண்டாம்.

இதன் முதற்கால்—கோட்சொல்லல், பாவத்துச்சஞ்சாமை, அன்னியர்கள்மேலன்பு இவை.

இரண்டாங்கால்—சாஸ்திர உணர்ச்சி, பிறருடைய குணங்களை அறிதல், மேலறிவு.

மூன்றாங்கால்—கணிதசாஸ்திர உணர்ச்சி, அடைந்தவர்களுக்கு நற்புத்திகூறுதல்.

நாலாங்கால்—நுட்பமானபுத்தி, சோதிட அறிவு, இச்சை, உண்மைபேசுதல்.

## பரணி

பிதாமாதாவிடத்தன்பு, ஞானவறிவு, அற்பநித்திரை, அற்பகோபம், *தருமக்குணம, ஐசுவரியவிருத்தி, புகழ்பெறுதல், பூமியிலாசை, திடமானபேச்சு, மறுப்பொருந்தியதேகம், வார்த்தைபேசிக்கொண்டிருப்பதில் விருப்பம, பிறர்செய்நன்றியைச் சிந்தியாமை, சிலகாரியங்கள் பிரயாசப்படாமலிருக்க ஊழ்வலியாற் சம்பவித்தலுமாம.

இதன் முதற்கால்—பராக்கிரமமான நடை, நீதிபேசுதல், சத்துருக்களுக்கஞ்சாமை இவை.

இரண்டாங்கால்—சோம்பற்குணம, அதிகபுத்தி, சாஸதிரத்தைப்பிறருக்குச் சொல்லுதல். தருமக்குணம்.

மூன்றாங்கால்—கோபக்குணம, சீக்கிரசந்தோஷம், சன்மார்க்கம்.

நாலாங்கால்—சேவகத்துவம், துர்ச்சனர்கூட்டம், கெர்வநடை,

## கார்த்திகை.

நல்லவிவேகம், அரசர்நட்பு, தேகபெலம, வழக்குரைத்தல், இரசவர்க்கத்தில் விருப்பம், பிறருக்குஉபகாரஞ்செய்தல், அற்பகித்திரை சாதுரியமாகப்பேசுதல், பிரயாசத்தோடு பொருள்சம்பாதித்தல், பிறர்பொருளாசை கீர்த்தி பரஸ்திரீகமனம் இவை.

இதன் முதற்கால்—ஆசாரம் வித்துவத்தன்மை பிரபுத்துவம் பொருளிலாபம் விவேகம ரோகதேகம் மனோதைரியம்.

இரண்டாங்கால்—ஆசாரக்குறைவு, மிகுகோபம், அன்னியசனநட்பு

மூன்றாங்கால்—அன்னியஸதிரீநக்கமம் அதிகவிவேகம் சோம்பற்குணம்.

நாலாங்கால்—மனோதுக்கம் ரோகம் பெருமைக்குறைவு மிடிம்னத்தாபம்.

## ரோகிணி.

பிறர்சொன்னபுத்திக்கு அமைந்துநடத்தலும அதிக நீர்த்தாகமும் கல்வியும வாக்குவல்லபமும அரசர்நட்பும் அன்னதானமுதலாகிய தானதருமங்களில் விருப்பமும செட்டுப்பலிதமும் பால் நெய் இவற்றை விரும்பியுண்ணுதலும விசாலித்தகண்களும ஓரஞ்சொல்லாமையும் கடுநடையும சாஸதிரஆராய்வும் திடசித்தமும அன்னிய ஸதிரீகளிடத்து விருப்பமுமாம்.

இதன்முதற்கால்—அங்கலெட்சணம அபிமானம ஸதிரீகளிடத்து ஆசை பொறுமையில்லாமை வர்மக்குணம பிறருக்குத் துன்பஞ்செய்தல் இவை.

இரண்டாங்கால்—சாந்தகுணம நோய்க்கிடமானசரீரம ஆசாரம உண்மைபேசுதல் ஏகதாரம வாய்ச்சாலம.

மூன்றாங்கால்—குருவினாலனுக்கிரகம்பெறுதல், கணிதசாஸ்திரவுணர்ச்சி, சங்கீதம், மந்திர அப்பியாசம், சுகம்.

நாலாங்கால்—ஸ்திரீலோலம், பிறர்பொருளாசை, பொருட்செலவு.

## மிருகசீரிடம்.

ஞான அறிவு, கல்வியிலாசை, விசாலித்தகூர்மையானகண், மயிரழகு, தைரியமானதேகம, மனவர்மம், மனவடக்கம, ஆடல்பாடல்களில் விருப்பு, தாம்பூலப்பிரீதி, வினைத்தலைகளைமுடித்தல், தேசசஞ்சாரம, அச்சம் இவை.

இதன் முதற்கால்—பொருளனுபவம், சத்துருவெற்றி தூலதேகம, உண்மைபேசுதல் ஆசாரக்குறைவு.

இரண்டாங்கால்—சாதுவானகுணம், இஷ்டசித்தி, ஸ்திரீமோகம, உண்மைபேசுதல்.

மூன்றாங்கால்—உதாரகுணம், சீக்கிரசந்தோஷி உத்தமகுணம், இனியவாக்கு, நல்விவேகம், கொடையுபகாரம்.

நாலாங்கால்—வீரத்தன்மை, கோபக்குணம, வஞ்சகத்தன்மை.

## திருவாதிரை.

கீர்த்தி, பொய்பேசுதல், மனோதைரியம, கோபக்குணம, இடம்பம, சரீரபெலம், சினேகபட்சம, பிடிவாதம் பிரபுத்தன்மை இவை.

இதன்முதற்கால்—நல்வசனம நற்குணம் பெருமையானமனம் யௌவனஸதிரீவிருப்பம், பெரியோர்களுக்கு இசைந்து நடத்தல்.

இரண்டாங்கால்—நிதானமான ஒரேவார்த்தை, வாய்ச்சாலம வன்கண்மை ஞானவிரோதம் உத்தமஸதிரீசேர்வு.

மூன்றாங்கால்—முற்கோபம் அன்பின்மை கோட்சொல்லல் ஸ்திரீக ளுக்குப்பயம நற்குணமில்லாமை வாதநோய்.

நாலாங்கால்—மனத்தணிபு விரைவாகக் காரியம்பார்த்தல் வெந்துக்கள் பகை ஈனத்தொழில் துர்விவேகம் ஆசாரக்குறைவு.

## புநர்பூசம்.

சுகதேகம், புயபெலம், சொற்சாதுரியம, வருந்திகடத்தல், கடின வார்த்தை, மனக்கிலேசம, நற்குணம், சற்புத்தி, பலரிடத்தன்பு, மனவிசாரம், கொடையுபகாரம் இவை.

இதன் முதற்கால்—தூலதேகம் அனுபோகம் ஸ்திரீமோகம் மனச்செவிடு இடம்பம.

இரண்டாங்கால்—பித்தம் சோம்பல் ஆசாரக்குறைவு உஷ்ணதேகம்

மூன்றாங்கால்—காவியசாஸ்திர உணர்ச்சி, தந்தரோகம் குஷ்டம், தீர்க்காயுள்.

நாலாங்கால்—அக்க லெட்சணம் குயுக்தி பெரியோர் கூட்டம் காரியசிதாணக்குறிப்பு.

## பூசம்.

வாக்குவல்லபம், வழக்குரைத்தல் கபடம் குத்திரவசனம பிதா மாதாவையிரட்சித்தல் ஒழுக்கம் சிறப்பு செல்வம் முகலெட்சணம பசியைப்பொறுக்கமுடியாமை சாந்த முதலிய வாசனைகளிற் பிரியம் நற்குணம பாக்கியவிருத்தி ஆபரணச்சிறப்பு பரோபகாரம தானியம் வாகனம் தேவபக்தி சகலசனமித்துரு தருமம் இவை.

இதன் முதற்கால்—தருமஞ் செய்தல் கோபக்குணம் புத்தி பெலம தீர்க்காயுள்.

இரண்டாங்கால்—பிரபுத்துவம் அடைந்தவர்களை ஆதரித்தல் நிதானம் அந்நியர் நட்பு.

மூன்றாங்கால்—வெந்துக்களில் நட்பு விவேகம ஞானவறிவு சந்தோஷசித்தம் நற்காரியங்களைச்செய்தல்.

நாலாங்கால்—கோபம கலகம வஞ்சகம ஸ்திரீகெமனம்.

## ஆயிலியம்.

இனிமையோடு சாதுரியமாகப்பேசுதல், சத்துருக்களை நேசித்தல், மனோதுக்கம, சிற்றுணவுகளிற் பிரீதி, பிதாமாதாவுக் கினிமையாகநடத்தல், கபடமில்லாமை, எவர்களுக்குந் தாழ்மைசொல்லல், சுகத்திலவிருப்பம்; வலியோர்க்கஞ்சாமை, விசாலமானகண், தன்னெண்ணத்தைப் பிறருக்கு மறைத்தல், பிறரைவஞ்சித்துப் பொருள் தேடுதல், பாபத்தொழிலைச் செய்தல் இவை.

இதன்முதற்கால்—அதிகசெல்வம், பெண் பூமி இவற்றில் மிகுந்த ஆசை, நுண்ணறிவு, சந்தோஷசித்தம், பலதொழிலையுஞ்செய்தல்.

இரண்டாங்கால்—அந்நியரேவற்றொழில்செய்தல், தீயநடை, குரூரபுத்தி.

மூன்றாங்கால்—கோபக்குணம், ஞானவறிவு, சேரமபல், நிதானம, உபயோகமில்லாமற்பேசுதல், ஸதிரீயையுபத்திரவப்படுத்தல்.

நாலாங்கால்—பொருளையபகரித்தல், தீமைசெய்தல, தீமைசெய்பவர்களோடிணங்குதல், நீசஸதிரீசங்கமம.

## மகம்.

அங்கலெட்சணமும், சேர்ந்தவர்களுக்கியைந்தநடையும, பலவிடங்களிலுஞ்சஞ்சரித்தலும், பலநூலையுமறியும் விவேகமும, நீராடவிருப்பமுஞ் சுகந்தபரிமளப்பிரியமும், பொருளுடைமையும், வலப்புறத்தி

ல்மறுவும, நியாயம்பேசுதலும, அற்பநித்திரையுந் தருமச்செய்கையும, அளவர்னபேச்சும், பிறருடையபொருளைத் தனக்காக்குதலும, தெய்வ பிதிரபக்தியும, உற்சாகமும, ஸ்திரீபோகத்திற்பிரியமுமாம்.

இதன்முதற்கால்—அச்சங்கொள்ளும்விதமான கோபநோக்கமும், அதிகயூகமும, பேராசையுஞ் சிவந்தமயிரும.

இரண்டாங்கால்—அழகானதேகம, பெருஞ்செல்வம், மனச்சந்தோஷம், சிறந்தகண் காதுநோய்.

மூன்றாங்கால்—சரீரபெலம், நோய் சாதுவானகுணம் பொல்லாங்கு செய்தல் கடினசித்தம பேராசை புனிதம்.

நாலாங்கால்—பெண்புத்திகேட்டல், மனச்சஞ்சலம, இனிமையான பேச்சு சிரங்குமுதலியநோய்.

## பூரம்.

சந்தோஷமான நல்வசனமும், நல்லறிவும, சிவந்தகண்களும, பொருளைவருந்தித்தேடுதலும, தனக்குப் பின்னேநடக்கப்போவதைமுன்னறிந்துகொள்ளுதலும, பலவிதமான வியாபாரத் தன்மைபோலப் பொருளையீட்டுதலும, கடுஞ்சொல்லும், ஒருகாலத்திலே பலவினைவைச்செய்கின்ற நெஞ்சமும, பொதுப்பெண்களைவெல்லுதலும, அழகியபற்களும, துற்புத்தியுமுதாரகுணமும், புகழானகொடையும, ராசசேவையுமாம்.

இதன்முதற்கால்—வீரக்குணம் இன்சொல்லு கோபம ஆசாரம் பொருளைச்செலவுசெய்துவிடுதல், வியாபாரஞ்செய்தல், சிறியவீட்டில் வாழுதல்.

இரண்டாங்கால—கமத்தொழில செய்தல மனக்கிலேசம் கீர்த்திக்குறைவு பிறராலுதவிபெறுதல் சிறுகுடிகளை தாகமுடைமை,

நாலாங்கால—துக்கம் பிறச்சிந்தை, தேவப்பிராமண தூஷணை.

## உத்தரம்.

ச—ல் அங்கரோகம் அற்பசுகம் சஞ்சலமனசு பல்நோய் பொருட்செலவு மாதுருத்ரோஷம பந்துசனப்பகை பரக்கிருகவாசம சிறுவீடு ஆநாசாரம் சதாதுக்கம் வாகனமுடக்கம் மனக்கபடம நீண்டகேசம நயனவியாதி வெந்துச்சேதம வாதவாயுப்பீடை சிவிகை வாகன முடக்கம வாகனபயம் நாயிஞற்பயம் வாகனமிருந்தாலுஞ் சமையகாலத்திலே பிரயோசனப்படாமை, மனக்கபடம் திரவியமிருந்தும் தன்சுகத்துக்குதவாமை.

ரு—ல் புத்திரர்குறைவு புத்தியீனம சண்டாளசித்தம தருமச்செய்கை அற்பபுத்தி பாலாரிட்டம தப்பிற்றீர்சகாயுள், பிதிர்தோஷம மித்திரத்துவேஷம பிறரைநிந்தித்தல் சதாதுக்கம பலவற்றினும விசுவாசக்குறைவு வெந்துசுகக்குறைவு ஸ்திரீசொற்கேட்டல்,

சூ—ல் போசனவிருப்பு, வெகுபசி காமம சத்துருசெயம துக்கம பொருளிலாபம் துர்க்கர்மம நீசர்பயம் குஷ்டரோகம் மூலப்பகை பராக்கிரமத்தாற் பலரையுமடக்குதல், புத்திரரால்மேன்மை பசு எருமை முதலியமிர்கத்தாற் பலன்.

எ—ல் கபடம புத்தியீனம் எப்பொழுதும பெண்களோடுசகவாசஞ் செய்யப்பிரியம பாமகர்மி வயதின்மூத்த ஸ்திரீயையிச்சித்தல் சஞ்சாரப்பிரியம், தீர்க்கரோகம் சுமைசுமக்கஅஞ்சாமை, பாப்புத்தி சொற்பதிரவியம் அங்கலெட்சணக்குறைவு வைத்தியசாத்திரவுணர்ச்சி துஷ்டகளத்திரம களத்திரசுகமின்மை களத்திரத்தாலவமானம் துர்ப்புத்தி மந்தம் குடும்பசுகமடையாதவிதமான புராக்கு வயதுக்குமூத்தவர்களிலே பட்சம, அமங்கலத்தில் வெறுப்பில்லாமை.

௮—ல் ரோகம போசனசௌக்கியமில்லாமை புத்திரவீனம் பயம் பிதிர்தோஷம் மத்திமாயுள் பசிபட்டினி பொய் துக்கம் அநாசாரம் உலுத்தத்தன்மை நேத்திரரோகம் ஸ்திரீகலகம் குஷ்டவியாதி ஆசனத்தில் வியாதி துர்ச்சீவனம் பாபசிந்தை காரியவிக்கினம தன்னெண்ணப்படியேநடத்தல் தூர்த்தகுணம் இடையிடையே அவமிருத்துநோய் தேசாந்திரசஞ்சாரம்,

௯—ல் தருமமில்லாமை சுகக்குறைவு பிதிர்பாக்கியவீனம் அன்னிய ஜாதியாராலே பொருட்சேதம் கலகம் தரித்திரம் புத்திரவீனம பந்துஜனவெறுப்பு சகோதரக்குறைவு பாபசிந்தை ஒன்றிலும்பற்றிலாமை தன்னைக்குறித்தபயம் செய்யவேண்டியவை இழிவானாலுஞ் செய்ய அச்சப்படாமை.

௧௦—ல் பாக்கியம், குருபக்தி, பிராமணபக்தி, சனாதிகாரம் கிராமாதிக்கம், பொருளிலாபம், பின்புத்தி, பிறருக்குதவியானவற்றைச்செய்தல், ஞானஅறிவுபோன்றவிவேகம், வெகுசனமித்திரம், பிரபுத்தன்மை, அரசர் பெரியோர்களுக்குப் புத்திசொல்லுதல், பிற்காலத்தில்விசேஷமதிப்பு, சந்திரனுக்குப் பத்தில் நின்றால் பசுச்சேதம், மாதுருத்துவேஷம் ஆசாரக்குறைவு, மனப்பீடை, தொழில்முடக்கம், குலமுண்டாமை, யாத்திரைசெய்தல், மானமுடைமை, நல்வாக்கு.

௧௧—ல் செல்வம், ஆளடிமை ஞானம், சிற்பசாஸ்திரமறிதல் சமைமடுத்தல் சகோதரதோஷம், சந்துசெய்வதில்விருப்பம், செவிமந்தம், பலஅனுபோகம் தானியங்களாலும் பெரியோர்களாலும் தனலாபம் நிலையானமனம் தொடங்கியகாரியம் முடிக்கவல்லமம், பலதொழிற்பயிற்சி, குடும்பசந்தோஷம்.

௧௨—ல் அவமிருத்துதோஷம், களத்திரசுகவீனம், சஞ்சலபுத்தி, வஞ்சகம், மூர்க்கம் தானப்பிரஷ்டம் வாதநோய் சுரத்தினால்வி

ணம் முகரோகம், விவாதசீலம் சமயகாலத்திற் புத்திக்குறை வு, அபிமானக்குறைவு, நற்சிநேகமின்மை, அன்பின்மை, சுக க்குறைவு.

---

## ராகு.

க—ல் பிறகாரியம் பார்ப்பதால் தன்காரிய மனுகூலமாகாமை சுயஸ்தீ ரீயில் வெறுப்பு பரஸதிரீவிருப்பு வர்மத்தானங்களிலே நீடித்த ரோகம் சிரரோகம் குஷ்டம் கோட்சொல்லல புத்திரபீடை.

உ—ல் வெந்துக்களுக்காகப் பிரயாசப்படல் பலருஞ்சிரிக்கும்விதமான விகடவார்த்தை மந்திரசாஸத்திரசாதனை தன்னெண்ணப்படி நடத்தல் துர்ப்போசனம் வித்தைவிரோதம கெம்பீரவசனம் மனோதரித்திரம்.

ஙு—ல் உண்மைபேசுதல் செல்வமிருந்தும் இல்லாதவிதமானநடை ஆயுள்விருத்தி ஒழுக்கம தற்புகழ்ச்சி தீர்க்கவசனம சகோதர விரோதம் பலசனமித்திரம் அக்கிரமம் வசையுடைமை வெகு மானம பெறுதல்.

ச—ல் மாதுருசுகக்குறைவு வெந்தசனவிரோதம் அன்னியசனங்க ளிற் பட்சம சுகதுக்குரியவைகளாற் பிரயோசன மில்லாமை தேசசஞ்சாரம் தன்வரவிலுஞ் செலவதிகம் வாகனக் குறைவு சொற்சோர்வு ஒருவரோடு மிணக்கமில்லாமை ஆலோசியாமல் முந்திப்பேசுதல் துஷ்டபுத்தி அதிகாரநடை.

ரு—ல் எந்நாளும் மனவியாகுலம் புத்திரசுகக்குறைவு குரூரவசனம் மிகுதியாகப் பெண்பிரஜைகளிருத்தல் விநோத விதனைதகளிலே

விருப்பம் வீண்வார்த்தைபேசுமிடங்களிற் பொழுது போக்குதல் ஆசாரக்குறைவு வஞ்சகக்குணம தெத்துப்புத்திரரால் சுகமடைதல தேவானுக்கிரகம் மருந்துமந்திரசாதனை இவைகள்சித்தியாகுதல மனச்சுகமின்மை பெண்சனங்களாற்பரிசிக்கப்படுதல்.

௬—ல் சத்துருஜெயம் கீர்த்தி தேகபெலம் சென்றஇடங்களிலே மரியாதை தோல் நரம்புகளைச்சேர்ந்தநோய் சாதுரியபுத்தியினாலே திரவியஞ்சம்பாதித்தல் பின்வயதிற் பலஅனுபவங்கள் காணப்படுதல ஈனர்களாற்பலன் சத்துருக்களாற் பொருட்சேதம் பந்துசனப்பகை இடுப்பிலேவாய்வுரோகம்.

௭—ல் பொருள்களிலேயிச்சைகுறைவு பரதாரகெமனம் வயதின்மூத்தஸதிரீகளிலிச்சை துஷ்டகளத்திரம பலரையுமொரேவிதமாக மதித்தல் குடும்பசுகக்குறைவு கீழானதொழிற்செய்ய அச்சப்படாமை.

௮—ல் காலாந்தரபுத்திரயோகம் மந்திரசாதனை வசூரிமுதலியநோய் ஆபத்திலிருந்து ஞானமவருதல் செய்யுந்தொழிலினாலிகழப்படுதல் மனச்சலனம.

௯—ல் மாந்திரீகம் விகடமுதலியவைகளினாலே பலன் பிரயோசனமில்லாதவார்த்தையிற்பிரியம குருத்துவேஷம் செய்நன்றிமறவாமை பந்துக்களைப்பாதுகாத்தல, ஆலயசேவை தீர்த்தயாத்திரை விரதம இவைகளிற் பிரீதி சகோதரர்குறைவு மனக்கிலேசம தன்மகிமைக்குத் தகாதகாரியஞ்செய்தல்.

௧௦—ல மாடமாளிகைகளிலே விருப்பம் பிறராலுபகாரம்பெறுதல புண்ணியபலன் ஆசாரக்குறைவு களத்திரக்குளப்பம மனஅலதாணக்குறைவு துஷ்டசகவாசம போசனம நித்திரை இவைகளிற் சுபக்குறைவு.

௰—ல தெய்வபக்தி கல்விமுதலியவற்றிலே நுட்பமானயுக்தி மூத்த சகோதர தோஷம் செவிமந்தம் திடமானபுத்தி அன்னியசனங்களாற் பொருள்வரவு தன்பரிவாரங்களோடு பிறவிடங்களிற்சஞ்சரித்தல் தன்னுடைய இடத்திலிருந்து சீவனஞ் செய்வதற்கு வழியிருத்தல கப்பல் முதலிய சலசம்பந்தமான பொருள்களினாலே பலனடைதல் பலராலுமரியாதை பெறுதல சுயசனங்களாலே கீர்த்திக்குறைவு.

௧௧—ல் தேசசஞ்சாரம் சொந்தமானவீடுகளிருப்பினும் அந்நியக் இருகவாசம், வழக்கோரஞ்சொல்லல், எண்ணித்தொடங்கிய கருமத்தை வேறொருவிதமாக முடிவுசெய்தல், பழுதுற்றவையாயும் புராதனமாயுமுள்ளவைகளைத் திருத்துதல், சிறுவயதிலே தொடங்கித் தன்காரியம்பார்த்துக்கொள்ளுதல், பாதரோகம் தைரியக்குறைவானதேகம.

---

## கேது.

௧—ல் மெலிவானதேகம் விஷரோகம் மனத்திடம் துஷ்டர்களாலே பயம், விரைவாகத்தொழிற்செய்தல் கோபித்தவுடனே சாந்தமாதல் பலசனப்பிரியம் வெந்துசனங்களாற்சுகமில்லாமை கல்வியினாற்பயனடைதல் நூதனமான யந்திரம முதலியவைகளிற்கருமம பார்த்தல்.

௨—ல் சந்தோஷமானவார்த்தை பாதூடணம் கல்வியறிவு வஞ்சனைத்தொழில் வெந்துசனங்கள்குறைகூறுதல் குடும்பவிரோதம் தானியச்சேதம்.

௩—ல் பராக்கிரமம் சாஸ்திரக்கேள்வி சத்துருசெயம் சிநேகிதபீடை காரியத்தாட்சி பிதாவினும விசேடபிரபலம் மந்திரசித்தி.

௪—ல் தான்தொடங்கிய காரியங்கள் பூரணபலனடையாமை முன்வயதிற்பீடை மாதுருதோஷம் வீட்டிச்சுகக்குறைவு தனதுகாரியம நிஷ்பலமாகுற் பிறரைக்குற்றஞ்சொல்லுதல் வியாபாரபலிதம, மனத்துயர்.

௫—ல் ஞான அறிவு மனக்கிலேசம், புத்திரசேதம், தெய்வவணக்கம் தெத்துபுத்திரரிருப்பிற் பலன், சகோதரவிரோதம் கீழ்த்தொழிலுக்கு அச்சமில்லாமை வாயுஉபத்திரவம்.

௬—ல் கீர்த்தி சத்துருஜெயம் ஞானவிரோதம், உதரவேதனை வித்துவத்தன்மை.

௭—ல் தேசசஞ்சாரம், களத்திரசுபக்குறைவு, வர [illegible] யாதி, கிரமக்குறைவான விவாகம் ஜலத்தாற்பயம், கீழ்த்தொழில்செய்தல், சோம்பல் ஸதிரீகளினாற் பயம்.

௮—ல அறிவு, பிறர்பொருளாசை நற்குணமுள்ள மனைவி, புத்திரவீனம், சர்ப்பபயம், ஆசாரக்குறைவு, தேகத்திலே நோவடைதல், பாபசிந்தை, பணச்செலவு.

௯—ல் ஆயுள்விருத்தி புத்திரவிருத்தி, தைரியம் பொருள்களிற்பற்றிலையாமை வாய்ச்சாலகம் தருமஞ்செய்யவிருப்பு உதவிகுறைவு வழக்குத்தொடுத்தல்.

௧௦—ல விவேகம் சனவிரோதம் தன்னெண்ணப்படிநடத்தல, கிலேட்டுமரோகம் சேவகாவிருத்தி தன்னைச்சிறப்பிக் [illegible] மை யாசகருக்குதவிசெய்தல நூதனயானமேலேயசயபாக்கி

லும் விநோதவித்தைக்காரரிலும் பிரீதி வாகனங்களாலே துன்பமுண்டாதல.

கக—ல் விவேகம் அதிகாரம் ஞானம் பொருள் அலங்காரம் இலக்கியப்பிரீதி சத்துருசெயம்.

கஉ—ல வாகனக்குறைவு நேத்திரசுபக்குறைவு வெந்துவி ரோதம் பேசுபவர் இல்லாதபட்சத்துக்காக நியாயம்பேசுதல், பிரபுத்துவம், பொருட்செலவு, வியாபாரம, நீதியாகநடத்தித் பொருள்வரவும் பிசகிற் பொருள்நட்டமுமாதல், நேத்திரசுகக்குறைவு, சயனசுகக்குறைவு, தருமகாரியங்களி லதிகாரஞ்செய்தலுமாம்.

---

மேலே குறிக்கப்பட்டபலன்கள் கிரகங்களின் சாதாரணபலன்களேயாம். இவற்றின் விசேஷபலன்களை அறியுமிடத்து ஒருகிரகம் மற்றொரு கிரகத்தோடு சேரும்போது எந்தக்கிரகத்தின்பெலன் குறையுமென்பதையும், சேந்திர திரிகோணுதிகள் பெற்று விளங்குங் கிரகங்களின் பெலன்களையும் நன்றாக அறிந்துகொண்டு அதததற்குத்தக்கபடியே விதானித்தல் வேண்டுமாயினும் முன்பு பொதுப்பலனை அறியாமல் விசேடபலனறிவது பிரயாசமாதலின் இவை எழுதப்பட்டன.

---

## இரண்டுகிரகங் கூடினுல்
## எந்தக்கிரகத்துக்குப் பெலவீன மென்பது.

கிரகயுத்தங்களால் விகீனமாவது—சூரியனுடனே சனிகூடினுல் சனி இளைப்பர். சனியுடனே செவ்வாய்கூடிற் செவ்வாய் இளைப்ப.

செவ்வாயுடனே வியாழன்கூடில் வியாழன் இளைப்பர். வியாழனுடனே சந்திரன்கூடிற் சந்திரன் இளைப்பர். சந்திரனுடனே சுக்கிரன் கூடிற் சுக்கிரன் இளைப்பர். சுக்கிரனுடனே புதன்கூடிற் புதன் இளைப்பர். புதனுடனே சந்திரன்கூடிற் சந்திரன் இளைப்பர். இப்படியே கிரகங்களின் பெலாபெலன்களை அறியவேண்டும்.

## நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசங்களின் பெலம்.

நட்புப்பெற்ற கிரகங்களுக்கு முழுப்பங்கு வலிது, ஆட்சிப்பெற்றகிரகங்களுக்கு இரண்டுபங்கு வலிது; உச்சம்பெற்ற கிரகங்களுக்குப் பத்துப்பங்கு வலிது, பகை நீசம் பெற்ற கிரகங்களுக்குக் காற்பங்கு வலிது எனவும்,

சிலநூலோர், உச்சம்பெற்றகிரகங்களுக்கு முழுப்பங்குவலிது, ஆட்சிப்பெற்றகிரகங்களுக்கு அரைப்பங்குவலிது, நட்புப்பெற்ற கிரகங்களுக்குக் காற்பங்குவலிது, பகைநீசம் பெற்ற கிரகங்களுக்கு வீசம்பங்கு வலிதாகவும் விதிக்கின்றனர்.

---

## கேந்திரபெலம்.

கேந்திரங்களாகிய க—ம் ச—ம எ—ம் க0—ம் இடங்களில் க—மிடத்தை உதயமென்றும், ச—மிடத்தை கீர்க்கிழென்றும், எ—மிடத்தைப் பாடு என்றும், க0—மிடத்தை உச்சியென்றும், இவற்றை முறையே லக்கினகேந்திரம, சதுர்த்தகேந்திரம, ஸப்தம கேந்திரம தசமகேந்திரம் என்றுஞ் சோதிடநூல்களிலே வழங்கிவருவதுண்டு. இந்தத் தானாதிபர்கள் ஒருவரினும்பார்க்க ஒருவர் ஏற்றமான யோகபலனைச் செய்வர்.

லக்கினாதிபதியினும்பார்க்க நாலாதிபதி அதிகபலனைச் செய்வர். நாலாதிபதியினும் ஏழாதிபதி அதிகபலனைச்செய்வார். ஏழாதிபதியினும் பத்தாதிபதி அதிகபலனைச்செய்வர். பத்தாமிடத்துக்கு மேற்பட்ட கேந்திரமில்லாமையால் பத்தாமிடம் உயர்ந்த கேந்திரமென்று

சொல்லப்படும். கேந்திராதிபதிசெய்யும் பலன்போலவே கேந்திரங்களில் நின்றவர்களுஞ் செய்வர். சுபக்கிரகங்கள் கேந்திராதிபதிகளானாற் சுபபலனைச் செய்யமாட்டார்களென்றும் பாபக்கிரகங்கள் கேந்திராதிபதிகளானாற் சுபபலனைச் செய்வார்களென்றும் சில நூற் சம்மதம்,

---

## திரிகோணபலம்.

திரிகோணங்களாகிய ௫—ம், ௯—ம், ௧—ம் இடங்களும் முன் கேந்திரங்களுக்குச் சொல்லியபடியே ஒன்றினும்பார்க்க ஒன்று ஏற்றமாகுமேயாகப்பலனுக்குரியனவைகளாகி இந்தத்தானாதிபர்களும் இதிலிருந்தவர்களும் விசேஷயோகபலனைச் செய்யத்தக்கவர்களாவர். ஒன்பதாமிடத்துக்கு மேற்பட்டதிரிகோணமின்மையால் ஒன்பதாமிடம் உயர்ந்ததிரிகோணத்தானமென்று சொல்லப்படும்,

---

## மாரகஸ்தானம்.

ஜன்மலக்கினத்திலிருந்து இரண்டாமிடமும், ஏழாமிடமும், மாரகஸ்தானமென்றும், இந்தத்தானாதிபர்கள் மாரகஞ்செய்யத் தக்கவர்களென்றும், இந்தத் தானங்களுக்கு அடுத்ததானங்களாகிய மூன்றாமிடமும் எட்டாமிடமும் முன்சொல்லியபடி மாரகத்தானமென்றும் அந்தத்தானங்களுக்கதிபர்கள் விசேஷமாக மாரகஞ் செய்யத்தக்கவர்களென்றும், ஆறாமிடமும் பன்னிரண்டாமிடமும் பிணி சத்துரு பாபஸ்தானமென்றும் அந்தத் தானாதிபர்கள் பாபபலனைச் செய்வார்களென்றும விதிகளுள்ளன.

இவற்றின் நியாயங்களைப் பலநூல்களிலுமாராயும்போது அ—ம இடமும் அதிலிருந்து எட்டாமிடமாகிய ௩—ம் இடமும் மாரகஸ்தானங்களாகும் இந்த இரண்டுதானங்களுக்கும பன்னிரண்டாமிடங்களாகிய உ—ம் இடமும எ—மிடமும் மாரகஸ்தானங்களாகும.

ஜன்மலக்கினத்துக்கும் (அதிலிருந்து நேராக விருக்கின்ற சமஸ்ப்தமஸ்தானமாகிய) ஏழாமிடத்துக்கும் பன்னிரெண்டாம் இடங்களாகிய (லக்கினத்திலிருந்து) ஆறும் பன்னிரண்டாம் இடங்களும் சரீர பீடை பிணிக்குரிய மாரகஸ்தானங்களாகும். இந்தத்தானதிபர்களே ஒவ்வொரு ஜாதகிகளுக்கும் கஷ்டபலனைச் செய்பவர்களாவர்.

இவர்களுள் உ-ம் எ-ம் இடங்களுக்கதிபர்களையே வடநூலார் கரேமாரகரென்று கூறுகின்றார்.

கிரகங்களின் சுபபலனையும பாபபலனையும் அறியவேண்டியவிதங்கள் இன்னும் பலவுள. அவைகள் வேண்டிய இடங்களிலே காட்டப்படும்.

## ரு-ம் அத்தியாயம்

முற்றிற்று.

---

வி, சபாபதிஐயர்.

---

## சு-ம் அத்தியாயம்.

---

### மகாதெசைபிரிக்கும் வழி.

ஜென்ம நட்சத்திரத்தில் சென்றநாழிகையை அந்தநட்சத்திர தெசாவருஷத்தாற்பெருக்கிப் பரமநாழிகையாற் பிரித்து வந்தது வருஷம், சேஷத்தைப் பன்னிரெண்டாற்பெருக்கிப் பரமநாழிகையாற் பிரித்து வந்தது மாதம், சேஷத்தை முப்பதாற்பெருக்கிப் பரமநாழிகையாற்பிரித்து வந்தது நாள். சேஷத்தை அறுபதாற்பெருக்கிப் பரமநாழிகையாற்பிரித்து வந்தது நாழிகை. பின்னுமிவ்வாறேசெய்து வந்தது விநாடி.

## காலசக்கரதெசை பிரிக்கும்வழி.

ஜென்மநட்சத்திரபாதத்தில் நின்றநாழிகையை அந்தப் பாதத்துக்குள்ள தெசாவருஷத்தாற்பெருக்கி அந்தப்பாதத்துப் பரமநாழிகையாற் பிரித்து வந்தது வருஷம். சேஷத்தை முறையே ௧௨—௩௦—௬௦ ஆல் பெருக்கி அந்தப்பாதத்துக்குள்ள முழுநாழிகையாற் பிரித்து வந்தது மாதம், நாள், நாழிகையாகும். பஞ்சசக்கரத்தையு மிப்படியே பிரித்தறியலாம்.

## இன்னுமொரு வழி.

தற்கால சுத்தசந்திர ஸ்புடத்திலே ஜென்ம நட்சத்திரத்துக்கு முன் இருக்கும் நட்சத்திரங்களைக் கழித்துவிட்டு மீதப்பாகையை ௬௦ ஆற் பெருக்கி கலையாக்கி இதை ௮௦௦ ல் கழித்து அத்தநட்சத்திரத்துத் தெசாவருஷத்தாற் பெருக்கி ௮௦௦ ஆல் பிரித்து வந்ததுவருஷம். சேஷத்தை ௧௨—௩௦—௬௦ ஆல பெருக்கி ௮௦௦ ஆல் பிரித்துவந்தது மாதம், நாள், நாழிகைகளாம்.

---

## பஞ்சசக்கர தெசை.

காலசக்கரதெசையைச் சந்திரஸ்புடத்தாலும், சீவசக்கர தெசை சூரியஸ்புடத்தாலும், பிராணசக்கரதெசை லக்கின ஸ்புடத்தாலும், மனோசக்கர தெசை திதிப் புடத்தாலும், மிருத்துசக்கரதெசை ராகுப்புடத்தாலும், அறியவேண்டும. மேற்சொல்லியபுடங்களிலே அந்தந்த நட்சத்திரபாதத்துக்கு மேலுள்ள நட்சத்திரங்களைக் கழித்துவிட்டு, [illegible]பாகையைக் கலையாக்கி ௨௦௦ ல் கழித்து அந்தந்தநட்சத்திர[illegible] தெசாவருஷத்தாற் பெருக்கி ௨௦௦ ஆல்பிரித்துவந்[illegible] சேஷத்தை ௧௨—௩௦—௬௦—ஆல் முறையே பெருக்கி ௨௦௦ ஆல பிரித்து வந்தது மாதம், நாள் நாழிகை.

# மகாதெசாபுத்தி பலன்.

மகாதெசாபுத்திகள் நடக்கும்போது ராஜயோக வலிமை பெற்ற கிரகங்களும் கேந்திர திரிகோணாதிபதித்துவம் பெற்ற கிரகங்களும் பாக்கியலாபாதிபதிக்கிரகங்களும் தசவர்க்க யோகாம்சமும் [illegible]க்கவலிமையும்பெற்ற கிரகங்களும் (தெசாபுக்திகளுக்கதிப[illegible]) சுபபலனைச்செய்வர்.

மகாதெசாபுக்திகளின் பலனை அறிவதற்குமுன்னே அவற்றின் நற்பலனைத் தடுத்தற்குரிய கிரகஸ்திதிகளை அறியவேண்டியது ஆவசியகமாதலால் அவைகளிற் பிரதானமானவை இங்கேகுறிக்கப்படுகின்றன

அவை: ௨ம், ௩ம், ௭ம், ௮ம், ௧௨ம் இடங்களுக்கதிபர்களின் தெசாபுக்தி நடக்குங்காலமும், மிருத்துகாரகரின் தெசாபுக்திசளின் காலமும், பஞ்சசக்கரங்களிலே தத்துக்களுண்டாகும் காலமும், ஒவ்வொரு தெசைகளிலும் வேதகனாகவருங் கிரகத்தின் புக்தியும், அந்தர்க்கதமான கிரகத்தின் தெசாபுக்திகளும், கோசரங்களிலே குரூரஸ்தானங்களில் நிற்கும் கிரகங்களின் காலமும், சுபபலனுக்குரியனவல்ல. கோசரமுந் தெசாபுத்தியுமாகிய இரண்டுக்கும் தோஷமல்லாதகாலமாயிற் சொல்லியபலன் சரியாகநடக்குமென்றும், இரண்டுந் தீமையாக வரிற் சொல்லியபலன் நடவாமல் தீமைசம்பவிக்குமென்றும், ஒன்று தீதாகவும் ஒன்று நன்மையாகவும் வரில் இரண்டிலும் வலிதுபெற்ற கிரகங்களைக்கொண்டு பலனறிதல்வேண்டுமென்றும், பெரியோர்களுடைய சம்மதம்.

மகாதெசாபுக்தி பலன்களை அறியும்போது மேற் சொல்லியவைகளையும் அறிந்துகொள்ளல்வேண்டும். தெசாபுக்திகளின்பலனை அறியும்போது லக்கினத்திலிருந்து சுபாசுபஸ்தானங்களை அறிவதுபோலவே தெசாநாதர்களிருந்த இடத்திற்குப் புத்தி நாதர்கள் கேந்திர திரிகோ

ணை தன பாக்கிய லாபஸ்தானங்களிலே சுபாம்சம்பெற்றிருந்தால் அந்தப்புக்திகளிலே சுபபலன் நடக்குமென்றும் தெசாநாதர்களுக்குப் புக்திநாதர்கள் சஷ்டாஷ்டம வியஸ்தானங்களிலே குறூராமசம்பெற்றிருந்தால் சுபபலன் நடவாதென்றும் அறிதலவேண்டும்.

---

## மகாதெசைக்குப் போதகன் முதலியோர்.

சூரியன்முதல் சனிவரை மகாதெசாபலனறியும்போது போதகன், வேதகன், பாசகன், காரகன் ஆகிய தொழிற்கிரகங்களையும் அறியவேண்டும். போதகன்முதலிய நால்வரிலும் வேதகன்மாத்திரம் நற்பலனைத் தடுத்தற்குரிய கிரகம். இராகுகேது தெசைக்கு இத்தன்மையில்லை

| மகாதெசை. | போதகன். | வேதகன். | பாசகன். | காரகன், |
|---|---|---|---|---|
| சூரியதெசைங்கு | செவ்வாய் | சுக்கிரன் | சனி | வியாழன் |
| சந்திரதெசைக்கு | செவ்வாய் | சூரியன் | சுக்கிரன் | சனி |
| செவ்வாய்தெசைக்கு | சந்திரன் | புதன் | சூரியன் | சனி |
| புததெசைக்கு | வியாழன் | செவ்வாய் | சந்திரன் | சுக்கிரன் |
| வியாழதெசைக்கு | செவ்வாய் | சூரியன் | சனி | சந்திரன் |
| சுக்கிரதெசைக்கு | வியாழன் | சனி | புதன் | சூரியன் |
| சனிதெசைக்து | சந்திரன் | செவ்வாய் | சுக்கிரன் | வியாழன். |

---

## சூரியன் மகாதெசை ௵ ௬.

இதன்பலன்—பித்தாதிக்கம், இடம்விட்டுத் தேசசஞ்சாரஞ் செய்தல், தனஜனபந்துக்களுக்குள் அக்கசம்பவம், நிலையானபொருள்களுக்குக் கேடு, உத்தியோகபங்கம், ரோகபயம், சோரபயம், தன்முயற்சியினாலே அற்பபலனுண்டாதல், நாலுகாற்சீவன்களுக்குச் சேதமுண்டாதல், அக்

கிஷியம், சூரியன் லக்கினத்துக்கு ௯-ம், ௰-ம் இடங்களிலிருந்தாற் பூமிப்பலன், சௌக்கியம், தனதானியபலன், விவசாயபலன், பிதிர்பக்களிற்பீடை, தேவபூசை, பிராமணபக்தி, ஆசாரக்கிரியைசெய்தல், இராசப்பிரீதி உண்டாகும்.

சூரியன் ஆட்சி உச்சமாகிச் சுபவர்க்கம்பெற்றுச் சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் குதிரை முதலிய வாகனங்கள் சேருதல், முயன்றகாரியஞ் சித்தியாகுதல், வியாபாரபலிதம், பிரபுக்களினாற் பிரீதி இவையுண்டாம்.

சூரியன் நீசமாகி ௮-ம், ௧௨-ம் இடங்களிலிருந்தால் குரூரத்தானாதிபர்களோடு கூடினாலும், துக்கம், தரித்திரம், பீடையுண்டாகும்.

மாரகத்தானாதிபதிகளோடு கூடினால் தேகமெலிவும், இருமாரக சம்பந்தமானால் கடினபீடையுண்டாகும்.

## சூரியமகாதெசையிற் சூரியபுக்தி மீ ௩, நாள் ௰௮,

உச்சம், ஆட்சி, கேந்திரிகோணங்களிலிருந்தால் தேகசுகம், வாகனம் பூஷணாதிகள் பூமி பசு திரவியம் இவைகளுண்டாகும்.

பாபராசியிலே பாபியாய் இருந்தால் சோரரோகாக்கினி பீடை, கடன்கொடுக்கக் கஷ்டப்படுதல், அரசர்பகை, தொழிற்குறைவு சித்தப்பிரமை, சிரநேத்திரரோகம் உண்டாம். சுபபலனும் பாபபலனுஞ் சமமாக இருந்தால் சமமான பலனைச் சொல்லப்படும்.

## சூரியமகாதெசையில் சந்திரபுக்தி மீ ௬.

கேந்திர திரிகோணங்களிலே பூரணனாகின்றால் தனதானியவிருத்தி, கிருகவிருத்தி, பசுவிருத்தி, விவாககாரியப்பிரயத்தனம், வாகனம் உண்டாம்.

உச்சம்பெற்று அதிகபெலனோடு தர்மகர்மாதிகளோடு சம்பந்த

மானல் தாரபுத்திரசுகம், ராஜப்பிரீதி, இஷ்டசித்தி, திரவியவிருத்தி பகைநிவாரணம், பந்துசுகம், உண்டாம்.

நீசம்பெற்றுப் பாபியாய் அஷ்டமாதிபதியுடன் கூடினல் சீதளச்சுரம், ரோகபயம் தார-புத்திரருக்கு மிருத்துப்பீடை, சத்துருபீடை, கலகம, தனதானிய விரயம் உண்டாம்.

தெசாநாதனுக்குத் தன பாக்கிய லாப கேந்திர திரிகோணங்களிலிருந்தால் தானியவிருத்தி, இராசப்பிரீதி, புத்திரவிருத்தி, மனஉற்சாகம், இடம்மாறுதல். அன்னியதேசம்போயிருந்தால் ஊர்வந்து சேருதல், புண்ணியசைங்கிரியம், ஆலய தடாகாதிகள் உண்டுபண்ணுதல், தேவபக்தி, சத்துருநாசம், இஷ்டான்னபோசனம் உண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ ல் இருந்தால் பொருட்சேதம் பந்துத்துவேஷம், மித்துருத்துவேஷம், சத்துரு சோரபீடை, ராசவிரோதம், மித்துருப்பீடை உண்டாம்.

சப்தமஸ்தானத்திலே மாரகாதிபதிகளோடு சம்பந்தமானல் அவமிருத்துதோஷமுண்டாம். வெண்ணிறவஸ்திரம் தானஞ்செய்யவிதி.

## சூரியமகாதெசையில் செவ்வாய் புக்தி

### மாதம் சு, நாள் சு.

லக்கினத்திற்குக் கேந்திரதிரிகோணங்கள் ஆட்சிவீடுகள் தனலாபஸ்தானங்கள் ௩ம், சு ம் இடங்கள், இவைகளிலே இருந்தால் பூமிப்பலன், வியாபாரபலன், பாக்கியவிருத்தி, தானியவிருத்தி, சிவந்த நிறமுள்ள வஸ்திராபரணலாபம், சனுதிகாரம், சத்துஜெயம், இராசப்பிரபுக்கள் மூலமாக வாகனபூஷணதிகள் கிடைத்தலுமுண்டாம்.

நீசமாகிப் பாபியோடுகூடி சு-அ-கஉம் இடங்களிலிருந்தால் பாபகர்மஞ்செய்தல், ராசத்துவேஷம், சத்துருபயம், சுயபந்துவில்நாசம்,

தாரபுத்திரசேடு, எடுத்தகாரியம் அபஜயம், தேகத்திலேரணபீடை, அக்கினிபயம், மனஸதாபம், வியாச்சியம், சரீரவரட்சி, பொருட்சேதம், பூமிப்பலன் குறைவுமுண்டாம்.

லக்கினாதிபதியோடுகூடினால் சுகம், ராசயோகம், தனலாபம், உண்டாம். கேந்திரத்தானத்திலிருந்து மாரகனோடுகூடினால் மூத்தசகோதரபீடை, சத்துருபீடை, அற்பசுகம், அற்பலாபம், அன்னத்துவேஷம், ராஜபயமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோண லாபஸதானத்திலிருந்தால் இலதர்மஞ்செய்தல், சமமான சுபம், சமமானலாபம், ஸதானப்பிரவ்ஷ்டம், புத்திரபீடை, துர்க்கிரியைசெய்தல், பந்துசனப்பீடையுண்டாம்.

மாரகத்தானாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துப்பீடையுண்டாகும். செவ்வாய்க்கு ஜபம் அன்னதானஞ்செய்யவிதி.

## சூரியமகாதெசையில் இராகு புக்தி

### மாதம் கo, நாள் உச.

லக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களிலே யிருந்தால் தனச்சேதம், சோரபயம், இராசமூலத்திலே தனவிரயம், தாரபுத்திரசுகவீனம், சத்துருபயம், விஷபயமுண்டாம.

உச்சமபெற்று லக்கினாதிபதியோடு கூடினாலும, சுபருடனே கூடிச் சுபர்திருஷ்டி பெற்றாலும, தேகஆரோக்கியம, சுபம, தனதானியலாபம, வத்திராபரண வாகனபலன், விவசாயம, கொடுக்கல்வாங்கல் இவைகள் பலனுதலும அகாலபோசனமுமுண்டாம.

லக்கினத்துக்கு அ—அ—கஉ—ம் இடத்தில் பாபியோடுகூடினால் பூமிநட்டம், சோரபயம், காதுகாற்சிவன்களிலே சிலநட்டமடைதல், கிருகப்பிரவேசமுண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ம் இடத்தில் பாபியோகேகூடி யிருந்தால் ராசதண்டனை, சோராக்கினிபயம், மிருகபீடை, பொருள் நட்டம், பிராணபயம், சுரம், குன்மரோகது க்ஷயமாவதுவருதல், தானப்பிரஷ்டம், விஷபீடை, இவையுண்டாம்.

லக்கினாதிபதியோடுகூடிச் சுபர்திருஷ்டிபெற்றால் அதிககீர்த்தி, சுகவிருத்தி, தாரபுத்திரசுகம், வீட்டில் விவாகாதிசுபகருமசயபவம், தானியவிருத்தியுண்டாம். மாரகத்தானாதிபதிகளோடு கூடினாலும் அவர்கள்பார்வையாயினும்பெற்றால் மிருத்துப்பீடை, விஷபயம் உண்டாம். மகிஷதானஞ்செய்யவிதி.

## சூரியமகாதெசையில் வியாழ புக்தி

## மாதம் கூ, நாள் கஅ.

லக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களிலே ஆட்சி வீடுகளிலாவது தனலாபஸ்தானங்களிலாவது தெசாநாதனுடன்கூடினால் விவாகம், ராசதரிசனம், தனதானியலாபம், ஆரோக்கியம், புத்திரசுகம், தேகபுஷ்டி, இராஜப்பிரீதி, வத்திராபரணம், குதிரைமுதலிய வாகனலாபம், கீர்த்தி, இஷ்டசித்தி தாமதத்தில் உண்டாதல் அனுபோகம் சமானமானஜனங்களால் மரியாதை பிரியம சத்துருசெயமுண்டாம.

தர்மகர்மாதிபதிகளோடுகூடினால் இராசமூலத்தில் உத்தியோகம் வாகனம் அதிகாரத்துவமுண்டாம்.

நீசமாய்ப் பாபியுடனேகூடினால் பாவத்தொழில்செய்தல் வீணுகப் பொருள்நட்டம், தேசப்பிரஷ்டம், பயம், ராசகோபம், இஷ்டபந்துக்களுள்நட்டம் உண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரத்திலிருந்தால் புத்திரபலன், ஐசுவரியம், சற்கருமங்கள்செய்தல் ஆரோக்கியம் சிவபூசை விஷ்ணுபூசை

தனதானியவிருத்தி, புராணகாவியங்களைக் கேட்டல், தடாகம் கோபு ரமுதலிவை இயற்றுவித்தல் உண்டாம். தெசாநாதனுக்கு கூ-ல் இருந் தால் தேவப்பிரதிட்டை, மந்திரசித்தி குருபக்தி வாகனம் பூஷணமு ண்டாம்.

தெசாநாதனுக்குப் பதினொன்றிலிருந்தால் சத்துருசெயம், திரவி யலாபம், பூமி வீடு முதலியவையுண்டாம்.

தெசாநாதனுக்கு கூ—அ—கஉ—ல் பாபியோடு கூடியிருந்தால் ராசபயம், சோரபயம், புக்திமுதலிலே எப்போதும் விசனமும், கடை சியிற் சுபபலனுமுண்டாம்.

மாரகத்தானாதிபதிகளோடு சம்பந்தமானால் தேகபீடையுண்டாம். சுவர்ணதானம் ருத்திராபிஷேகம், பசுத்தானஞ்செய்யும்படி விதி.

## சூரியமகாதெசையில் சனி புக்தி

### மாதம் கக, நாள் கஉ.

லக்கினத்துக்குக் கேந்திரதிரிகோண சுவட்சேத்திரங்களிற் சுபர் பார்வைபெற்றிருந்தால் தனதானிய பாக்கியவிருத்தி, சத்துருநாசம், ம னவுற்சாகம், விவாகசம்பிரமம, சுபகர்மஞ்செய்தல், பூமிலாபம், பந்து சனமரியாதை, கல்விவிருத்தி, இராசசேவை உண்டாம்.

பாபர்களோடு சம்பந்தமும் பார்வை பெற்றால் ராசவிரோதம், பந்துக்கள் கலகம், பொருட்சேதம், காரியநட்டம மித்துருகிலேசம நாலுகாற்சீவநட்டம சத்துருபகை உண்டாம்.

தெசாநாதனுக்கு கூ—அ—கஉ—ல் பாபர்சம்பந்தமானால் தார புத்திரபிரிவு தேசசஞ்சாரம் இராசபயம் மானநட்டம் சத்துரு பயம் சூனியப்பிசாசுமுதலியவற்றாற் பயம் தேவநிந்தை குருநிந்தை பணமி ல்லாமை விவசாயம் பசு முதலியவை நட்டம் புக்திமுதலிலே சொற்

பபலனுண்டாம். தெசாநாதனுக்கு லாபஸதானத்திலிருந்தால் தனதானியலாபம் கறுப்புவஸதுக்கள் பல்லுண்டாம்.

மாரகஸ்தானாதிபதிகளோடு சம்பந்தமானால் அவமிருத்துபயமுண்டாம். மிருத்யுஞ்சயஜெபஞ்செய்யவிதி.

## சூரியமகாதெசையில் புதன் புக்தி

### மாதம் க௦, நாள் சு.

லக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களிலே சுவட்சேத்திரம் பெற்றுச் சுபர்களுடனேகூடிப் பெலத்திருந்தால் மனஉற்சாகம் ராசயோகம் தனதானியவிருத்தி நித்தியகருமக்கிரமம் வித்தியா லாபம் கலைக்ஞானமறிதல் பிரபுக்களிட்டம் கீர்த்தி வஸதிரபூஷணங்கள் வாகனம புண்ணியதீர்த்தபலன் வெளாண்மைப்பலன் போசனசுகம இவைகளுண்டாம.

பாக்கியலாபாதிபதிகளோடுகூடி கு—கல் இருந்தால் திரவியலாபம், ராஜப்பிரீதி, தேவப்பிராமணபக்தி, விவாகபலனுண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉல் நீசனுயிருந்தால் புக்திமுதலிலே சுகமும், பின்பு ராசவிரோதம், பசுநட்டம், நோய், பீடையுண்டாம்.

மாரகத்தானாதிபதிகளோடு கூடினல் அவமிருத்துப் பீடையுண்டாம். விஷ்ணுசெபஞ்செய்யும்படி விதி.

## சூரிய மகாதெசையில் கேது புக்தி

### மாதம் ச, நாள் சு.

தேகபிணி, பொருள்நட்டம், சுயபந்துக்களால் காரியநட்டம், ஸதானப்பிரஷ்டம், விரோதம், விஷபயம் உண்டாம்.

லக்கினாதிபதியுடன்கூடினால் புக்திமுதலிலே சுகம், பொருள்வரவு, புக்திமத்தியிலும் அந்தியத்திலுந் துக்கம், மரணக்கேள்வியுண்டாம்

லக்கினத்துக்கு சு—அ—கஉ—ல் பாபருடன்கூடினால் சிரரோகம் பல்நோய், விஷநீர் விருத்தியாகும்நோய், ஸ்தானசலனம், மித்துருத்துரோகம், பிதிர்வழிமிருத்துப்பீடை உண்டாம்,

லக்கினத்திற் சுபருடன்கூடினால் பொருளிலாபம், சற்கருமங்கள் செய்தல், சுபகாரியஞ்செய்தல், புத்திரப்பேறு, சந்தோஷம், குதிரை முதலிய வாகனலாபமுண்டாம். தெசாநாதனுக்கு லாபத்தானத்திலிருந்தால் சுகபலனுண்டாம்.

மாரகத்துக்காதிபதிகளோடு சம்பந்தமானால் அவமிருத்து. அதற்குத் துர்க்காதேவிக்கு சபஞ்செய்யவிதி.

## சூரியமகாதெசையில் சுக்கிரபுக்திஷ்ஸ க.

கேந்திர திரிகோணங்களிலே சுவட்சேத்திரம்பெற்று இருந்தால் அதிகசுகம், சாதுக்கள் தரிசனம், பிராமணவிசுவாசம், இஷ்டமானபெண்களுக்குச் சுகம், பிரயாணம்போய் வருதல், பாபிகளோடுகூடினும் நீசமாயினும் சு-அ-கஉ ல் இருந்தாலும் புத்திரசுகவீனம, வீடுவாசல் பூமி மனைகளுக்குப்பீடை, மாமனைவழிப்பந்துக்களில் விசனம், உத்தி யோகபங்கம, தேகட்ணி, சத்துருபீடை, வீட்டிற்கலகம், இராசஸதிரீ விரோதம, மனத்தாபமு மற்பசுகமுமுண்டாம.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண தன லாபத்தானத்தில் இருந்தால் ராசப்பிரீதி, உற்சாகம், கீர்த்தி, தனலாபம். வாகனலாபம், ஸ்திரீசௌக்கியம், புத்திரசுகம், தேவப்பிராமணபக்தி, ராசமுன்னிலையில் போக்குவரவு, வஸ்திரபூஷணலாபம் உண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ ல் பாபியுடனேகூடினால், ராஜகோபம், தனவிரயம், ஸதிரீபுத்திரபீடை உண்டாம்.

மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துப்பீடைவரும். மகிஷதானஞ்செய்யவிதி.

---

## சந்திரன் மகாதெசை வருஷம் ௧௦

இதன்பலன் ஐசுவரியம், மாதுருசுபம், தருமார்த்தலாபம், வாகனம், சத்துருஜெயம், விவசாயவிருத்தி, புத்திரபலன், சந்தோஷம், போசனசௌக்கியம் உண்டாம்.

லக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களிற் றனலாபத்தில் உத்தமாம்கிஷ சுபவர்க்கம்பெற்றிருந்தால் பொருள்வரவு, பூமிப்பலன் புத்திரபலன, பசுவிருத்தி, விவேகம், கல்விப்பேறு, இராஜமரியாதை இவையுண்டாம்.

௬—௮—௧௨—ம் இடங்களுக்கதிபதியோடு நீசமானால் களத்திர புத்திரபீடை, தனதானியநட்டம், ஜலபயம், தேசசஞ்சாரம், சுகக்குறைவு இவை பொதுப்பலன். இதில்முற்கூறு சுகம், சந்தோஷம், கீர்த்தியும், நடுக்கூறு தாரபுத்திரர் வீடு பொருள் இவற்றொன்று பீடைப்படல், கடைக்கூறு சுகம கீர்த்தி இஷ்டபோசனம் ஆபரண பூஷணமுண்டாம்.

## சந்திரன்மகாதெசையிற் சந்திர புக்தி மாதம் ௧௦ வரும்

இராசப்பிரீதி, விவாகம், புத்திரபலன் கிராமாதிகாரம், வாகனம் இவையுண்டாம்.

கேந்திரகோண லாபஸ்தானங்களிலே சுபரோடிருந்தால் ராஜயோகம், கீர்த்தி, சுகம் தேவபக்தி, சுபசோபனாதிகளுண்டாம்.

பூர்வபக்ஷச் சந்திரனாய் ௯—ல் இருந்து பாக்கிய கர்மாதிபதியோடு சம்பந்தமானால் தேவபக்தி, புராணகாவியமறிதல், புண்ணிய தீர்த்தப்பலனுமுண்டாம்.

௩—௮—௧௨—ல் நீசனாக இருந்தால் மனவியாகுலம, கோபம, இராஜவிரோதம், தேக ஆயாசம, பொருட்செலவு, வடதிசையிற்பிரயாணஞ்சம்பவித்தால், இஷ்டஜனங்களாற் கஷ்டம்வருதலுமுண்டாம

ஆறதிபதியானது செவ்வாயாவது சந்திரனோடுகூடினால் ஆபுத்பயம, மித்துருபந்துக்கேடு தன்எசமானுக்குக் கேடு உண்டாம்.

மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துப்பிணி உண்டாம தேவிக்குவழிபாடுசெய்து பசுதானஞ் செய்யவிடு.

## சந்திரன்மகாதசையிற செவ்வாய்புக்தி ௴ ௭.

லக்கினத்துக்குக் கேந்திர திரிகோண ஸ்வட்சேத்திரங்களில் இருந்தால் மரியாதை, தேகசுகம், ராசப்ரீதி, முயன்றகாரியஞ் சித்திபெறுதல், பூமிப்பலன், வீட்டுத்திருத்தம், செல்வவிருத்தி, வஸ்திராபரணச்சிறப்பு உண்டாம்.

௨—௮—௧௨—மிடங்களிலே பாபிகளுடனே கூடிச் சத்துருவீட்டிலிருந்தால் நல்லகாரியங்களைச் செய்தாலும் ராஜபயமும், அபகீர்த்தியும், சுபசனங்களாலே விஷ்கிரமாணவாக்கும், கலகமும துக்கமும் தேசாந்தரந் திரிதலும். தேகத்திலே உஷ்ணரோகமும, அதிகவிசனமும, சோராக்கினிபயமும பொருள்நட்டமும சித்தப்பிரமையும் பெண்விஷயமாகத் துயரமு முண்டாம.

ஆட்சிவீட்டிலே லாபஸ்தானம்பெற்றுச் சுபர் பார்வையோடிருந்தால் வாகனபலன் பசுவிருத்தி தனதானியசம்பத்து வஸ்திராபரணபலன் விவசாயவிருத்தி உண்டாம.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபங்களில் லக்கினாதிபதி முதலிய நற்பலனுக்குரிய கிரகங்களோடுகூடினாலும், ரு—கூ—க0—க்குடைய அதிபதிகளுடனே கூடினாலும் ராஜஅனுகூலந் தனதானியவிருத்தி பலவகையான தொழில்விருத்தி வாகன பூஷணபலன் இரத்தினஆபரணம் பூமி ராஜாபிமானம் புத்திர மித்திர களத்திர சுகமுண்டாம்.

தெசாநாதனுக்காயினும் லக்கினத்துக்காயினும் மாரகாதிபதிகளோடு சம்பந்தமானால் தேகபிணி, ரணபீடை, ஆயாசம், மனோவியாகுலம், தனவிரயம், அவமிருத்துதோஷமுண்டாம். சிவார்ச்சனைமுதலிய வழிபாடுசெய்யவிதி.

## சந்திரன்மகாதெசையில் ராகு புக்தி

### வருஷம் க, மாதம் சு

ராகு சுபர்களோடுகூடிச் சுபர்திருஷ்டிபெற்றாலும், லக்கினாதிபதியுடனேகூடிக் கேந்திர திரிகோணஉச்சராசியிலிருந்தாலும், புக்திமுதலிலே சுகம், லாபம், சத்துருசெயம், மத்தியிலேசோரபயம் ராஜபயம் உண்டாதலும், பிற்கூறில் தனதானியவிருத்தி பிரபுக்கள் கூட்டம் மேற்றிசையிலிருந்து பலனடைதலுமுண்டாம்.

ராகு அஷ்டமாதிபதியோடு சம்பந்தமானால், கட்டுப்பாடு ராஜதண்டனை. செவ்வாயுடனேகூடினால் ஆயுதபயமுண்டாம். சுபர்சம்பந்தமாயிருந்தால் பிரபுக்களாற்பலன், ஆரோக்கியம், கீர்த்தி தனதானியம், ஸ்திரீலாபம் உண்டாம.

தெசாநாதனுக்கு உ—அ—கஉ—ல் பாபியோடு கூடியிருந்தால் பொருள்நட்டம தாரபுத்திரபீடை அவமிருத்துப்பயத்தினால் வியாதி தானப்பிரஷ்டம் சத்துருவிருத்தி விஷபீடை பாபகர்மமுண்டாம்.

தெசாநாதனுக்கு லாபஸ்தானத்தில் சுபாப்சத்திலிருந்தால் லாபம் சுபம தனதானியவிருத்தி அன்னியதேசசஞ்சாரம குடும்பத்... தானல்லாத மற்றைய சனங்களுக்குப் பிணிபீடை உண்டாகும.

மாரகாதிபர்களோடு சமபந்தமாகி மாரகத்தானங்களிலிருந்தால் அவமிருத்துதோஷமுண்டு. அதற்குச் சிவதானஞ்செய்யவிதி.

## சந்திரன் மகாதெசையில் வியாழபுக்தி

### வருஷம் க, மாதம் ச.

லக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களில் ஆட்சிவீட்டிலிருந்தால் புத்திரசுகம், வாகனபலன் அலங்காரத்துக்குரிய வஸ்திராபரணங்கள் தேவப்பிராமணபூசை ராஜப்பிரீதி திரவியவரவு இஷ்டதேவ அனுகிரகம் கெங்காஸ்நான முதலிய தீர்த்தஸானபலன் வீட்டிலே சுபசம்பவங்கள் நடத்தல் பசுமுதலியவை சேருதலுமுண்டாம.

சு—அ—கஉ—மிடங்களிலே பாபிகளோடுகூடி நீசாஸதமனமுதலிய தோஷங்களையடைந்தால் புத்திரபீடை தன்னுடைய குருவுக்குப்பீடை தனநாசம், நிலைபிரிதல், வாகனநட்டம், தன்னுடைய பொருள் தன்முன்னோரால் தனக்குக்கிடைத்தபொருள் இவைகளுக்குநட்டமுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண தன லாபங்களிலிருந்தால் சுகபோசனம், வீட்டிலே சுபகாரியங்கள் நடத்தல், பிரபுக்கள் தரிசனம், கீர்த்தி, வாகன வஸ்திர பூஷணலாபம், தனலாபம, குடும்பவிருத்தி குருபக்தி பிராமணபக்தி அன்னதானஞ்செய்தல் யாகாதிகருமங்கள் செய்தல் ராசஅனுசரிப்பு செய்யுங்காரியங்களிலே பொருள்வரவும வெற்றியுமுண்டாதலுமாம்.

மாரகாதிபர்களோடு சமபந்தமானால் அவமிருத்துதோஷமுண்டாகும. குருவுக்கு ஜெபம், மிர்த்யுஞ்சயஜெபம் சுவர்ணதானஞ் செய்யவிதி.

## சந்திரன்மகாதெசையிற் சனிபுக்தி வருஷம் ௧, மீ ௭

சனி லக்கினத்துக்கு லாப கேந்திர திரிகோணங்களில் சுபாம்சம்பெற்றிருந்தால் அற்பசௌக்கியம், சொற்பலாபம், எடுத்தகாரியங்களுக்கு விக்கினம சுயபந்துவிரோதம் மனப்பயம் துக்கம் பசுமுதலிய விருத்திகேடு அன்னியதேச சஞ்சாரம் சுகவீனம் இவைகளுண்டாம்.

சனி தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணங்களில் உச்ச ஆட்சி வீடுகளில் ௩—௬—௧௧ மிடங்களில் இருந்தால் பூமிப்பலன் புத்திரலாபம், நூதனமான கிருகம், சுட்சம்பவங்கள் நடத்தல், ராசசினேகம், விசேஷபூஷணங்கள் வாகனதிரவியங்கள் சேருதல் எண்ணியகருமம் அனுகூலமாதல் கிராமாதிகாரம சொற்பசனங்களுக்காயினுந் தலைமை உண்டாம.

௨—௮—௧௨ம் இடங்களில் நீசமாகிச் சுபக்கிரகங்களுடன் கூடினால் சுபபலனும், பாபரோடுகூடினால் குடும்பசுகக்குறைவு, பிதிர்மாதுருபீடை, குன்மத்துக்குரிய அசீர்ணம் வாய்வு, வாதரோகம் இவற்றொன்றுசம்பவித்தல் அன்னியஸ்திரீகளோடு சகவாசஞ்செய்தலு முண்டாம்.

மாரகத்தானாதிபதிகளோடு கூடினால் வாதம்முதலியபிணிகாணப்படும் இலதைலதானமுதலியவை செய்ய விதி.

## சந்திரன்மகாதெசையிற் புதன்புக்தி வருஷம் ௧, மாதம் ரு.

புதன் லக்கினத்துக்குக் கேந்திர திரிகோண தனலாப ஆட்சிவீடுகளிலிருந்தால் வித்தியாவினோதமான கேள்வி ஆராய்வுகளும், கல்வித்திறமையும், வியாபாரமூலமாய் லாபமுண்டாதலும், சுயசனங்களால் சந்தோஷமும், ராசப்பிரீதி, அபூர்வமான வஸதிரம் முதலிய பொருள்கள் கிடைத்தலும், குதிரைமுதலிய வாகனங்கள்சேருதலும்,

விரைவாக விவேகஞானம், சாஸ்திரஆராய்வு உண்டாதலும்," ஒருகாரியமூலமாகப் பொருள்நட்டமுண்டாகி அதிலிருந்து அதிககவனமுமுண்டாகும்.

சு—அ—கஉ ம் இடங்களிலே நீசமாகிப் பாபிகளோடுகூடியிருந்தால் புக்திமுதலிலே தேகபிணி, தாரபுத்திரர்களுக்கு வாதபித்த அசீர்ண ரோகங்களுண்டாதல், தேசசஞ்சாரம், ராஜபயம், சோராக்கினிபயமுண்டாம்.

லக்கினதிபதியுடனே கூடினல் முற்கூறிலே பொருட்பலன், ராஜப்பிரீதி, தேகசுகமுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோண லாபத்திலிருந்தால் விவாகாதி சுபபலன்கள் தருமச்செய்கைமுதலிய சற்கருமங்கள் நடக்கும்

தெசாநாதனுக்கு சு—அ—கஉ ல் இருந்தால், அல்லது இந்தத் தானங்களுக்கு அதிபதிகளோடும் பாபியோடுங் கூடினுல் நோய், விசூலம், சிரரோகம, துர்க்கிருத்தியஞ்செய்தல், காரியக்கேடும் உண்டாம்.

மாரகாதிபதிகளுடன் சம்பந்தமானல் அவமிருத்து தோஷமுண்டாகும். விஷ்ணுசெபம் முதலிய வழிபாடுசெய்யவிதி.

## சந்திரன் மகாதெசையிற் கேது புக்தி மாதம் எ வரும்.

கேது கேந்திரதிரிகோணங்களில் லக்கினதிபதி அல்லது சுபருடன்கூடி உச்சத்திலிருந்தாலும், சுபர்பார்வைபெற்றாலும், விவாகப்ராப்தி, ராஜப்பிரீதி, விவசாயமனுகூலமடைதல், பசு எருது முதலியசிலாபமுமுண்டாம்.

மேற்சொல்லிய தானங்களிலே பாபியோடுகூடினல் தேசசஞ்சாரஞ்செய்வதில் அலைச்சலும், சத்துருபீடை, குனியரோகம் உண்டாம்.

தலும், வியாச்சியஞ்சம்பவித்தல், பந்துசனப்பீடை, மனைவியாகுலமுண்டாம்.

மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்துதோஷமுண்டாகும் வெள்ளியினால் நாகஞ்செய்வித்து தானஞ்செய்யவிதி.

## சந்திரன்மகாதெசையில் சுக்கிரபுக்தி ௵ க-மீ அ

லக்கினத்துக்கு லாப கேந்திர திரிகோணங்களில் அதிகபெலனடைந்த கிரகத்தோடுகூடினால் ராசயோகத்துக்குரியபலன் நடக்கும.

லக்கினத்துக்கு உ—ச—எ—ம் இடங்களிலிருப்பினும், உ-ச-எம் இடங்களுக்கு அதிபர்களோடுகூடினாலும், நூதனமானவஸ்துக்கள் கிடைச்சல் தனக்கு இஷ்டமானபோசனம், வாகனம், பூஷணாதிகள், பசுமுதலிய சீவலாபம், தாரபுத்திரசௌக்கியம், தனக்குத் திருப்தியான சயனசுகம், ஸதிரீசனங்களாற் சுகபலனுமுண்டாம்.

தெசாநாதனுடனே கூடினால் அதிகாரஞ்செலுத்துதல், வீட்டிலே லட்சுமி விலாசமாயிருத்தல், சுபகாரியங்கள் நடத்தல், கீர்த்தி, கல்வியினாற் சுகபலனுண்டாதல், பிதிர்மாதுரு வெந்துச்சுகமுண்டாம்

நீசமாய் அஸதமனத்தில் பாபியோடு கூடியிருப்பினும், செவ்வாயின்பார்வைபெற்றாலும், பூமிநட்டம், சிரசில்நோய். அலைச்சல், களத்திரசுகவீனம், வாகனக்கேடு, ராசகோபமுண்டாம்.

ஆட்சிஉச்சவீட்டில் பாக்கியாதிபதியோடுகூடினால் செல்வவிருத்தி, தவப்பலன், தானதருமங்கள்செய்தல், தேவபக்தி, பூமிலாபம, தாரபுத்திரசுகம், பூஷணச்சிறப்பு, மனவுற்சாகமுண்டாம்.

தெசாநாதனுக்குத் தன லாப கேந்திர திரிகோணங்களில் இருந்தால் அதிககீர்த்தி, சுகம், ராசப்பிரீதி. வீடுவாசல் திருத்தமாய் விருத்தியடைதல், வித்தியாவினோதஞ்செய்தல், வாகனம பசு இவைசேருதல்,

விவசாயத்தினாற்பலன், சாதுக்களுக்குப் போசனஞ்செய்வித்தல், மதுரமான நல்லபோசனங்கிடைத்தல், தன்னுடைய ஸ்திரீக்கு அதிககீர்த்தியும் சுகமுமுண்டாதலுமாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ல் பாபியோடு கூடினால் அதி, கஷ்டம், அனேகசனங்களுக்குச் சத்துரு, கலகம, பந்துசன வெறுப்பு பரஸ்திரீமோகம், சத்துருவிருத்தி, பொருட்குறைவு, தார புத்திரபீடை, ராசபயம், அன்னியதேசசஞ்சாரமுண்டாம்.

மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துதோஷம் வரும். உருத்திரசெபம வெள்ளித்தானஞ்செய்யவிதி.

## சந்திரன்மகாதெசையிற சூரியபுக்தி மீ சு.

கேந்திர தன லாபத்தில் ஆட்சிவீட்டில் அதிகபெலனோடிருந்தால் முன்னட்டமானபொருள் உததியோகம் முதலியவை வருதலும், வீட்டிற் சுபசோபனாதிகள் நடத்தல், மித்துரு பிரபுக்களினால் அனுகூலம் பூமிலாபமுமுண்டாம்; புக்திமுடிவிலே தேகத்திற்கு ஒருபிணி உண்டாகும்.

அ—கஉ ம் இடங்களிலே பாபியோடுகூடி பாபர்திருஷ்டி பெற்றிருந்தால் மனோவியாதி, குன்மம, வாதபித்தம், பிதிர்வர்க்கத்திலே விசனம, நாற்காற்சீவனங்களுக்குச்சேதம், சத்துரு அக்கினி அரசர்பயம் உண்டாம்.

லக்கினாதிபதி பாக்கியாதிபதிகளோடுகூடினால் முற்கூறு சுகம், பிற்கூறு மானபங்கம், விசனம், பிதிர்மாதுருபீடையுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்திலிருந்தால் தேகசுகம், வஸ்திரபூஷணலாபம், மனவுற்சாகம், சந்தோஷம், சாதுதரிசனையுண்டாம்.

தெசாநாதனுக்கு ௧—௮—௧௨ல் பாபியோடுகூடினால் ராசபயம், திருடர் அக்கினி இவற்றினாலும் பீடை, சுரம் குன்மம் அதிசாரம் இவைகளிலொன்று காணப்படும்.

மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துதோஷம்வரும். சூரியநமஸ்காரஞ்செய்யவிதி.

---

## செவ்வாய் மகாதெசை ௵ எ.

இதன்பலன்:—தேகசுகக்குறைவு, ராசகோபம், சோராக்கினிபயம், விசனம், சிரரோகம், கலகம், பூமிநட்டம், கண்ணோய், பிசாசபயம், சத்துருபீடை, குடும்பப்பிரிவு, வீட்டிலேசிலபீடை, பிரயாணம், புத்திரபீடை இவைகளுண்டாம்.

செவ்வாய் ஆட்சி உச்சங்களில் ௩—௬—௧௦ ம் இடங்களில் இருந்தால் அந்தெசையில் அதிகபொருள்வரவும், பிரபுக்கள்மதிப்பும், புத்திர மித்திர சகோதரவர்க்கங்களில் அதிகபலனுமுண்டாம்.

செவ்வாய் நீசாஸ்தமனங்களில் பாபியாயிருந்தால் புத்திரர் மித்திரர்களிலாயினும் வீடுபசுக்களிலாயினும் ஒருபீடையுண்டாதலும், தேகத்திலே மேகரோகம் குன்மரோகங்களில் ஒன்றுக்குரிய காரணங்களுண்டாதலும், சகோதரபீடை பொருட்சேதம், சோராக்கினி ஆயுதம் இவற்றென்றாற் பீடைவருதலுமுண்டாம்.

### செவ்வாய்மகாதெசையில்செவ்வாய்புக்தி

### மாதம் ௪- நாள் ௨௭

கேந்திர திரிகோணங்களில் லக்கினாதிபதியுடன் கூடினால் அற்ப

சுகம் சொற்பலாபம் ஒவ்வொருகாரியங்களிலும் முதலில் சாமதத்தைக் கொடுத்து முடிவிலே பலன்செய்தலும், சகோதரர்களோடு பகையும, வெளதுக்களுள் வியாச்சியமுமுண்டாம்.

செவ்வாய் ஆட்சி உச்சமாய் சுபரோடுகூடி சுபர்திருஷ்டிபெற்றால் பொருள்வரவு, லட்சுமிகடாட்சம, ராசாங்கத்தில் உத்தியோகம, முன்தவறிப்போனபொருள் கைகூடுதலும, தனதானிய விருத்தியுமுண்டாகும.

செவ்வாய் நீசாஸதமனம் அல்லது சத்துருவீட்டில் அ-கஉ ம் இடங்களில் இருந்தால் மனத்தாபம், சோராக்கினிபயம, சகோதரவெறுப்பு, பந்துவிரோதம், அன்னியக்கிருகவாசமுமுண்டாம்.

மாரகத்தானாதிபதிகளோடு கூடினால் அகமிருத்து தோஷமுண்டாம், சுப்பிரமணியக்கடவுளை வழிபாடுசெய்யவிதி.

## செவ்வாய்மகாதெசையில் ராகுபுக்தி

### வருஷம் க, நாள் கஅ.

இதன்பலன்: மனைவியாலுலப், தனமுயற்சிக்குறைவு, பொருட்சேதம, மிருகநட்டம், கலகம், சத்துருவிருத்தி, பிதுபயம், வாய்வுவருத்தம, செளரடுடங்களிலே கஷ்டமனுபவித்தல, இவையுண்டாம்.

ராகு லக்கினாதிபதிமுதலிய சுபரோடுகூடிக் கேந்திரதிரிகோணங்களிலிருந்தால், பூமிப்பலன் உத்தியோகபலன் பொருட்பலன் களத்திரசுகம், தன்முயற்சிகைகூடிவருதல் புண்ணியதீர்த்த ஸ்நானம், அன்னியதேசகமனம் பந்துசனங்களிலே துக்கசம்பவம் குருபக்தி, விசேஷமானகாரியங்கள் பெரியோர்மூலமாக அனுகூலமடைதலுமுண்டாம.

அட்டமத்திலே சுபர்திருஷ்டி பெற்றிருந்தால் தேகத்திலேநோயுண்டாகும, பலவிதமான பயங்கரங்களைக்கொடுக்கும்

ராகு லக்கினாதிபதியுடன் கூடினாலும் தெசாநாதனுக்கு லாபத்தானத்திலிருந்தாலும் மனச்சந்தோஷம் ராசப்பிரீதி பிதாவுக்குப்பலன் பொருள்விருத்தி உண்டாம்.

புக்தி முதலில் துன்பம், மத்தியிற் சமபலன். அந்தியத்தில் விசேஷமான பலன்களுமுண்டாம்.

ராகு மாரகாதிபதிகளோடுகூடினால் அபமிருத்துதோஷமுண்டாம், சர்ப்பதானஞ்செய்யவிதி.

## செவ்வாய் மகாதெசையில் வியாழபுக்தி

## மாதம் ௧௧, நாள் ௨௬.

பொருட்சேதம், சத்துருபீடை, கலகம் உண்டாம்.

கேந்திரதிரிகோணங்களிலிருந்தால் பெரியோர்களால் கீர்த்திபெறுதல், ஆபரணாதி வாகனம் இவைகளும், தான் ஆரம்பிக்குங் காரியம் முடிவுபெறாமல் பிறராலே தடைபட்டுப் பின்பு சிரமத்தோடுஞ் செளபலனோடும் அனுகூலமாதலுமாம.

உச்ச ஆட்சிவீடுகளில் சுபக்கிரகங்களுடனேகூடி லக்கினத்திற் சுபாமசம்பெற்றிருந்தால், பெரியோர்களாலே ஐசுவரியவிருத்தியும் தனதானியசம்பத்தும், எடுத்தகாரியங் கைகூடுதலும, பிரபுக்கள் சேர்வு, வீட்டிலே சுபசம்பவங்கள் நடத்தலும, தேகசௌக்கியமும பித்ர்மாதுருசுகமும விவசாயம பசுமுதலியவை விருத்தியடைதலு முண்டாம.

லக்கினத்துக்காயினும் தெசாநாதனுக்காயினும ௬—௮—௧௨ ல் பாபியாய் பாபர்களுடைய திருஷ்டியும பெற்று நீசமாயிருந்தால் சோரபயம ராசதண்டனை விஷபயம வியாதி இடப்பெயர்ச்சி சகோதர பீடை, போசனக்குறைவு உண்டாம.

மாரகத்தானாதிபதிகளோடு கூடினால் அபமிருத்து தோஷமுண்டாம்; சிவசகச்சிரநாமார்ச்சனை சுவர்ணதானஞ்செயய்விதி.

## செவ்வாய்மகாதெசையில் சனிபுக்தி

### வருஷம் க, மாதம் க, நாள் கூ.

மனக்கிலேசம், நிலபிரிதல், கலகம், வியாச்சியம், பொருட்சேதம், தேகத்திலே விஷநீர்வாதை உண்டாம்.

சனி ஆட்சி உச்சத்திலாயினும் கேந்திரதிரிகோணங்களிலாயினும் சுபாம்சமபெற்றிருந்தால் ஐசுவரியம், கீர்த்தி, சுகம தானியங்கள் விருத்தி, புத்திரர் வெகுச்சிறப்பு உண்டாகும.

அ—கஉ—ல் பாபியாயிருந்தால் மனப்பயம், பொருட்சேதம, இராஜபயம் அன்னியதேசகமனம் சத்துருபீடை சொந்தமான வெந்துக்களில் விசனம் உண்டாம்.

மாரகாதிபர்களோடு சம்பந்தமானால் அவமிருத்துதோஷமுண்டாகும். சனியைக்குறித்து வழிபாடுசெய்க.

## செவ்வாய்மகாதெசையிற்புதன்புக்தி

### மாதம் கக, நாள் உஎ.

பொருள்வரவு, லட்சுமீகரம், பிணிநீக்கம், விஷபயமுண்டாம.

கேந்திர திரிகோணங்களில் சுபாம்சம்பெற்றிருந்தால் அதிகவிவேகம், புண்ணியசரித்திரங்களை அறிதல், தருமஞ்செய்தல், சுகபோசனம் கீர்த்தி வாகனபலன் நீதியாணநடை இவையுண்டாம்.

நீசாஸ்தமன தோஷத்தோடு சு—அ—கஉ ம் இடங்களிலிருந்தால் இருதயத்தில்நோய், பந்துசனம் தாரபுத்திரர் இவர்களுள்ளே ஒருவருக்குப்பீடை பிறவிடங்களுக்குப்போகும்போது சரீரத்திலே தழும்பு கலகம் உண்டாம்.

தெசாநாதனுடன் கூடினால் அதிகபயம் அன்னியதேச பிரயாணம், பலவிதநோய், சத்துருவிருத்தி உண்டாம.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணங்களிலாவது உச்சஸ்வக்ஷேத்திரங்களிலாவது இருந்தால் சனாதிகாரம், கல்விதேர்ச்சி, வஸ்திராபரணச்சிறப்பு, வித்தியாவினோதமான பலசம்பவங்கள் லட்சுமிகடாட்சம் வாகனபூஷணங்கள், தாரபுத்திரசுகம் உண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினால் அவமிருத்துதோஷம்வரும், அசுவதானம் விஷ்ணுஜபம் செய்யவிதி.

## செவ்வாய் மகாதெசையில் கேது புக்தி

## மாதம் ௪, நாள் ௨௭

தேகபிணி. ஸ்திரீஜனங்களாற் பகை சத்துருபயமுண்டாம்.

லக்கினத்துக்குக் கேந்திரதிரிகோணங்களில் லக்கினாதிபதிமுதலிய சுபருடனே கூடினால் புக்திமுதலிலே அதிகசெலவு, சிரமம் அற்பசுகம், இவைகளும் [illegible] பூமிப்பலன் நூதனப்பிரபுக்கள் சிநேகம் பொருள்வரவு. புக்திமுடிவிலே பிணிபீடைகளுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோணங்களில் பாபியோடு கூடினால் மனப்பயம் விசனம் சத்துருபகை வெந்துசனங்களாலுபத்திரவம் சகோதரவர்க்கபீடையுண்டாம். இடம்பிரிந்திருந்தாற் சொற்பசௌக்கியமுண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨ல் பாபியோடுசம்பந்தமானால் கலகம பல்நோய் பொருள்நட்டமுமுண்டாம்.

மாரகசம்பந்தமானாலும் ௨—௭—ல் இருந்தாலும் மிருத்துப்பீடை உண்டாம. சர்ப்பதானஞ்செய்து சாதுக்களுக்கு அன்னங்கொடுக்க விதி

## செவ்வாய்மகாதெசையிற் சுக்கிரபுக்திமீ௱ கா.

பொருள்வரவு, தேவபக்தி, பிராமணபக்தி, ஸ்திரீகளினற்பலன், தேகத்தில் விஷநீர், உஷ்ணரோகம் உண்டாம்.

லக்கினத்துக்குக் கேந்திர திரிகோணங்களில் இருந்தால் புண்ணியதீர்த்தஸ்நானம், தேவதரிசனை, முன் பிறதேசங்களிற் போயிருந்தால் ஊர்வந்துசேருதல், சற்கருமங்கள்செய்தல், மனஉற்சாகம், தருமமுயற்சி உண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ல் இருந்தால் தேகசுகவீனம், பொருட்குறைவு, இடம்பிரிதல், விசனம், ரணபயம் உண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினுல் அபமிருத்துதோஷமுண்டாம். மகிஷதானஞ்செய்யவிதி.

## செவ்வாய்மகாதெசையில் சூரியபுக்தி

### மாதம் சு- நாள் கா.

மனேவியாகுலம், சத்துருபயம், பெரியோராற்றுன்பம், தேகத்தில் உஷ்ணரோகம் இவையுண்டாம்.

லக்கினத்துக்குக் கேந்திரதிரிகோணங்களில் ஆட்சிவீட்டிலிருந்தால் கீர்த்தி, சுகம், காரியங்கள்பரர்ப்பதில் அதிகசிரமம், சோரபயம், புக்திமுதலிலும் இறுதியிலும் மனவிசனமுண்டாம்.

லக்கினதிபதியுடன்கூடினுல் சந்தோஷம், வஸ்திரபூஷணபலன் பொருள்வரவு உண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோணங்களில் இருந்தால் பிரபுசன்மானம், சுபகாரியங்கள்நடத்தல், பொருள்விருத்தியுமுண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் இருந்தால் தொடங்கியகாரியங்கள் தடைப்படுதல், தேகபிணி, பயம் உண்டாம்.

பாபராசியிலே மிருத்துசம்பந்தமானால் அவமிருத்துதோஷம் வரும். சூரியபிரீதி, தீர்த்தஸ்நானஞ்செய்யவிதி.

## செவ்வாய்மகாதெசையில் சந்திரபுக்தி ௴ ௭.

பொருள்வரவு, பூமிப்பிரயோசனபலன், பசுமுதலியவை விருத்தியடைதல், முத்துப் பொன் விசேஷமானவஸ்திரஞ்சேருதல், தானசனம் இவையுண்டாம்.

பூர்வபட்ச சந்திரனாய் கேந்திரதிரிகோணங்களில் அல்லது ஆட்சி லாபஸ்தானங்களில் இருந்தால் பாக்கியவிருத்தி, களத்திர புத்திரசம்பத்து, நல்லகாரியங்களைச் செய்தல், சகோதரசுகம், புண்ணியதீர்த்தஸ்நானம், தெய்வவழிபாடு, சுகபோசனம், வாகனலாபம், பால் பசுவிருத்தி, பிரயாணம்போனவிடங்களில் தெய்வவழிபாடு, பெரியோர்களுடைய கூட்டமுண்டாம்.

௭—ம் ௯—ம் இடங்களுக்கதிபதி அல்லது குரு இவர்களோடுகூடிச் சுபக்கிரகங்களுடைய பார்வைபெற்றால் ராசஉத்தியோகம், தன் மனதுக்குச் சந்தோஷமான சம்பவங்கள்நடத்தல், அல்லது தேவாலய திருப்பணி, தேவவழிபாடு, பூஜை, செபதியானாதிகள், முதலிய சற்கிரியைகளுண்டாம்.

நீசத்திலாயினும், சத்துருவீடுகளிலாயினும் ௬—௮—௧௨ ம் இடங்களிலாயினும் இருந்தால், தன்னைக்குறித்து அதிகபயம், சுபக்குறைவு, பொருட்குறைவு, தானியக்குறைவு, பசுமுதலியபீடையுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபஸ்தானத்திலிருந்தால் பிதாவுக்குச்சுகம், பந்துசனசந்தோஷம், புண்ணிய சரித்திரங்களை அறிதல், சுயசனவதிகாரம், வெற்றி உண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ம இடங்களிலிருந்தால் மனப்பீடை, துக்கம், புத்திக்குறைவு, காரியதாமதம் உண்டாம்.

மாரகாதிபதிகளோடு சம்பந்தமானால் அவமிருத்துதோஷமுண்டாம். அசுவதானம், தேவிக்கு ஜெபம் பூஜைசெய்யவிதி.

---

## இராகு மகாதெசை ௵ கஅ.

இதன்பலன்:—ராகு மேடம் இடபம் கர்க்கடகம் கன்னி விருச்சிகம் மகரம் கும்பம் இந்தராசிகளிலொன்றிருக்க இந்த இடம் லக்கினத்திலிருந்து கேந்திர திரிகோண தனபாக்கிய லாப சஷ்டமஸ்தானங்களிலொன்றாக வரில் அத்தெசை ராஜயோகத்தையும், குடும்பவிருத்தியையும் எவர்களும் மதிக்கும்விதமான அதிகீர்த்தியையும் ஐசுவரியத்தையும் கொடுக்கத்தக்கதாகும்.

இந்தராசிகளிலல்லாத மற்றையராசிகளிலும் மேற்சொல்லியசுபத்தானமல்லாதவிடங்களிலும் இருந்தால் விசனம், பித்தரோகம், புத்திக்குறைவு, துக்கம், நற்கருமங்களைச் செய்யத்தக்க விதமிருக்கவும துர்க்கருமங்களையே செய்தல், தன்முயற்சியினாலே சம்பாதித்த பொருளை யேலோரபகரித்தல் தேகபீடை சாசபயம் தானப்பிரஷ்டமுண்டாம

### இராகுமகாதெசையில் இராகுபுக்தி

### வருஷம் உ, மீ அ நாள் கஉ.

தனக்கு மேலாயிருக்கும் அதிகாரிக்குப்பீடை, மனத்துன்பம், களத்திரபீடை, விஷபயம், கோட்சொல்லுதல்காரணமாகக் கலகம், பொருட்சேதம், வாதரோகம், இடம்மாறுதல் உண்டாம்.

அதிகபெலனடைந்த லக்கினாதிபதியுடனே கூடி முன்சொல்லிய (ராசயோகத்துக்குரிய) ராசிகளிலொன்றில் இருந்தால் கீர்த்தி ராச அனுகூலம், அன்னியதேசப்பொருள்வரவு, புத்திரபலன், வஸ்திர பூஷணச்சிறப்பு, பிரயாணம்போனவிடங்களிலே பலனடைதல், லட்சுமி கடாட்சம் வீட்டிச்சிறப்பு இவைகளுண்டாம்.

லக்கினத்தில் எ—கூ—ம் இடங்களில் பாபியோடுகூடினால் மாதுருபிதிர்பீடை புத்திரசோபம் மிருகநட்டம் சுயசனங்களால் விசனம்; அசீர்ணரோகம், உண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினால் அவமிருத்துதோஷம் வரும. தேவிக்குவழிபாடுசெய்யவிதி.

## இராகு மகாதெசையில் வியாழ புக்தி

## வரு உ, மாதம் ச நாள் உச.

ராஜாக்களால் நன்மை பிரபுக்களாற் பொருள்வரவு மனச்சந்தோஷம தொடங்கியகருமங்கள் சித்திபெறுதல் வியாதிசாந்தி மங்கலச்சிறப்புமுதலியவை உண்டாம.

கேந்திர திரிகோணங்களிலும ஆட்சி உச்ச லாபத்தானங்களிலுமிருந்தால் தேகசுகம போசனசுகம ராசயோகம, நாளுக்குநாள்தொழின்முயற்சிவிருத்தியடைதல் பொருட்பலன் வாகனபலன் பசுமுதலிய ஜீவலாபம பிரயாணத்தினலே காரியஅனுகூலம விசேஷமான காரியங்களைச் செய்து கீர்த்திபெறுதல் தலயாத்திரை சற்கருமங்களைச்செய்தல் திருத்தமான்வீடு தன்முதியோர்களுடைய பொருள்சேருதலுமுண்டாம.

நீசாஸ்தமனமாய் சத்துருவீட்டில் சு—அ—கஉ—ம் இடங்களில் பாபிகளோடுகூடினால் பாபகன்மஞ்செய்தல், களத்திர புத்திரபீடை, இருதயரோகம், பொருள்நட்டம் இடம்பிரிதல் உண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண தனலாபத்தி லிருந்தால் போசனசுகம், ரத்தினாபரணங்கள்சேருதல், தேகசௌக்கியம், வீட்டுச் சிறப்பு, தாயபாகம்பெறுதலுமுண்டாம்..

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ல் பாபியோடுகூடினால் சத்துரு பீடை, பொருள்நட்டம், அன்னியதேசபிரயாணம், மனப்பீடை, அசீரணம், இவை புக்திமுற்பாகத்தில் உண்டாம். பிற்பாகஞ்சமபலனும்.

மாரகாதிபதிகளுடன் சம்பந்தமானால் விஷசுரம், அசீரணமமுதலியவை உண்டாம. குருப்பிரீதி, சுவர்ணதானஞ்செய்ய விதி.

## இராகு மகாதெசையில் சனிபுக்தி

## ௵ உ, மாதம் ௰, நாள் சு.

சத்துருபகை, மன்வியாகுலம நோய் காரியங்கள்நீட்டித்தகாலத்துக்கு அனுகூலமாகாமல் இருத்தல், வாதவாய்வுரோகம, பித்திர்வர்க்க பீடையுண்டாம.

கேந்திர திரிகோண ஆட்சிவீடுகளில் லக்கினாதிபதிமுதலிய சுபர்களோடுகூடியிருந்தால் விவாகம் முதலிய சுபசோபனாதிகள நடத்தல், தருமசற்கிரியைகள் செய்தல், பிரபுக்கள்கூட்டம், வாகனபலன், நிவாந்தர வஸதுக்கள் கிடைத்தல், தனது அதிகாரியினால் பலனுண்டாதலுமாம்.

அ-ம் கஉ ம் இடங்களில் சத்துருநீசவீட்டிற் பாபியாயிருந்தால் க்ஷயரோகம் முதலியவை உண்டாகத்தக்க சம்பவங்களும், பந்துஜனங்களில் விபத்து, மனத்தாபம், தாயாதிபந்துக்கள்கோபம், தாரபுத்திர பீடை, தன்னுடையபொருள் குறைதல், விஷபயமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபங்களில் பாபியாயிருந்தால் சரீரபிணி, புத்திரபீடை, இடம்பிரிதல், பொருட் குறைவு, உண்டாம்.

தெசாநாதனுக்கு ௬-௮-௧௨-ல் பாபியோடுகூடி இருந்தால் வயிற்றில் நோய், விஷபயம், விஷநீர், குன்மவாய்வு, போசனசுகமில்லாமை, முயற்சிக்குறைவு உண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினால் விஷநீர், வாய்வு, குன்மம் முதலியவை உண்டாம். சனிக்குப்பிரீதிசெய்து மகிஷதானஞ்செய்யவிதி.

## இராகு மகதெசையில் புதன்புக்தி

## வரு ௨, மாதம் ௬, நாள் ௨௮.

தெய்வபக்தி, சிறந்தவாழ்வு, நன்முயற்சி, புத்திரபலன், பொருள்வரவு, சிலகாரியங்களைக்குறித்த மனவியாகுலம் உண்டாம்.

கேந்திர திரிகோணங்களில் ஆட்சி லாபத்தானங்களில் நின்றால் வியாபாரப் பொருள்விருத்தி. வித்தியாபலன், நற்காரியங்களைச் செய்தல், களத்திர புத்திரசுகம், இன்னும் ஸ்திரீசனங்களாற் சந்தோஷபலனுமுண்டாம்.

சூரியன் சனி இவர்களோடுகூடி ௬-௮-௧௨-ல் இருந்தால் தேகப்பிணி, துக்கம், கலகம், பகை முதலியவையுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாப ஆட்சி வீடுகளிலிருந்தால், தனக்குச் சந்தோஷகரமானபோசனம், பசுமுதலியசீவலாபம், சொந்தமானபூமி வீடு இவைகளினாலே அதிகபலனுண்டாதல், ரத்தினாபரணச்சிறப்பு, வாகனபலன், கூப தடாகம் இவைகளையுண்டாக்குதல், சற்கருமங்களைச் செய்தல் இவைகளுண்டாம்.

தெசாநாதனுக்கு ௬-௮-௧௨-ல் பாபியாயிருந்தால் எடுத்தகாரியங்கள் சீக்கிரத்தில் முடிவாகாமல் தாமதமாதல், சோரபயம், கலகம பாபத்தொழில்செய்தலுமுண்டாம.

மாரகாதிபதிசம்பந்தமானால் அவமிருத்துதோஷம் வரும்; விஷ்ணுவுக்குஜெபம், புதனுக்குப்பிரீதிசெய்ய விதி.

## இராகுமகாதெசையில் கேதுபுக்தி ௵௧, நாள் ௧௮

விஷபயம், புத்திரபீடை, களத்திரசுகக்குறைவு, மேலோர்பகை தேகத்தில் விஷநீருபாதி உண்டாம்.

கேது சுபாம்சம்பெற்றால் சுபபலமும். பாபாம்சம்பெற்றால் பாபபலமும், புக்கிரசபலமும், சூனியப்பிசாசு முதலியவைகளினும் பயமும், பாரிபுத்திரர்களுக்குப்பீடையும், நாலுகாற்சீவநஷ்டமும், உண்டாம். ராசயோகம்பெற்ற சுபக்கிரகம்பார்த்தால் புத்திரபலனும், வாகனலாபமுமுண்டாம்.

௮—௧௨—ல் இருந்தால் மிருத்துபயம், பொருட்செலவு பலவிதமான பீடைகளுமுண்டாம். உச்சம்பெற்றால் பொருள்வரவும் சுகமுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்தில் நின்றால், சுகம் வாகனம் பசு வியாபாரம இவைகளுக்குச் சமான பலனுண்டாம. இறுதியிலே பொருள்நஷ்டமுண்டு. கேது பாபியாய் நீசனுடன்கூடினால் விஷசுரம், மணப்பயம், தன்மேலாளினால் கஷ்டம, கலகம் வெந்துசன விரோதம்; அன்னியதேச பிரயாணமுமுண்டாம.

அட்டமத்திலே மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்து தோஷமுண்டு. தேவிக்கு வழிபாடு; சர்ப்பதானஞ்செய்யவிதி.

## இராகுமகாதெசையிற்சுக்கிரபுக்தி ௵ ௩

பொருள்விருத்தி, பூஷணபலன், ராசப்பிரபுசன்மானம், ஸ்திரீயினாற் சுகம, ஒருவஞ்சனையினாற் றுன்பமுண்டாதலும், பீடைவந்து நீங்கிவிடுதலுமாம்.

கேந்திர திரிகோணங்களில் லாபஸ்தானத்தி லிருந்தால் பிரபல மானயோகம், பெரியோர்மூலமாகப் பொருள்சேருதல் புத்திர சுகம் சிநேகிதர் கூட்டம் பலவிதமான அனுபோகமுமுண்டாம்.

உச்சம் ஆட்சிப்பெற்று இருந்தால் வாகனபலன் ராசஉதவி பாக்கியவிருத்தி பெரியோ மூலமாக வீடுமுதலிய சிலபொருள்வருதல் களத்திரசுகமுண்டாம்.

௬—௮—௧௨ ல நீசமாய் சத்துருவுடன்கூடினால் கலகம் தன்மேலாட்களாலே நட்டம்; தன்விட்டிலிருப்பவர்களுக்குப்பீடையுமுண்டாம்

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்திற் சுபருடன்கூடினால தானமானவீடு புத்திரபலன் சுகபோசனம் பந்துக்கள் சிநேகிதர்கள் சௌக்கியம ஸ்திரீயினாற் சுகசந்தோஷம ராச அனுகூலம வினைத்தகாரிய மனுகூலமாதல் உபகாரம்பெறுதல சென்றஇடங்களிலே மரியாதையுமுண்டாம.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் பாபியாயிருந்தால் மனத்துன்பம், சரீரபீடை, சிரசில்நோய், சுரம், விஷபீடை, அகாலபோசனம் பலகாரியங்களுக்குந் தாமதமுமுண்டாம்.

மாரகாதிபர்களோடு சம்பந்தமானால் அவமிருத்துதோஷம்வரும் தேவிக்கு ஜெபம் முதலியவழிபாடுசெய்யவிதி.

## இராகுமகாதெசையிற் சூரியபுக்தி
## மாதம் ௧௦, நாள் ௨௪.

பொருள்நட்டம் வெந்துப்பகை, மனப்பயம், களத்திர பீடை, சகோதரசஞ்சலம், ஸ்தானசலனம் உண்டாம்.

தனது ஆட்சிவீடாகிய சிங்கத்திலும் கேந்திரதிரிகோண லாபத்தானத்திலுஞ் சுபர்களோடுகூடினாலும சுபர்பார்வை பெற்றாலும்

ராசசன்மானம், சனுகிகாரம், புத்திரவிருத்தி, ஸ்திரீசனங்களாற் பலனும், அற்பசௌக்கியம் அதிபலாபமுமுண்டாம்.

லக்கினுதிபதியுடனும் பாக்கியாதிபதியுடனும் கூடினுலும், குரு சந்திரன் பார்வைபெற்றாலும் முதலிலே ஒருவிசேஷமான பலன் நடக்கும். பின்பு மனதிலே விசனமாவது பயமாவது தோற்றப்பட்டிச்சித் தசுவாதீனமில்லாமல் இருப்பதுமாகும். உச்சம்பெற்றால் எண்ணிய கருமங்கள் கைகூடுதலும், பொருள்விருத்தியுமுண்டாம்.

சு—அ—கஉ—ல் பாபிகளோடுகூடிப் பெலவீனமானுற் சுரபயம், அதிசாரம், கலகம் சத்துருபீடை, பிரயாணம், சோரபயம் சனவிரோதம், சகோதரபீடையுண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ ல் பாபிகளுடன்கூடினுல் நோய், பந்துகலகம உண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினுல் அபமிருத்துதோஷம் வரும. சூரியனைக்குறித்துப் பிரீதிசெய்யவிதி.

## இராகுமகாதெசையிற் சந்திரபுக்தி ௵ க, ௴ சு

பந்துக்களுள் நட்டம், ஸதிரீயினுற் பொருள்நட்டம, கை கால் நோவு, விஷபயம், இடம்பிரிதல் உண்டாம்.

கேந்திர திரிகோண லாபஸ்தானத்திலே அல்லது ஆட்சி மித்துருவீட்டில் சுபருடன் கூடினுல், ராசஉத்தியோகம், வர்கனபலன், ஐசுவரியம், சுகம, புத்திரபலன், பூஷணமிவைகளுண்டாம். பூரணசந்திரனுனுலும், இவ்விதபலனும பூமிப்பலனுஞ் சந்தோஷமுமுண்டாம். அபரசந்திரனுனுல் மேற்சொல்லியவைகளுக்குக் குறைவுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபஸ்தானத்திலிருந்தால் எடுத்தகாரியங்கள் கைகூடுதல், தேவபக்தி, பிராமண பக்தி,

ஆசாரம், பூசைநியமம, சுகபோசனம், கூப தடாகாதிகளுண்டாக்கல், சற்கருமங்களைச்செய்தலு முண்டாம.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ல் சத்துருக்ஷேத்திரத்திற் பாபியுடனே கூடினால் பூமி ஆடு மாடு களத்திர புத்திரர்களுக்குப் பீடை, பிசாசினாற் பயம், சோரபயம, பாண்டுவியாதி, அல்லது சிரங்குமுதலிய ரணங்கள் காண்பிக்கும்.

மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து வரும், தேவிக்கு வழிபாடுசெய்யவிதி.

## இராகுமகாதெசையிற் செவ்வாய் புக்தி ௵ க, நாள் கஅ

மனக்கிலேசம், விஷபயம், துஷ்டராற்பீடை, பொருட் செலவு, வீட்டிலே சிலபீடைகளுமுண்டாம்.

கேந்திர திரிகோணங்களிலே ஆட்சி லாபஸ்தானங்களிற் சுபருடனேகூடிச் சுபர்திருஷ்டிபெற்றால் தொடங்கியகருமஞ் சித்தியாகுதல களத்திரபுத்திரபலன், சுபகாரியங்கள் செய்தல், மனச்சந்தோஷம் உண்டாம்.

அ—கஉ—ம் இடங்களில் பாபியாய் நீசமடைந்து பாபிகளோடு கூடினால் சீதளசுரம், அதிசாரம், கலகத்தினாற் பொருள்நட்டம், அன்னியதேசபிரயாணம், ஆயுதபயம், தனதுகாரியங்களுக்குத் தீங்குமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண ஆட்சிராசிகளிலே, ஆயினும், லாபத்தானத்திலாயினும் இருந்தால் அற்பசுகம், அற்பபலன், செந்நிறமான ரத்தினம் வஸ்திரம் முதலியபொருள்சேருதல் வாகனபலன், பிரயாணமுமுண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ல் நீசமாயிருந்தால் சகோதரர் தாரம் புத்திரர் இவர்களுளொருவருக்குப் பீடையுமுண்டாம்.

மாரகாதிபதிசம்பந்தமானால் அவமிருத்துதோஷம் வரும்; செவ்வாய்க்குப்பிரீதி, விருஷபதானஞ்செய்ய விதி.

---

## வியாழன் மகாதெசை ௵ ௧௬.

இதன்பலன்:—பலராலும் மரியாதைபெறுதல், மனதிலே நியாயமாக நினைக்கப்பட்டவை சித்தியடையப்பெறுதல், தருமத்துக்குரிய சற்கருமங்கள்செய்தல, சாஸ்திரங்களையறிதல் போதித்தல், நல்லவிவேசம், எப்பொழுதுமாராய்வு, அன்பு, எங்குங்கீர்த்தி, தேவபக்தி, பெரியோர்களாலே தயவு. பலகாரியங்களைச் செய்யத்தக்க விவேகம; சந்தோஷகரமான புத்திரர்கள் விசேஷமானபூமி நல்லவஸ்திரம் குதிரைமுதலிய வாகனப்பேறு தன் குலவொழுக்கப்படியே நடத்தல் சற்சனர்கூட்டம் இவைகளுண்டாம்.

லக்கினத்துக்குக் கேந்திர திரிகோண லாபத்தானங்களிலே ஆட்சிபெற்று இருந்தால் ராஜயோகமுண்டாகும். கீர்த்தி வாகன பூஷணபலன், தெய்வவழிபாடுமுண்டாம்.

லக்கினத்துக்கு ௬—௮—௧௨—ல் நீசமானால் துக்கமும் முன்சொலலியவைகளுக்குக் குறைவுமுண்டாம்.

மாரகாதிபர்களோடு சம்பந்தமானல் பயம் மானபங்கம் புத்திரர் மித்திரர்களுக்குக் கஷ்டம இடம்பிரிதல பகை சோரபயம் இவையுண்டாம். தெசைபிற்கூறிற் சுகபலனுண்டாம்.

## வியாழன்காதெசையில் வியாழபுக்தி ௵ ௨, மாதம் ௧, நாள் ௧௮.

பிரபலகீர்த்தி பொருளிலாபம் தானியவிருத்தி, பூமிப் பலன் பூஷணச்சிறப்பு, ஸ்திரீலாபம் ராசசன்மானமுமுண்டாம்,

கேந்திர திரிகோண ஆட்சிவீட்டில் சுபாம்சம் பெற்றிருந்தால் இராஜதயவு சுபசோபனாதிகள் வீட்டிலேநடைபெறுதல் சற்கருமங்கள் செய்தல் தேவபூஜை குருவினாலனுக்கிரகம்பெறல் பல ஐசுவரியம் இவை உண்டாம்.

கர்மாதிபதிகளுடன் கூடினால் பெரியோர்களினாலேதயவும், தனக்குமேலோர்களாற் காரியங்கள் கைகூடுதலுமாகும், நீசமபெற்று ௬—௮—௧௨—ல் இருந்தால் முற்கூறில் நீதிஸதலங்களிலே வியாச்சியமுதலியவை உண்டாதல், வெகுஜனங்களுள்விரோதம், களத்திர புத்திரபீடை, கலகம், விசனம் பயமுண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினால் அவமிருத்துதோஷம் வரும்.சிவபெருமானுக்கு உருத்திரஜெபம் செய்யும்படிவிதி.

## வியாழன்மகாதெசையில் சனிபுக்தி

## (வரு) ௨, மாதம் ௯, நாள் ௧௨.

பொருட்செலவு, கால்கைகளில்நோவு, வாதநோய், களத்திரபீடை, இடம்பிரிதல் இவைஉண்டாம்.

கேந்திரதிரிகோணங்களிலாவது ஆட்சிமித்துரு வீட்டிலாவது லக்கினாதிபதிமுதலிய சுபருடன்கூடினால் சுகபலன், செல்வ விருத்தி, அன்னியஸதிரீகளினாற் பலன், முன்காரியம் சித்தியடைதல், பிரயாணம்போனவிடங்களிலே மரியாதைபெறுதல், தீர்த்ததெரிசனை, உண்டாம்.

௬—௮—௧௨—ல் நீசனாய் அஸதமன தோஷத்தோடிருப்பின் பலகாரியங்களுக்குக் குற்றமும், பிதிர்மாதுரு புத்திர களத்திரர்களுக்குப் பீடை யுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோண லாபத்தானத்திலிருந்தாற் பூமிப்பலன், செல்வவிருத்தி, அன்னிய பிரபுக்கள்மூலமாகப் பலவிதலாபமுமுண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ல் பாபியுடனேகூடிஞற் பந்து மித்திரர்விரோதம், உத்தியோகத்துக்குப் பங்கம், பிணி, சுயசன விரோதமுமுண்டாம்.

மாரகாதிபதிகளுடன் கூடிஞல் அபமிருத்துதோஷம் வரும் குருவுக்குப்பிரீதிசெய்து விஷ்ணுவைவழிபாடுசெய்யவிதி.

## வியாழன்மகாதெசையிற புதன்புக்தி

## ஷ உ, மீ௱ க, நாள் சு.

விவேகம், கல்வித்திருத்தம், விவேகஞானம், ஆடல்பாடல் தேவகைங்கிரியம், களத்திரபுத்திரசுகம், சத்துருசினேகம, ஐசுவரியவிருத்தி, வியாழனுடையபார்வைபெற்ருலும், கூடிஞலும், பலவிதபொருட்பலனும் வீட்டிலே நற்காரியங்கள் நடத்தலும், நன்முயற்சியாகத் தொடங்கியவை சித்திபெறுதலும் ராசஅனுகூலமுமுண்டாம.

புதன் செவ்வாயுடனேகூடிஞலும் செவ்வாயின் பார்வைபெற்ருலும் மலசலாதிகளின் ஒழுங்கினத்துக்குரியநோய் குய்யஸ்தானத்திலேவிரணம் சுரம் இவை உண்டாம்.

புதன் ஆட்சி உச்சராசிகளிலும் கேந்திர திரிகோண தனலாபத்திலும் இருந்தால் எடுத்தகாரியங்கைகூடுதல் முன்நட்டமடைந்த சில பொருள்வருதல் பந்துக்களுட் சுபகாரியங்கள்நடத்தல் புத்திர பலன் உண்டாம.

லக்கினத்துக்கு சு—அ—கஉ—ல் பாபியாய்ப் பாபர்களோடு கூடிஞல் பாபகன்மஞ்செய்தல் சிலருமிசைசெய்தல் விஷபயம் பித்த அதிகாரம் இடம்பிரிதல் உண்டாம்.

செளநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபஸ்தானங்களில் நின்ருல் பிதிர்வர்க்கசுகம் நெடுந்தூரம்போய்ப் பிரயாசப்படாமல் சமீபத்திலிருந்து பொருள்வரவு சாத்திராப்பியாசம் தீர்த்தபலனுண்டாம.

தெசாநாதனுக்கு ஈ—அ—கஉ—ம் பாபியாயிருந்தால் மனப்பயம பொருள்நட்டம இடமபிரிதல் உண்டாம.

மாரகாதிபதிகளோடு கூடினல் அவமிருத்துதோஷம் வரும. விஷ்ணுவுக்குப்பிரீதிசெய்ய விதி.

## வியாழன்மகாதெசையில்கேதுபுக்தி

## மீ கச, நாள் ௬.

அன்னியதேசசஞ்சாரம், பந்துக்கள்விரோதம், குடும்பபிரிவு, மனப்பயம், விஷபீடை, சுரம், கேது சுபருடன் கூடிக் கேந்திரதிரிகோணங்களிலிருந்தால் தருணந்தப்பியபோசனம், பித்தமயக்கம், சிரசில்நோய் உண்டாம்.

பாபருடன்கூடிப் பாபர்நோக்கம்பெற்று அ—கஉ—ல்இருந்தால் குடும்பசுகக்குறைவு, சத்துருபீடை, பொருள்நட்டம், துக்கசம்பவங்கேட்டல், சகோதரசுபக்குறைவு உண்டாம்.

சுபக்கிரகங்களின் நோக்கம்பெற்றால் சுபபலனைக்கொடுக்கும்.

மாரகாதிபதிகளுடன் கூடினல் அவமிருத்துதோஷம் வரும. கேதுவுக்குப் பிரீதிசெய்ய விதி.

## வியாழன்மகாதெசையிற் சுக்கிர புக்தி

## வருட உ, மாதம் அ.

நிலைபரமான காரியங்களைச் செய்தல், பொருள் விருத்தியாதல், பூமிசேருதல், வாகனவலன், பந்துசுகம், மனதிலே பல ஆலோசனை, மறதி உண்டாம்.

ஆட்சிவீடுகளில் திரிகோணகேந்திரம்பெற்றாலும், அதியுச்சமானாலும், அதிகாரம், மனதுக்கிஷ்டமானவாகனம், தன்னோடொத்தசினேகிதனால் அனுகூலம், பிரயாணம்போனவிடத்திற் பொருள்வரவு, தேவகுருதரிசனம், பலகாரியங்கள் அனுகூலமடைதலுமுண்டாம்.

குருவுக்குக் கேந்திர திரிகோணங்களில் நின்றால் சமமானபலன், அதிககீர்த்தி, பரோபகாரஞ்செய்தல், தருமச்செய்கை உண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் நீசனாகிச் சத்துருவுடன்கூடினால் பயம், காரியக்கேடு, பொருள்நட்டம் சிரமமுண்டாம்.

மாரகாதிபதிகளுடன்கூடினால் அபமிருத்துப்பீடை யுண்டாம். லட்சுமிக்கு ஜெபம், சுக்கிரப்பிரீதிசெய்யவிதி.

## வியாழன் மகாதெசையில் சூரிய புத்தி
## மாதம் ௯, நாள் ௧௮.

பொருள்வரவு, நினைத்தகாரியங்கைகூடுதல், தருமச்செய்கையில் வெறுப்பு, பிணி, சத்துருபகை, வீட்டிற்கலகமுண்டாதல், புத்தியிற் கூறு நற்பலனுண்டாம்.

சூரியன் கேந்திர திரிகோணங்களிலே அஷ்டமாதிபதியோடுகூடினாலும், அஷ்டமாதிபதிபார்வைபெற்றாலும், முற்கூறு பொருட்சேதம், இடம்பிரிதல், சுரம், சத்துருகலகம், பாபகன்மஞ்செய்தல், மனப்பயம் உண்டாம்.

சிங்கராசியிலே அல்லது திரிகோண கேந்திர லாபஸ்தானத்தில் சுபக்கிரகங்களுடனே கூடிச் சுபர்பார்வைபெற்றால் சிரசில்நோய், தான்தொடங்கியவை கைகூடுதல், சென்ற இடங்களில்மரியாதை,கீர்த்தி உண்டாம்.

௮—௧௨—ல் நீசனுகிப் பாபியுடனேகூடினுல் புறதேசப்போக்குவாகினுல் பலவீதசுபக்குறைவு, எடுத்தகாரியந் தடைபடுதலும், வாகனம் பசுமுதலிய சிலநஷ்டமுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணலாபத்திலிருந்தால் ஆயாசம் துக்கம பகை அலைச்சல் உண்டாம். இவ்விதமன்றித் தெசாநாதனுக்கு ௮—௧௨—ல் இருப்பினும் தான்பார்க்குங் காரியங்களுக்குக் குறைவும தலை கண் வயிறு இவற்றென்றில் துன்பமுமுண்டாம.

மாரகாதிபதிகளோடுகூடினுல் அவமிருத்துதோஷம் வரும். கர்மசாந்தி சூரியப்பிரீதிசெய்யவிதி.

குருதெசைக்குச் சூரியபுக்தி விசேஷபலனுக் குரியதல்ல.

## வியாழன்மகாதெசையில் சந்திரபுக்தி

## ௵ ௧, மாதம் ௪.

பொருளிலாபம், ஆபரணபலன், நல்லவிவேகம், நூதனவஸ்துக்கள் கிடைத்தல், களத்திரபுத்திரபலன், நினையாதிருக்கச் சிலகாரியம, அனுகூலமாதலுமுண்டாம். பூரணசந்திரனுய் ஆட்சிவீட்டில் கேந்திரதிரிகோணம்பெற்றிருப்பின் குடும்பசுகம், கீர்த்தி, ராசாங்கத்திலுத்தியோகம், பிரபுசன்மானம், சரீரசுகம், வாகனம், சத்துருஜெயம், தான்பார்க்குங்காரியங்கள் அனுகூலத்துக்கு வருதல், தனக்குச் சொந்தமான பந்துக்களுக்குள் சுபகாரியங்கள் சம்பவித்தல் முதலியநற்பலன்களுண்டாம்.

௬—௮—௧௨—ம் இடங்களில் பாபிகளோடுசம்பந்தமானுல் பழி, பகை, நோய், காரியவிக்கினம், இடம்மாறுதல் உண்டாம்.

சந்திரன் வியாழனுக்கு ௫-ம் ௯—ம் இடத்தில் வலிமையோடிருந்தால் லட்சுமிகரமும் நாளுக்குநாள் செல்வவிருத்தியுமுண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் பாபியாயிருந்தால் ராசகோபம், தண்டனை, சுரம், அன்னியதேசசஞ்சாரம், இவையுண்டாம்.

சுபக்கிரகங்களோடுகூடித் தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் இருந்தால், மனக்கிலேசமும் சொற்பலாபமுமுண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினால் அவமிருத்துதோஷமுமுண்டாம். தேவிக்குவழிபாடுசெய்யவிதி.

## வியாழன்மகாதெசையிற் செவ்வாய் புக்தி

### மீ ௧௪, நாள் ௬.

பலவகையானகஷ்டங்களும், ராஜபகையும், வெந்து நஷ்டமும், நிலைமாறுதலும், தொடங்கியகாரியத்தை முடிக்கப்பிரயாசப்படுதலுமுண்டாம்.

ஆட்சிவீட்டிற் கேந்திரதிரிகோணம்பெற்றிருந்தால் முற்கூறு அற்பபலனும், பிற்கூறு கொருள்நட்டமும், சகோதரபீடையும், அதிகஅலைச்சலுமுண்டாம்.

ஆறுமிடத்துக்கதிபதியோடுகூடி ௬—௧௨—ல் இருந்தால் அதிக செலவும், தேகசுகமும், பூமிலாபமுமுண்டாம், ௬—௮—௧௨—ம் இடத்தில் நீசமாய்ப் பாபியோடுகூடியிருந்தால் துஷ்டத்தொழில்செய்தல், குல ஆசாரந் தவறல், பரஸ்திரீகளினாலேபீடையுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோணத்திலிருந்தால் நல்லகாரியங்களைச்செய்யும்பொழுது அதனாற்சிலபீடைகளும், அற்பலாபமும், சிரமமுமுண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் பாபியாயிருந்தால் தனதுகாரியங்களுக்குநட்டமும், சிரநோய் நேத்திரபீடையும், மனவிசனமும், பயமுமுண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினால் அவமிருத்து தோஷமுண்டாம். சிவலோபாமம்பந்தானஞ்செய்யவிதி.

## வியாழன் மகாதெசையில் இராகுபுக்தி

## ௵ உ, மாதம் ச, நாள் உச.

பொருட்சேதம, குடும்பசுகவீனம், வியாச்சியம், சத்துருபகையி னால் ரகசியமாகப் பலதீங்குகளுண்டாதல் உண்டாம்.

பாபியுடனேகூடிக் கேந்திர திரிகோணங்களிலிருந்தால் கலகம், சுகவீனம், மித்துருவிரோதம், தருக்கவாதம், குடும்பசுகவீனமு முண் டாம். சுபக்கிரகங்களோடுகூடி மேற்சொல்லியதானங்களிலிருந்தால் அற்பசுகமுண்டாம்.

அ—கஉ—ம் இடங்களிலிருந்தால் கலகம், மனோவியாகுலம், பிசா சினாற்பயம், பொருள்நட்டமுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோணங்களிற் சுபக்கிரகங்களோ டுகூடினால் பந்துவிரோதம், அன்னியதேசகெமனம், கீர்த்திக்குறைவு செய்யுங்காரியங்கள் நட்டமடைதலுமுண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ல் பாபக்கிரகங்களோடு கூடினா ல் அதிககஷ்டமும், சந்தோஷக்குறைவும் பகையுமுண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினால் அவமிருத்துதோஷம்வரும். ராகு வுக்குப் பிரீதிசெய்யவிதி.

---

## சனிமகாதெசை ௵ கக.

அபகீர்த்தி, பொருட்சேதம், சத்துருபீடை, பந்துவிரோதம்,பிதி ர்வர்க்கபீடை உண்டாம்.

லக்கினத்துக்குக் கேந்திர திரிகோண ஆட்சிவீடுகளில் ருடு—ம் சும் இடங்களிலிருந்தால் பொருள்வரவு, பிரபுக்கள் கூட்டம், அதிகாரம், பந்துகலகம் உண்டாம்.

உ—எ—அ—ம் இடங்களிலிருந்தால் எடுத்தகாரியங்கள் அனுகூலமாகாமற் போதல், பகை, விரோதம், குடும்பசுகவீனம், சகோதரபீடை, சயரோகம், அன்னியதேசகெமனம் உண்டாம். பிற்கூறுசுகபலனுண்டாம்.

## சனிமகாதெசையில் சனிபுக்தி

## வருஷ௩, நாள் ௩.

சரீரபிணி, பொருட்செலவு, பந்துவிரோதம், வாக்னநட்டம, இவை முற்பாகத்திலும், பிற்பாகம் அற்பசுகம் அற்பலாபமுண்டாம்.

ரு—சு—கக ம இடங்களிலே உச்சபெலனோடுகூடி சுபர்திருஷ்டிபெற்றால் வினைத்தகாரியங்கள் கைகூடுதல், நல்லகீர்த்தி, வாகனபலன், ராஜஉதவி இவை உண்டாம்.

சு—அ—கஉ—ல் நீசமடைந்தால் விஷபயம், ஆயுதபீடை, சுரம், தாகம் இவையுண்டாம். அட்டமாதிபதியுடன் கூடினால் அவமிருத்துதோஷமுண்டாம். சனிக்குப்பிரீதி, மஹிஷதானஞ்செய்யவிதி.

## சனி மகாதெசையிற் புதன் புக்தி

## வருஷ உ, மீ அ, நாள் சு.

கல்வி, விவேகம், சிறப்பு, செல்வவிருத்தி, களத்திரபலன், புத்திரஅனுகூலம், பந்துக்கூட்டம், கீர்த்தி, புண்ணியபலன், சுகமுமுண்டாம்.

கேந்திரதிரிகோணலாபஸ்தானத்தில் ஆட்சிப்பெற்றுச் சுபக்கிரகங்களோடுகூடி உச்சாம்சம்பெற்றால் ராஜஅனுகூலம், தேசமரியாதை, வெகுசனமித்துருத்துவம், புண்ணியதீர்த்தபலன், வித்தைப்பிரபலம் உண்டாம்.

நீசனாய்ச் சத்துருவீட்டிற் சூரியன் செவ்வாய் சனி இவர்களோடு கூடி ௬—௮—௧௨—ல் இருந்தால் தன்காரியங்களுக்குக் குறைவும், சினேகிதர் சத்துருவாதலும் பிதிர்பந்துப்பீடையும் உண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோண லாபஸ்தானத்தில் சுபபெலனோடிருந்தாற் சுகம், வித்தியாலாபம், சனமரியாதை அதிகாரமுண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் பாபக்கிரகங்களோடு கூடிப் பாபபெலனடைந்தாற் பொருட்சேதம், வாகனநட்டம, சுபக்குறைவு, இவைகள் முற்கூறிலே உண்டாகி பிற்கூறில் தெய்வபக்தி,குருபக்தி, வாகனபூஷணபலன் உண்டாம்.

மாரகஸ்தானாதிபதியோடுகூடினால் அன்னியதேச பிரயாணம், குய்யஸ்தானத்திலே நோய்; சோரபயம், சத்துருபீடை. அவமிருத்து தோஷமுண்டாம். விஷ்ணுவுக்குப் பூஜை ஜெபம் முதலியவை செய்யவினி.

## சனிமகாதெசையில் கேதுபுக்தி

## ௵ ௧, மாதம் ௧, நாள் ௯.

வாதரோகம், புத்திரபீடை, பொருட்செலவு, விஷபயம், ஆசாரக்குறைவு, தைரியக்குறைவு, கலகம, தேகத்திலேவிஷநீர், அன்னியதேசகெமனம், இவையுண்டாம். லக்கினாதிபதியுடன்கூடினால் கெங்காதீர்த்தமுதலியஸ்நானபலன், அற்சுகமுமுண்டு. கேது பாபிகளோடு கூடினால் தரித்திரம் தன்னுடைய மேலாளுக்குப் பீடையுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோணங்களில் ௮—௧௨ ம் இடங்களிலிருந்தால் இருதயரோகம், சிரவியாதி, பந்துசனப்பீடை, இடம்பிரிதல் உண்டாம்.

மாரகஸ்தானாதிபதிகளோடு கூடினால் அபமிருத்துதோஷம் வரும். கேதுவுக்குப்பிரீதி புண்ணியதீர்த்தஸ்நானஞ் செய்யவிதி.

## சனிமகாதெசையிற் சுக்கிரபுக்தி

### ௵ ௩, மாதம் ௨.

கீர்த்தி, சத்துருசெயம், குபேரசுகம், மனதுக்கின்பமானசம்பவங்களுண்டாதல், புத்திரபலன் ஸ்திரீயினாற் சந்தோஷம், கேந்திரதிரிகோண உச்ச ஆட்சிவீடுகளிலிருப்பினும், யோகாதிபதியான சனியோடுகூடினும், செல்வவிருத்தி, தானியவிருத்தி, பால்ப்பசுவிருத்தி, பூமிலாபம், தேசாந்தரங்களிலிருந்து பொருள்வருதல், தன காரியங்கள் அனுகூலமாகநடத்தல், சற்கருமங்கள் செய்தல், தேவவழிபாடு, பிராமணவிசுவாசம், கீர்த்திக்கும் சுகத்துக்குமுரிய வாகனஞ்சேருதல், ராசாங்கஉத்தியோகபலன் இவை உண்டாம்.

சுக்கிரன் சத்துருநீசவீடுகளில் அஸ்தமனதோஷத்தோடு ௬—௮ ௧௨—ல் இருந்தால் நேத்திரரோகம், சத்துருபீடை, தன் காரியங்கள் அனுகூலமாகாமலிருத்தல், சயனவிரோதமுமுண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் பாபியாயிருந்தால் மனக்கிலேசம், வீணானவியாச்சியங்களுண்டாதல், உஷ்ணத்தினால்வியாதி, நேத்திரரோகம், களத்திரபிணி, இருதயநோய், அன்னத்துவேஷம் குலஸ்திரீபீடை உண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபஸ்தானத்திலிருந்தால் தெய்வவழிபாடு, தருமம் முதலிய சற்கருமஞ்செய்தல், புண்ணியசரித்திரங்களைக் கேட்டல், வித்தியாவினோதம ராசஉதவி உண்டாம்.

மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷமுண்டாம். தேவிக்குவழிபாடுசெய்யவிதி.

## சனி மகாதெசையில் சூரிய புக்தி

### மாதம் ௧௧, நாள் ௧௨.

குடும்பக்ஷீணம், புத்திரபீடை, தேகத்தில் உஷ்ணமிகுதி, சலக்கடுப்பு, கைகால்களிலே நோவு, வாதநோய், மனப்பயம் இவை.

லக்கினாதிபதியுடன் கூடினால் விசனமாவது பயமாவது உண்டாதலும். லக்கினத்திலிருந்தாலும், சந்திரனுடன் கூடினாலும், பந்து சனங்களாற்பீடைப்படுதலுங் தேசசுபவீனமுமுண்டாம். சூரியனைக் குரு பார்த்தால் நீங்கின்றிப் பொருள்விருத்தி. சுகானுசலமுமுண்டாம்.

சூரியன் அ—௧௨—ல் இருப்பினும், நீசமடையினும் கடினமான சுரம், மனவியாகுலம், சோரபயம், பிதிர்பந்துக்கிலேசம் உண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்திலிருந்தால் அன்னியதேசசஞ்சாரம் போசனக்குறைவு தன்முயற்சிக்குவிரோதமுண்டாம்

தெசாநாதனுக்கு ௬—அ—௧௨ ல் இருந்தால் குரூர கஷ்டங்களை அடைதலும் அதிகபயமும் குய்யஸ்தானத்தில் ரோகமுமுண்டாம்.

மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்துதோஷமுண்டாம். சூரியநமஸகாரம செபம் செய்யவிதி.

## சனிமகாதெசையிற் சந்திரபுக்தி வருஷம் ௧, மீ ௭.

தானிருக்குமிடங்களில் வியாச்சியங்களும் கலகமும் மனத்தாபமும் வஸ்திராபரணச்சேதமும் நிலைவிட்டுப் பிறதேசங்களுக்குப்போக்குவரவுசெய்தலும் தன்பிரபுவுக்காயினும் தனக்குச் சொந்தமான பந்துக்களுக்காயினும பீடையுமுண்டாம்.

அபரபட்சசந்திரனாய் பாபிகளோடுகூடினாலும் நீசமடைந்தாலும் அதிககஷ்டம் தைரியக்குறைவு ஆயாசம் உண்டாம.

பூர்வபட்சசந்திரனாய் சுபக்கிரகங்களோடு கூடி உச்சம்பெற்றுக் கேந்திரதிரிகோணங்களிலிருந்தால் நினைத்தகாரியங்களுக்கு அனுகூலமடைதலுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோணங்களில் நின்றால் "செல்வவிருத்தி அதிகாரம காரியசித்தி தான்பார்க்கும் காரியங்கள் சித்தியடைதலுமாம்,

தெசாநாதனுக்கு ௬—அ=கஉ—ல் இருந்தால் மாதுருவெந்துக்களுள் பீடை விசனம் பொருட்சேதம் உண்டாம்.

மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்து தோஷமுண்டாம; தேவிக்கு செபம் பூசைமுதலிய வழிபாடுசெய்யவிதி.

## சனிமகாதெசையில் செவ்வாய் புக்தி

### வரு௧, மாதம் ௧, நாள் ௯,

பந்துசனங்கள்விரோதமடைதலும் பலவிடங்களிலும அலைந்துதிரிதலும பொருள்நட்டமும் துக்கசமபவங்களுமுண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுடன் கூடி உச்சத்திலாயினும கேந்திரதிரிகோணலாபத்தானங்களிலாயினுமிருந்தால் சுரம் பித்தமயக்கம பீடைமுதலியவையுண்டாம்,

லக்கினாதிபதியுடன் கூடி ஆட்சி உச்சம்பெற்றாலும செவ்வாய் லாபாதிபதியாயிருந்தாலும தெசாநாதன் லக்கினாதிபதியாயிருந்தாலும செவ்வாய் தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோண லாபத்தானத்திலிருந்தாலும பூமிப்பலன் முயன்றகாரியங்கள் அனுகூலப்படுதல் வாகன

பூஷணங்கிடைத்தல் அதிகாரம் பொருள்வரவு புக்திக் கடையிற் சகோதரபீடை விசனம் முதலியவையுண்டாம.

மாரகாதிபதிகளுடன்கூடினல்; அல்லது மாரகஸ்தானங்களில் நின்றாலும், அவமிருத்துதோஷமுண்டாம். வெண்ணிற எருது தானஞ் செய்யவிதி.

## சனி மகாதெசையில் இராகு புக்தி

## ௵ ௨, ௴ ௰, நாள் ௬.

பொருட்சேதம், விஷபயம், தேகத்தில்விஷசீர், மனைவியாகுலம் உண்டாம்.

ராகு லக்கினாதிபதியுடன்கூடினாலும், பாபிகளோடுகூடி ௭—ல் நின்றாலும், குடும்பகிலேசம், அதிகபயம், பிசாசினாற்பயம், க்ஷயரோகம் முதலியவையுண்டாதலும், புக்திமுதலிற்சுகமும, மத்தியிற்றுக்கமும், கடைசியில் சொந்தமானபந்துக்களிலே துக்கசம்பவங்களுமுண்டாம்.

ராகு இடபம் கர்க்கடகம் கன்னி மகரம் மீதுனம் தனு இந்தராசிகளிலிருப்பினும், லக்கினாதிபதியுடன் கூடினாலும், கீர்த்தி, ராஜமரியாதை, பிரயாணமபோனவிடங்களிற் காரியசித்தி உண்டாம.

௬—௮—௧௨—ல் இருப்பினும், திரிகோணம் பெறினும் சுபர்திருஷ்டிபெற்றாலும, அற்பசுகமும, சுபகாரியங்கள்நடைபெறுதலும தர்மச்செய்கையும. பாபியுடன்கூடினல் அதிகபயமுமுண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினல் அவமிருத்துதோஷம். சர்ப்பதானஞ்செய்யவிதி.

## சனிமகாதெசையில் வியாழ புக்தி

## ௵ ௨, ௴ ௬, நாள் ௰௨;

தன்னுடையகாரியங்கள் பார்ப்பதற்கு பலர்துணைபுரிதலும, ஏவற்காரர்களிருத்தலும மனச்சந்தோஷமான சமபவங்கள் நடைபெறுத

லும், பந்துசனக்கூட்டமும், வஸதிர ஆபரணங்கள்சேருதலும், திரவியவிருத்தியும், குடும்பசுகமுட, எண்ணியகருமங்கள் அனுகூலமடைதலும் உண்டாம்.

வியாழன் கேந்திர திரிகோண லாபஸ்தானத்தில் உச்ச ஸ்வக்ஷேத்திரம் பெற்று சுபக்கிரகங்களோடுகூடி சுபாம்சம் பெற்றிருந்தால் அதிகீர்த்தி, வெந்துசனஅதிகாரம், தேவபூஜை, வீட்டில் லக்ஷ்மி கடாட்சம், பிரயாணம்போனுல் பலவித அனுகூலங்கள், சத்துருஜெயமும் உண்டாம்.

சு—அ—கஉ—ல் பாபிகளோடு கூடியிருந்தால் மனப்பயம், சுபக்குறைவு, மனம் ஒரேநிலையில்லில்லாமற் கலக்கமடைதல், துஷ்டஸ்திரீயினுற் பீடை உண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபஸ்தானத்திலிருந்தால் சுகம், திரவியவிருத்தி, லாபம், நல்லகீர்த்தி, ரத்தினுபரணங்கள் சேருதல், ஞானசாஸ்திர உணர்ச்சி, குலஸதிரீயினுல் அனுபவங்கள் உண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ல் நீசனேடு கூடினுல் கஷ்டம், விசனம், கலகம், தேகபிணி இவைகளுண்டாம். சுபஸதானங்களில் உச்சம்பெற்றுல் பிரபுசன்மானமுட, செல்வவிருத்தியுமுண்டாம்.

மாரகாதிபதிகளுடன் கூடினுல் அவமிருத்துதோஷம்வரும். குருவுக்குப்பிரீதி, விஷ்ணுஜெபம் செய்யவிதி.

---

## புதன்மகாதெசை ௵ கஎ.

வித்தியாலாபம், வாகனபலன், வஸ்திராபரணச் சேர்க்கை, பந்துசனக்கூட்டம், உத்தியோகம், வியாபாரம் முதலியவைகளினுல் நன்று சித்தித்தல், நல்லஸதிரீயினுற் சந்தோஷபலன், புத்திரவிருத்தி

புதன் ஆட்சி உச்சத்தில் பூரணபெலனோடு இருந்தால் வித்தையி னால் பலனடைதல், வித்தியாவினோதமானகீர்த்தி, பசுவிருத்தி, வாக னபலன், போசனசுகம், சயனசுகம், சத்துருசெயமுண்டாம்.

புதன் லக்கினத்துக்கு சு—அ—கஉ—ல் நீசமாய்ப் பாபிகளோடு கூடினால் சத்துருபீடை, கலகம், தனதுகாரியங்களுக்குக் குறைவும், சுகவீனமும், மனப்பீடையுமுண்டாம்.

## புதன்மகாதெசையில் புதன் புக்தி

## வரு. உ, மீ சு, நாள் உஎ;

வம்மிசவிருத்தி, பொருள்விருத்தி, தானியவிருத்தி, நல்லறிவு, ஞானம், கல்வியினாற்கீர்த்தி, தருமம், இட்டசித்திகளுமுண்டாம்.

புதன் கேந்திர திரிகோண லாபஸ்தானத்தில் ஆட்சி உச்சம்பெ ற்றிருந்தால் வித்தியாபலன், கீர்த்தி, பிரபுக்கள்கூட்டம், பொருள்வி ருத்தி, சுயபந்துக்களில் விவாகாதி சுபசம்பவங்கள் நடத்தல், இரத்தி னாபரணம் முதலியவை சேருதலுமுண்டாம்.

புதன் சு—அ—கஉ—ல் பாபியாய் நீசமடைந்தால் வாய்வுமுதலி ய பிணி, சத்துருபீடை, பொருட்சேதம், இடம்பிரிதல், கலகம் உண் டாம்.

மாரகாதிபதிகளோடு கூடினால் சுயபந்துக்களுக்குள் கேடு, குடும் பக்லேசம் உண்டாம். விஷ்ணுஜெபம் பிரீதிசெய்யவிதி.

## புதன்மகாதெசையிற் கேது புக்தி

## மீ கக, நாள் உஎ.

சரீரபீடை, பொருட்சேதம், வெந்துக்கூட்டம், மனப்பீடை, வி ஷபட்சணம், கேது கேந்திர திரிகோணங்களிலே சுபக்கிரகங்களோடு

கூடிச் சுபர்திருஷ்டிபெற்று இருந்தாலும், லக்கினாதிபதியோடு கூடினாலும், அதிகசிரமும், பிரயாணம்போனவிடங்களிலே விசாதரும், பொருள்வரவும், இடையிடையே சுபவீனமுமுண்டாம்.

கேது ௮—௧௨—ம் இடங்களிலே பாபக்கிரகங்களுடனே கூடிப் பாபர்திருஷ்டிபெற்றால் பாபகன்மஞ்செய்தல், புத்திரவெகுதுப்பீடை, சோரபயம, ராஜபயம், ரோகணபதனம், கேது உச்சம்பெற்றால் விஷபயம், தருக்கவாதம், நீசமடைந்தால் அலேச்சல், காரியகட்டமுண்டாம்.

மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துதோஷமுண்டாம். சமுத்திரதீர்த்தஸ்நானம், சர்ப்பதானஞ்செய்யவிதி.

## புதன் மகாதெசையிற் சுக்கிரபுக்தி

## ௵ ௨, மாதம் ௰

பிரபலமான கீர்த்தி, வித்தியாபலன், மங்கலகரமானசுகானுபவம், குடும்பசுகம், புத்திரப்பேறு, தனதானியவிருத்தி, தூரதேசயபோயிருந்தால் வீடுவந்துசேருதல் உண்டாம்.

சுக்கிரன் புதனுடனே கூடினாலும், கேந்திரதிரிகோணங்களிலிருப்பினும், ஆட்சிலாபத்தானத்திலிருப்பினும், பூமிப்பலன், விவசாயவிருத்தி, பசுவிருத்தி, வாகனபலன், சரீரசுகம், கிணறு குளம் உண்டாக்கல் முதலிய தருமச்செய்கையுமுண்டாம்.

சுக்கிரன் வியாழனுடன் கூடினால் பிரபுக்கள் பெரியோர்சினேகிதம், பொருளிலாபம், புண்ணியசரித்திரம் அறிதலும், சூரியனுடன் கூடினால் வித்தியாவினோதம, அலேச்சல் முதலியவையுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோணங்களி லிருந்தாலும், ஆட்சி லாபஸ்தானங்களிலிருந்தாலும், ராசாங்கஉதவி, பொருள்வரவு, கீர்த்தி வாகனபலனுண்டாம்,

மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்துப்பீடை யுண்டாம். துர்க்கை, லட்சுமி இவர்களுக்குப் பிரீதிசெய்யவிதி.

## புதன்மகாதெசையிற் சூரியபுக்தி

## மாதம் ௧௦, நாள் சு.

மனக்கிலேசம், குடும்பசுகவீனம், சத்துருபகை, வியாச்சியம், தாண்பார்க்கும் காரியங்களுக்கு நஷ்டம உண்டாம.

சூரியன் ஆட்சிலாபத்தானங்களிலாயினும், கேந்திரதிரிகோணங்களிலாயினும் இருந்தால் பிரபுக்கள் சினேகம், உத்தியோக முயற்சி ராசானுகூலம், செவ்வாயின் பார்வைபெற்றால் பூமிப்பலனும், சகோதரசுகமும் உண்டாம்.

லக்கினாதிபதியுடன் கூடினால், முற்கூறுசுகபலனும், பொருள்விருத்தியும், புக்திமத்திவிலுங் கடைசியிலும் பொருட்சேதம், மனவிசனம், கலகம், பகை, பந்துக்களுக்குள் துக்கசம்பவங்களுமுண்டாம்.

சூரியன் செவ்வாய் சனி ராகு இவர்களோடு கூடினும், இவர்கள்பார்வைபெற்றாலும், சத்துருபீடை, தேகத்தில் புண் முதலியவை உண்டாதல், சனவிரோதமுண்டாம்.

சூரியன் அ—கஉ—ல் சத்துருவீட்டிலிருந்தால் பிதிர்வெந்துநஷ்டம், உஷ்ணரோகம் பசு எருது முதலிய சீவநட்டம், விஷபயம், இடம்பிரிதல, பூமிநட்டமுண்டாம்.

சூரியன் மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துப் பீடையுண்டாம்; சூரியனுக்குப் பிரீதிசெய்யவிதி.

## புதன்மகாதெசையிற் சந்திரபுக்தி

### வருஷம் க, மாதம் ரு.

சுபக்குறைவு, தைரியவீனம், விஷசீர், வெப்பு, பெண்மூலமாகக் கலகம், சத்துருபீடை, சிலேற்பனரோகம்.

சந்திரன் கேந்திர திரிகோணங்களிலே ஆட்சிப்பெற்றுச் சுபக்கிரகங்களின் பார்வைபெற்றிருப்பின் இராசஉத்தியோகச் சிறப்பு, தேகசுகம், களத்திரபலன், புத்திரானுகூலம், முத்து முதலிய இரத்தினபலன், கீர்த்தி, வித்தியாவிநோதம, இனிய ஆடல்பாடல்களிலே விருப்பு, விருப்பமானபோசனம், பிரயாணம்போனவிடங்களிலே காரியசித்தியும், பொருள்வரவுமுண்டாம்.

சு—அ—கஉ—ல் நீசமடைந்தாலும், கிருஷ்ணபட்சச் சந்திரனாயினும் சத்துருவீட்டிலிருப்பினும், தனக்கு அதிகாரியாயிருப்பவருக்குப் பீடையும் சத்துருபகையும், சுகக்குறைவும், தான்பார்க்குங் காரியங்களுக்குக் கேடும் மனத்தாபமுமுண்டாம்.

சந்திரன் தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோண லாபத்தானத்திலே குருவோடாயினும், சுக்கிரனுடனாயினும் கூடினால், தனது உற்சாகரியினாற்பலனும, பொருட்பேறும் வித்தியாபிவிருத்தியும், புண்ணியதீர்த்தஸ்நானபலனும், புராணஇதிகாவியசரித்திரமறிதலுமுண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினால் அவமிருத்துப்பயமுண்டாம். துர்க்காபூஜை, ஜெபம் வெள்ளிவிம்பந்தானஞ்செய்யவிதி.

## புதன்மகாதெசையில் செவ்வாய் புக்தி

### மாதம் கக, நாள் உஎ.

பித்தரோகம் சிரசில்வேதனை, தேகத்திலே தழும்பு உண்டாதல் பழையபகைவருதல் கலகம்.

செவ்வாய் கேந்திர திரிகோண உச்ச ஆட்சிவீட்டில் இலக்கினாதிபதியுடன் கூடினால் முன் நட்டமடைந்தவை அனுகூலமாதலும், பயிர்ச்செய்கையினால் விருத்தியும் இராசஉதவியுங் கீர்த்தியுமுண்டாம்.

செவ்வாய் அ—௧உ—ம் இடங்களில் சத்துருநீசமாகிப் பாபர்திருஷ்டிபெற்றால் தேகபிணி, மனத்தாபம் இடம்பிரிதல் கலகம பசுமுதலிய நாலுகாற்சீவநட்டம் உண்டாம.

செவ்வாய் தெசாநாதனுக்குக் கேந்திரதிரிகோண லாபத்தில் பாபியுடன் கூடினும்; பாபர் திருஷ்டிபெற்றாலும் மாதுரு வெந்துப்பீடை மனைவியாகுலம் அபகீர்த்தி மானபங்கம் பலவிதத்தாலும் பணவிசனமும் மேற்சொல்லியவிடங்களிலேயிருந்து சுபக்கிரகங்களின் பார்வைபெற்றால் தீமையின்றிச் சமபலனுமுண்டாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு ௬—அ—௧உ—ல் பாபியுடனே கூடினால் பிணி பீடை சத்துருபகை சகோதரவெந்துக்களில் கஷ்டம் ராசகோபம், அன்னியதேசபிரயாணம் உண்டாம்.

மாரகாதிபதியோடுகூடினால் அவமிருத்துப்பயமுண்டாம், உருத்திரஜெபஞ்செய்யவும் சாதுக்களுக்கு அன்னங்கொடுக்கவும் விதி.

## புதன் மகாதெசையில் இராகு புக்தி

## வரு௨, மீ ௬, நாள் ௧அ.

பித்தரோகம் தலைநோய் அகாலபோசனம் கிலைபிரிதல் சீசராற்பயம் கலகம் மனத்தாபம பந்துசனக்கிலேசம் குடும்பசுகக்குறைவு.

ராகு கேந்திர திரிகோணத்தில் சுபக்கிரகங்களோடு கூடினால் சுகம நல்லபோசனம வீட்டிலே சந்தோஷமான சம்பவங்கள் நடத்தல் உண்டாம.

ராகு புதனோடுகூடி ௬—௮—௧௨—ல் இருந்தால்பிறஇடங்களுக்குப் போதல் போசனநிதி சயனம இவைகளாற் சுபக்குறைவு மனவியாகுலம் உண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினாலும் மாரகத்தானங்களிலிருந்தாலும் பிணி சத்துருக்களினாலே தீங்குண்டாதல் மிருத்துப்பீடை உண்டாகும். தேவிக்குப்பூஜை ஜெபம ராகுவுக்குச் சர்ப்பதானஞ்செய்க.

## புதன்மகாதெசையில் வியாழபுக்தி

## ௵ ௨, ௴ ௩, நாள் ௬.

மனச்சந்தோஷம் பெரியோர்சினேகம கிலேசமில்லாமை குடும்பசுகம புத்திரானுகூலம பந்துக்கூட்டம் பொருள்விருத்தி.

குரு கேந்திரதிரிகோண லாபத்தானங்களி லிருந்தால் பொருள்வரவு பெரியோருதவி களத்திரபலன் பசுமுதலிய ஜீவலாபம தரும சாத்திரவுணர்ச்சி தேவவழிபாடு குருவுபதேசம தியானபூஜை முதலிய சற்கருமங்கள் செய்தல் இட்டசித்தி இவையுண்டாம்.

குரு ௬—௮—௧௨—ல் நீசமாய் செவ்வாய் முதலிய பாபரோடு கூடியிருந்தால் கலகம நிஷ்டூரமானவார்த்தை பிணி சோரபயம பிதிர்மாதுரு சுகக்குறைவு பொருள்நட்டமுண்டாம்.

குரு தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்தானத்தில் சுபபெலனோடிருந்தால் மனவுற்சாகம பந்துசனங்களால் மரியாதை வீட்டிற் சுப்சோபனமான சம்பவங்கள் நடத்தல் தருமச்செய்கையு முண்டாம்.

குரு தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் பாபவர்க்கமடைந்தால் குடும்பவிரோதம தேகசுகவீனம பொருள்நட்டம் அவமிருத்துப் பீடையுண்டாகும.

மாரகாதிபதிகளுடன்கூடினால் தேகபீடைகாட்டும். பூமித்தானம் பசுத்தானம் சிவபெருமானுக்கு ருத்திரஜெபஞ்செய்ய விதி.

## புதன்மகாதெசையிற சனிபுக்தி

௵ ௨, மாதம் ௮, நாள் ௬௰.

மனக்கிலேசம் வாதபிணி சத்துருவிருத்தி பந்துசனட்பீடை சனி கேந்திரத்திரிகோணங்களில் உச்ச ஆட்சிப்பெற்று லக்கினாதிபதியுடன் கூடினால் சிவப்பிரதிஷ்டைசெய்தல். கெங்காஸ்நானஞ் சேதுஸ்நானமுதலிய தீர்த்தபலன் தன்னுடையவீட்டிலே விவாகாதி சுபசோபனங்கள் நடத்தல் லட்சுமி கடாட்சமுண்டாம்.

சனி ௮—௧௨—ல் நீசசத்துருத்தானத்திலிருந்தால் தேகபிணி காரியதாமதம் இடம்பிரிதலுண்டாம்.

சனி தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணங்களில் சுபக்கிரகங்களோடுகூடியிருந்தால் பெரியோர்கள்சினேகம் ராசப்பிரீதி வாகன பலன் உண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் பாபக்கிரகங்களோடு கூடினால் களத்திர புத்திரபிணி மனத்துயர் புத்தி ஒருவழிப்படாமை அன்னியதேச பிரயாணஞ்செய்தல் கால்நடையாக அலைந்து திரிதலுமுண்டாம்.

மாரகாதிபதிகளுடன் கூடினால் தேகபீடையுண்டாம். விஷ்ணுவுக்குச் செபம் சனிக்குப்பிரீதிசெய்யவிதி.

## கேதுமகாதெசை ௵ ௭.

தேகவரட்சி, பித்தரோகம், வாய்வுஅதிகரித்தல், தைரியக்குறைவு, வித்தியாசமானபோசனத்தால் நோய், சூனியம் பிசாசு முதலியவற்றால் பீடை, கொம்புள்ளமிருகங்களாற்பயம்.

கேது கேந்திர திரிகோண லாபத்தானத்திலிருந்தால் பூமிப்பலன், அன்னியதேசசஞ்சாரம், தாரபுத்திராதிகளால் அதிக சிரமமும், தெசைமுற்கூறில் விசேஷஅனுபவங்களும், மத்தியினும் பிற்கூறிலும் அலைச்சலும் சமபலனுமுண்டாம்.

கேது சுபக்கிரகங்களோடுகூடிச் சுபர்திருஷ்டிபெற்று ௯—௰க்குடைய கிரகங்களோடு கூடினால் புண்ணியதீர்த்தபலன், தேவவழிபாடு உண்டாம.

௬—௮—௧௨—ல் பாபிகளுடனேகூடி இருந்தால் வியாச்சியம் ராசத்தண்டனை, இடம்பிரிதல், சுகக்குறைவு, விஷபீடையுமுண்டாம்.

## கேதுமகாதெசையிற் கேது புக்தி
## ௴ ௪, நாள் ௨௭.

தாரபுத்திரசுகக்குறைவு, சகோதரவிரோதம், ராசபயம், மனக்கிலேசம், அகாலபோசனம் இவை.

கேந்திர திரிகோண லாபத்தானத்தில் லக்கினாதிபதியோடு அல்லது பாக்கியகன்மாதிபதிகளுடனாவது கூடினால் தெய்வவழிபாடு, புண்ணியதீர்த்தபலன், குருவின் அனுக்கிரகம், நினைத்தகாரியங்கள் கைகூடிவருதலுமுண்டாம்.

௬—௮—௧௨—ல் பாபிகளோடுகூடினால் அன்னியதேசபிரயாணம், அகாலபோசனம், தாகம், மனக்கிலேசம் உண்டாம.

மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்து தோஷமுண்டாம். தீர்த்தஸ்நானம், பசுத்தானஞ்செய்யவிதி.

## கேது மகாதெசையிற் சுக்கிரபுக்தி

## ௵ க, மாதம் ௨

காரியானுகூலம், புத்திரபலன், களத்திரசுகவீனம், பந்துஜனக் கூட்டம், பொருள்விருத்தி. சுக்கிரன் கேந்திரதிரிகோண லாபஸ்தானத்தில் உச்சம் ஆட்சிப்பெற்றால் புத்திரசுகம், வாகனபலன், வீட்டிற் சுபகாரியங்கள் நடத்தல, பலவிதசிறப்புக்களுமுண்டாம்.

சுக்கிரன் ௬—௧௰—க் குடையவர்களோடு கூடினால் முன் தவறிப்போன பொருள் அனுகூலமடைதல், முன்விட்ட மோற்றி கைகூடுதல், தேகசுகம், வாகனபூஷணாதிகள் பலன், தேவவழிபாடு, குருபதேசம்பெறுதல், கெங்காஸ்நானமுதலிய தீர்த்தபலனுண்டாம்.

சுக்கிரன் ௬—௮—௧௨-ல் நீசமாய் பாபிகளோடு கூடிப் பாபிகளின் சேர்க்கைப்பெற்றால் தன்னைக்குறித்துப் பயமடைதலும், புத்திரபல [illegible] பசுக்குறைவும், இடம்பிரிதல், அவமிருத்துப்பீடை, வாய்வுபத்திரவம் முண்டாம்.

தெசாநாதனுக்குத் திரிகோணகேந்திரத்தில் உச்சம்பெற்றால் எடுத்தகாரியங்கள் அனுகூலமடைதல, தேகசௌக்கியம், வீட்டிலே சுபசோபனங்கள் நடத்தலுமுண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் பாபியுடனே கூடினால், பொருட்சேதம், [illegible], காரணமில்லாமலொரு கலகமுண்டாதல், அபகீர்த்தி, பந்துஜனவிரோதம் உண்டாம்.

மாரகாதிபர்களோடுகூடினால் அவமிருத்துப்பீடையுண்டாகும். தேவிக்கு வழிபாடு செபம் முதலியவை செய்யவிதி.

## கேதுமகாதெசையிற் சூரியபுக்தி

### மாதம் ௬, நாள் ௬.

மனக்கிலேசம், சிரநோய், அன்னியதேச சஞ்சாரம், சத்துருபீடை, உஷ்ணரோகம் இவையுண்டாம்.

சூரியன் கேந்திரதிரிகோண லாபஸ்தானத்தில் நட்பாட்சி பெற்றிருந்தால் பொருள்வரவு, சற்கருமங்கள் செய்தல், குடும்பசுகம், நினைத்தகாரியங் கைகூடுதல் இவை உண்டாம்.

௬—௮—௧௨—ல் பாபிகளோடிகூடினால் பித்தரோகம், பொருள் நட்டம், தாரக்கிலேசம், மனத்தாபம், பிதுர்மாதுருபீடை, வியாச்சியம், புக்திக்கடைசியில் அற்பசுகமுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்தானத்திலிருந்தால் செல்வவிருத்தி, நினைத்தகாரியங்கள் கைகூடுதல் களத்திர சுகம், தலைநோய் இவையுண்டாம்.

மாரகாதிபதிகளுடன்கூடினால் அவமிருத்துதோஷமுண்டாம். சூரியநமஸ்காரம் செபம் செய்யவிதி.

## கேதுமகாதெசையிற் சந்திரபுக்தி

### மாதம் ௭.

வியாச்சியம், பெண்சனங்களாற் கலகம், புத்திரபிணி, சத்துருபீடை, பலவித துன்பமுண்டாகி நிவிர்த்தியாதலுமாம்.

கேந்திர திரிகோண லாபத்தானங்களில் ஆட்சி [illegible] சுபருடன்கூடிச் சுபர்திருஷ்டிபெற்றாலும், விவாக [illegible], உற்சாகம், திரவியவிருத்தி, வாகனம் ஆபரணாதிகள் சேருதல்,

தாமதமாகிக் காரியசித்தியடைதல், புண்ணியதீர்த்தஸ்நானபலன், தருமச்செய்கை, பசுமுதலியவையுண்டாம்.

சு—அ—கஉ—ல் பாபிகளோடு கூடினாலும் நீசமடைந்தாலும், காரியநஷ்டம், மனத்தாபம் தேகபிணி உண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணத்திற் சுபக்கிரகங்களோடு கூடினால் க்ல்வித்தேர்ச்சி, நூதனமான பொருள்சேருதல், தானியபலன், பூமிப்பலன், பந்துசனங்களால் மரியாதையுமுண்டாம்.

தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ல் அட்டமாதிபதியோடுகூடினால் பொருள்நட்டம், கோபம், மனவியாகுலம், தவறிவிழுதல் முதலியகாரணத்தால் நோயுண்டாதல், கொடுத்தல் வாங்கல் முதலியவைகளால் கலகம், வியாச்சியம் வருதலும் வர்மத்தானங்களிலே நோயுமுண்டாம்.

மாரகாதிபதியோடுகூடினால் அபமிருத்துப்பீடையுண்டாம், வஸ்திரதானம், சந்திரனுக்குச்செபஞ்செய்யவிதி-

## கேதுமகாதெசையில் செவ்வாய் புக்தி

## மாதம் ச, நாள் உஎ.

பொருட்சேதம், பயம், காரியதாமதம், பெண்கலகம், சத்துருபகை, வியாச்சியம், தேகத்தில் உஷ்ணரோகம்.

கேந்திர திரிகோண லாபத்தானத்திலிருந்தால் பொருள்விருத்தி பூமிலாபம், வீட்டுச்சிறப்பு; பசுமுதலியசீவலாபம், தேகசுக முண்டாம்.

அ—கஉ—ம் இடங்களில் நீசமாகிப் பாபிகளோடுகூடினால் பொருட்சேதம், சத்துருபயம், பசாசுபயம், இடம்பிரிதல் உண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணத்தில் ஆட்சியுச்சமிருந்தால் இராசஅனுகூலம், பொருள்வரவு, புத்திரபலன் உண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் பாபலர்க்கமடைந்தால் களத்திர சுகவீனம், விஷபயம், சுரம், அன்னியதேசவாசம், சோரபயம், மரணபயம், புக்திமுடிவிலே அற்பசுகபலனுண்டாம்.

மாரகாதிபதிகளோடுகூடினால் அபமிருத்துப்பீடையுண்டாம். எருது தானஞ்செய்யவிதி.

## கேது மகாதெசையில் இராகு புக்தி

௵ ௧, நாள் ௧௮.

தேகபிணி, களத்திரபீடை, தனதுமேலதிகாரிக்குக் கஷ்டம், கீர்த்திக்குறைவு, வீட்டிற்கலகம், ஆசாரவீனம், சத்துருபீடை.

ராகு உச்சவீடு மிருத்துவீடுகளில் தன லாபத்தானங்களிலிருந்தால் நீசப்பிரபுக்கள்மூலமாய்ப் பொருள்விருத்தியும், பூமிபலன் தானியவிருத்தி. புக்திமுற்கூறில மனவிசனத்தைக் கொடுத்துப் பிற்கூறு அதிகசுகபலனுண்டாம்.

ராகு ௬—௮—௧௨—ல் பாபர்களோடுகூடியின்றால் சலக் கடிப்பு, சலரோகம், சீதளசுரம், தேகதைரியக்குறைவு, பசுமுதலிய சீவலாபம் உண்டாம்.

மாரகாதிபதிகளோடு கூடினால் அபமிருத்துதோஷமுண்டாம். சர்ப்பதானம் தேவிக்கு செபஞ்செய்யவிதி.

## கேதுமகாதெசையில் வியாழபுக்தி

௵ ௧௧, நாள் ௬.

பொருள்வரவு, ராசசினேகம், களத்திரசுகம், புத்திரபலனுண்டாம். கேந்திர திரிகோண லாபத்தானத்தில் ஆட்சிப்பெற்று சுக

திபதியுடன் கூடினால் திரவியவிருத்தி, குதிரைமுதலிய வாகனபல ன், கீர்த்தி, புண்ணியதீர்த்தபலன், தேவவழிபாடு புதிதாகப் பிரபுக் களோடு சிநேகஞ்செய்தல். சத்துருசெயமுமுண்டாம்.

லக்கினத்துக்கு சு—அ—கஉ—ல் தெசாநாதனுடன் கூடினால் தெசாநாதனுக்கு சு—அ—கஉ—ல் இருந்தால் தேகசுகக்குறைவு இட ம்பிரிதல் சத்துருவிருத்தி பூமிப்பலன் வாகனலாபம் மனவியாகுலம் கலகம் உண்டாம்.

மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்துதோஷமுமுண்டாம் சுவர்ணதானஞ்செய்யவிதி.

## கேதுமகாதெசையிற் சனிபுக்தி
## வருஷ க, மாதம் க, நாள் கூ.

பொருட்சேதம் மனப்பயம் தேகத்தில் விஷநீர் சொறி சிரங்கு முதலியவையுண்டாதல் களத்திரபீடையுண்டாம்.

கேந்திர திரிகோணங்களில் பூரணபெலனோடிருந்தால் ராசப்பிரீ தி, பிரபுக்கள்சிநேகம், வாகனபலனுண்டாம்.

அ—கஉ—ல் இருந்தால் மனஸ்தாபம், ஆலசியம், காரியக்கேடு, பிதிர்மாதுருபீடை உண்டாம்.

மாரகாதிபதிகளுடன் டினால் அவமிருத்துதோஷமுண்டாம். மஹிஷதானஞ்செய்யவிதி.

## கேதுமகாதெசையில் புதன் புக்தி
## மீ கக, நாள் உள;

இடம்பிரிதல், புத்திரபீடை, கல்விவிருத்தியுண்டாம்.

கேந்திர திரிகோண லாபஸ்தானத்தில் ஆட்சிவீட்டிலிருந்தால் அதிகசுகம், புண்ணியசரித்திரங்களை அறிதல், பூமி கல்வி திரவியம் தானியம் இவைவிருத்தியாதலும் புத்திரானுகூலமும், லட்சுமி கடாட்சமும் சுபகாரியங்கள் நடத்தலும் பந்துக்கள் சுகமுமுண்டாம்.

௬—௮—௧௨—ல் சனியினுடைய வீட்டில் அல்லது சனியுடனே கூடினும், சனியின்பார்வைபெற்றாலும் சத்துருபீடை வியாச்சியம் கலகம் அன்னிய இடங்களில் வாசஞ்செய்தல் வாகனபீடை பொருள்நட்டம் உண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண லாபத்தானத்தில் சுபக்கிரகங்களோடுகூடினால் வாகனபலன் விசேஷமான ஆபரணலாபம் தேகசுகம் காரியசித்தியுண்டாம்.

தெசாநாதனுக்கு ௬—௮—௧௨—ல் இருந்தால், மனப்பீடை களத்திர புத்திரபிணி கீர்த்திக்குறைவு உண்டாம்.

மாரகாதிபதிகளுடன் சம்பந்தமானால் அவமிருத்து தோஷமுண்டாம். சர்ப்பதானம் பிராமணபோசனஞ்செய்யவிதி

---

## சுக்கிரன்மகாதெசை ௵ ௨௰.

இதன்பலன்:—புத்திரவிருத்தி கல்வித்தேர்ச்சி ராசசன் மானம் பாக்கியஸ்திரீசேருதல் ஆபரணபலன் வாகனபலன் புத்திரவிருத்தி அதிககீர்த்தி ஆசாரக்கிரமம் சுக்கிரன் உச்சம்பெற்று நீசாம்சமடைந்தால நற்கருமங்களைச் செய்தலும் பொருளினாற்றரித்திரமும் பீடையுமுண்டாம்.

சுக்கிரன் நீசம்பெற்று உச்சமடைந்தால் பலவித அனுகூலமும் வியாபாரபலிதமுமுண்டாம்.

ஆட்சி மூலத்திரிகோணங்களில் சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் ராஜயோகமும், இராஜாங்க ஐசுவரியம், நவரத்தினம் முதலியவை உண்டாம். லக்கினாதிபனுக்கு ௨—ம் ௧௧—ம் இடங்களில் அல்லது சந்திரனுக்கு ௨—௧௧—ல் இருந்தால் திரவியபலன், கன்னிகாதானஞ்செய்தல் தடாகம் முதலியவையுண்டாக்குதல் தேவாலயங்களிலே நித்திய நைமித்தியம் முதலியவை செய்வித்தல், இனிமையான கீதம் முதலியவைகளைக் கேட்டல், முதலியசுபபலனுமுண்டாம்.

## சுக்கிரன்மகாதெசையிற் சுக்கிரபுக்தி

### வரு ௩, மீ ௪

லாபஸ்தானத்தில் உச்சம்பெற்றாலும், அல்லது ஆட்சிவீட்டிற் கேந்திர திரிகோணம்பெற்றாலும், ரத்தினாபரணபலன், குதிரை முதலிய வாகனங்கள் சேர்க்கை, நாளுக்குநாட்செலவவிருத்தி, இஷ்டமான சுகபோசனம், ராஜசபையில், ஆடல பாடலிலேவிருப்பமும், வீட்டிலே லட்சுமிகரமும், பந்துக்கூட்டமும், விவாகாதி மங்கலப்பேறு புத்திரபலனுமுண்டாம்.

௬—௮—௧௨—ல் நீசமானாலும். சத்துருவீட்டில் இருந்தாலும் வெகுதுக்கங்களினாலே மனக்கிலேசம், களத்திரபீடை பொருட்சேதம் இடம்பிரிதல் முதலியவை உண்டாம்.

௧—௧௦—க்கு அதிபதியானாலும் லக்கினத்தில் அல்லது நாலாமிடத்திலிருந்தாலும் ராஜயோகத்தோடு அதிகாரமும் களத்திர புத்திரவலனும் ஐசுவரியவிருத்தியும் மேலும் தைரியமும் தன்சொல்லுமேலாயிருக்கும்விதமும் உண்டாம்.

மாரகாதிபனோடு கூடினால் தேகபிணி பீடையுண்டாம் உருத்திரசெபம் சிவார்ச்சனை முதலியவைசெய்யவிதி.

சுக்கிரன்மகாதெசையிற் சூரியபுக்தி வூ க.

தேகத்திற் றுன்பம், பொருட்சேதம், சத்துருபகை, வியாச்சியம், களத்திர புத்ருரபீடை, பந்துவிரோதம், சுரம், காரியதாமதம், உண்டாம்.

மேடம் அல்லது சிங்கத்திற் சுபக்கிரகங்களோடுகூடியிருந்தால் தனது அதிகாரியினுற் சுகபலனடைதலும், பொருட்பலனும், விவாகாதி சுபபலன்களும், புத்திரானுகூலமுமுண்டாம்.

கேந்திர திரிகோணத்திலிருந்தாற் பிதிர்பந்துக்கிலேசம், மனப்பயம், பொருட்குறைவு, ராசப்பிரீதி, நற்கிர்த்தி இவையுண்டாம்.

அ-கஉ-ல் நீசனுய் பாபக்கிரகங்களோடு கூடினுல் தேகபிணி, அலேச்சல், வியாச்சியம், தனக்குந் தனதுகாரியம் பார்ப்பவர்களுக்கும் கலகமுண்டாதலும், பயமுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணத்திற் பாபியாயிருந்தாற் பொருள்நட்டம், சனங்களோடுவிரோதம், போசனக்குறைவு, துற்கருமங்களைச் செய்தல், புக்திக்கடையில் அற்பபலனுமுண்டாம்.

தெசாநாதனுக்கு சு-அ-கஉ-ல் இருந்தால் தேக உஷ்ணம், சுரம், சோரபயம், சத்துருபீடையுண்டாம்.

மாரகாதிபதியோடு கூடினுல் அவமிருத்துபீடையுண்டாம். சூரியப்பிரீதி செய்யவிதி.

சுக்கிரன் மகாதெசையிற் சந்திரபுக்தி வூ க, மீ அ.

குடும்பசுகம், காரியஅனுகூலம், நூதனக்கிருகவாசம், தேகதைரியக்குறைவு உண்டாம்.

கேந்திர திரிகோண லாபஸ்தானத்திற் பூர்வபட்சச் சந்திரனுய் லக்கினுதிபதி அல்லது சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால், விசேஷ திரவியலாபம், சனுதிகாரம், தூரதேச திரவியலாபம், தேவாலயதரிசனை, புண்ணியதீர்த்தஸ்நானம், குருபதேசம், புண்ணியசரி

ந்திரங்களை அறிதல், இனிமையான கீதம்முதலியவைகளில் விருப்பு, ஆசாரக்கிரமம், இஷ்டமான சுகபோசனம், கீர்த்தி, பிரபுசிநேகம், வாகனபலன், இரத்தினாபரணலாபம், சற்கருமங்கள் செய்தல், இவை உண்டாம்.

நீசமாய் லக்கினத்துக்காயினும், தெசாநாதனுக்காயினும் ௬-௮-௧௨-ல் இருந்தால் விஷநீரினால் ரோகம், தேகஆயாசம், தனக்கு அனுகூலமானவர்களோடு விரோதம், பலவிடங்களிலுந் திரிதல், பந்துமித்திரர்களுட்கேடு இவையுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோணத்திலிருந்தாற் கீர்த்தி, வாகனம், ஆபரணாதிகள், பூமி, ராசப்பிரீதி, சனாதிகாரம், தருமச்செய்கை இவையுண்டாம். புக்திமுடிவிற் பீடையுண்டாம்.

மாரகாதிபதிகளுடன் கூடினால் சலரோகம் முதலியபீடை காட்டும். சந்திரனுக்குப்பிரீதி தேவிக்கு வழிபாடுசெய்ய விதி.

சுக்கிரன்மகாதெசையிற் செவ்வாய்புக்தி ௵ ௧, ௴ ௨.

பூமிப்பலன், காரிய அனுகூலம், சத்துருபகை, தேகசுபவீனம் இவையுண்டாம்.

கேந்திரதிரிகோண லாபஸ்தானத்தில் ஆட்சிவீட்டிலிருந்தாலும், லக்கினாதிபதி ௯-ம் ௧௦-ம் இடத்துக்கதிபதி இவர்களோடு கூடியிருந்தாலும், சுபக்கிரகங்களுடைய பார்வை பெற்றாலும், இலட்சுமிகடாட்சம், புத்திரபலன், இராசப்பிரீதி, பொருள்வரவு, தானிருக்குமிடத்திலே விசேஷ சுபசம்பவங்களுண்டாதலும், காரிய அனுகூலமுமுண்டாம்.

தெசாநாதனுக்கு ௬-௮-௧௨-ல் இருந்தால், தான்செய்யுங்காரியங்கள் அனுகூலமாகாமற்போதலும், அபகீர்த்தியும், சிரரோகம் சுரம் இடம்மாறுதல் இவை முதலிய பீடைகளுமுண்டாம்.

தெசாநாதனுக்குக் கேந்திர திரிகோண ஆட்சி லாபஸ்தானங்களிலிருந்தால் தனதானியலாபம், பசுமுதலிய சீவலாபம், பூமிப்ப

லன், தருமச்செய்கை, வீட்டிலே மங்கலகரமான காரியங்கள் நடத்தலும் உண்டாம்.

மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்துப்பீடையுண்டாம். எருதுதானஞ்செய்யவிதி.

சுக்கிரன்மகாதெசையில் இராகு புக்தி வரு ரு.

தருமச்செய்கை, தேவபக்தி, சிரசில்நோய், புத்திரர் முதலிய சுயபந்துசனங்களாற் கலகங்களும், விஷமருந்து முதலியவைகளாற் பயமும், அலைச்சலுமுண்டாம்.

கேந்திரதிரிகோண லாபஸ்தானங்களில் உச்சம்பெற்றுச் சுபக்கிரகங்களுடனே கூடியிருப்பினும், லக்கினாதிபதி, கூ-ம் க0-மிடத்துக்கதிபதிகளோடுகூடியிருந்தாலும் இராசயோகம், ஐசுவரிய விருத்தி, சத்துருசெயம், தேகசுகம், காரியசித்தி, புண்ணியதீர்த்தஸ்நானபலன் உண்டாம்.

அ-கஉ-ம் இடங்களிலே பாபிகளோடுகூடியிருந்தாற் பிதிர்மாதுருகர்மம், அல்லது பிதிர்மாதுருவிரோதம், பந்துவிரோதம், பிரயாணம், காரியநட்டமுண்டாம்.

இப்புக்திக்குள்வருங் கார்த்திகைமாதங்களிலே நோய்வரினும், புதியகாரியங்களிலே பிரவேசிப்பினும், அதிககஷ்டமுண்டாம்

மாரகாதிபதிகளோடு கூடினால் அவமிருத்துதோஷமுண்டாம். ராகுவுக்குச்சாந்தி, சர்ப்பதானஞ்செய்யவிதி.

சுக்கிரன்மகாதெசையில் வியாழபுக்தி வருஉ; மீ அ.

திரவியலாபம், புத்திரஅனுகூலம், தானியவிருத்தி, தேவபக்தி, பிராமணவிசுவாசம், சற்கிரியைகள் செய்தல், சிலகாரியங்கள் முயற்சிசெய்யாதிருக்க அனுகூலப்படுதலுமுண்டாம்.

ஆட்சிவீட்டிற் கேந்திரதிரிகோணம்பெற்றுத் தெசாநாதனுக்கும் அவ்விதமாக இருந்தாலும், மித்துருராசியில் சு-எ க0-ம் இராசியதிபர்களோடு கூடினாலும், பந்துசனங்களுக்கு அதிகாரியாகவிருத்தல், இராசயோகம், பொருள்வரவு, தானியவிருத்தி, பிரபுசன்மானம், மித்திரர்கூட்டம், மூன் அனுகூலமாகமற்போனவை அனுகூலப்படுதல் களத்திரசுபம் பிரயாணப்போனவிடங்களிலேகீர்த்தி காரிய அனுகூலம் வாகனலாபம் உண்டாம்.

சு-அ-கஉ-ம் இடங்களிலே சத்துருநீசராசியிலே அஸ்தமனம் முதலிய தோஷத்தோடு இருப்பின், தேகசுபக்குறைவு தைரியக்குறைவு, பாண்டுரோகம், சிலேற்பனரோகம், களத்திரத்துக்கு அசீரணரோகம் உண்டாதல், புத்திர பௌத்திராதிகளுக்குப் பீடையும், நன்முயற்சிக்குறைவும், பூமிநட்டமுமுண்டாம்.

மாரகாதிபதிகளுடன் கூடினால் அவமிருத்துப்பீடையுண்டாம். சிவார்ச்சனை வியாழனுக்குச் செபம் சுவர்ணதானஞ்செய்யவிதி.

சுக்கிரன்மகாதெசையிற் சனிபுக்தி ௵ ந, மீ உ.

அந்நியதேசசஞ்சாரம், வியாபாராதிகளாற் பொருள்விருத்தி, வாதரோகம், போசனக்குறைவு, களத்திரபிணி இவை.

கேந்திர திரிகோண லாப ஆட்சி இடங்களிலிருந்தாற் சத்துருசயம், ஐசுவரியவிருத்தி, லட்சுமீகரம் உண்டாம்.

அ-கஉ-ம் இடங்களில் நீசசத்துருத்தானம்பெற்றால், நோய், மனவியாகுலம், பொருள்நட்டம், பகையுண்டாம். புக்திக்கடைசியிற் சுகமுண்டாம். சுக்கிரதெசையிற் சனிபுக்தி விசேஷபலனுக்குரியதல்ல.

மாரகாதிபதிகளோடுகூடினால் அவமிருத்துப்பீடையுண்டாம். ருத்திரசெபம், சனிக்குச்செபம் பிரீதிசெய்யவிதி.

சுக்கிரன்மகாதெசையிற் புதன்புக்தி வரு௨, மீ௰.

பொருள்விருத்தி, கல்வித்தேர்ச்சி, வாக்குவல்லபம், களத்திர புத்திரசுகம், இஷ்டர்களால் இலாபம், நினைத்தகாரியம் அனுகூலமாதல்.

கேந்திரதிரிகோண லாபஸ்தானத்தில் உச்சம் ஆட்சிப்பெற்று இருந்தால் வாசனலாபம், திரவியவிருத்தி, இராசப்பிரீதி, புத்திரானுகூலம், புத்திரர்முதலிய சுயபந்துக்களுள் விவாகாதி சுபகருமங் நடத்தல், ஆபரணபலன், சிறப்பானபொருள்சேருதல், இனிமையானகீதமுதலியவைகளில் விருப்பு, தருமசாஸ்திர புராணாதி சரித்திரங்களை அறிதலுமுண்டாம்.

௬-௮-௧௨-ல் பாபிகளோடுகூடினால் பசு வாகனாதி சீவநட்டமும் மனவியாகுலமும், அந்நியக் கிருகவாசமும் அகால போசனமுங் கடன்படுதலுமுண்டாம்.

மாரகாதிபதிகளோடு கூடினால் மிருத்துப்பிணி, துக்கம், வாய்வுவாதம் உண்டாம். விஷ்ணுசெபம், புதனைக்குறித்துத் திலம் அறுகு ஓமஞ்செய்யவிதி.

சுக்கிரன்மகாதெசையிற் கேதுபுக்தி வரு ௧, மீ ௨.

விஷபயம், மிருகபயம், குடும்பஅனுபவசுபக்குறைவு, பந்துசனநாசம், சத்துருபீடை, காரியநட்டமுண்டாம்.

கேந்திரதிரிகோண லாபஸ்தானத்திற் சுபக்கிரகங்களோடுகூடியிருந்தால் தேவாலயதரிசனை, புண்ணியதீர்த்தஸ்நானபலன், இஷ்டமான போசனம், மித்துருவுக்குரோகம், ராசகாரியத்தில் மனத்துக்கமுண்டாம்.

௮-௧௨-ம் இடங்களிற் பாபிகளோடுகூடிப் பாபிகளின் திருஷ்டி பெற்றால் தன்னைக்குறித்துப் பயமடைதல், சோரபயம், தூரதேசபிரயாணம், புத்திரபீடை, பந்துநட்டம், அந்நியக்கிருவாசம்.

மாரகாதிபதிகளோடுகூடினால் அவமிருத்துப் பீடை யுண்டாம். சமுத்திரஸ்நானம், கம்பளந்தானஞ்செய்யவிதி.

மகாதெசாபுக்திபலன் முற்றிற்று.

## மகாதெசாபுக்தியும், அவற்றின் மொத்தசங்கியையும்.

| தெசை. | புக்தி | ௵ | ௴ | நாள். | மொத்தம். ௵ | ௴ | நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| கார்த்திகை, உத்திரம், உத்திராடம். சூரியன் ௵ ௬. | சூரியன் | ௦ | ௩ | ௧௮ | ௦ | ௩ | ௧௮ |
| | சந்திரன் | ௦ | ௬ | ௦ | ௦ | ௯ | ௧௮ |
| | செவ்வாய் | ௦ | ௪ | ௬ | ௧ | ௧ | ௨௪ |
| | ராகு | ௦ | ௧௦ | ௨௪ | ௨ | ௦ | ௧௮ |
| | வியாழன் | ௦ | ௯ | ௧௮ | ௨ | ௧௦ | ௬ |
| | சனி | ௦ | ௧௧ | ௧௨ | ௩ | ௯ | ௧௮ |
| | புதன் | ௦ | ௧௦ | ௬ | ௪ | ௭ | ௨௪ |
| | கேது | ௦ | ௪ | ௬ | ௫ | ௦ | ௦ |
| | சுக்கிரன் | ௧ | ௦ | ௦ | ௬ | ௦ | ௦ |
| ரோகிணி, அத்தம், திருவோணம். சந்திரன் ௵ ௧௦. | சந்திரன் | ௦ | ௧௦ | ௦ | | | |
| | செவ்வாய் | ௦ | ௭ | ௦ | ௧ | ௫ | ௦ |
| | ராகு | ௧ | ௬ | ௦ | ௨ | ௧௧ | ௦ |
| | வியாழன் | ௧ | ௪ | ௦ | ௪ | ௩ | ௦ |
| | சனி | ௧ | ௭ | ௦ | ௫ | ௧௦ | ௦ |
| | புதன் | ௧ | ௫ | ௦ | ௭ | ௩ | ௦ |
| | கேது | ௦ | ௭ | ௦ | ௭ | ௧௦ | ௦ |
| | சுக்கிரன் | ௧ | ௮ | ௦ | ௯ | ௬ | ௦ |
| | சூரியன் | | ௬ | ௦ | ௧௦ | ௦ | ௦ |
| மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம். செவ்வாய் ௵ ௭. | செவ்வாய் | ௦ | ௪ | ௨௭ | | | |
| | ராகு | ௧ | ௦ | ௧௮ | ௧ | ௫ | ௧௫ |
| | வியாழன் | ௦ | ௧௧ | ௬ | ௨ | ௪ | ௨௧ |
| | சனி | ௧ | ௧ | ௯ | ௩ | ௬ | ௦ |
| | புதன் | ௦ | ௧௧ | ௨௭ | ௪ | ௫ | ௨௭ |
| | கேது | ௦ | ௪ | ௨௭ | ௪ | ௧௦ | ௨௪ |
| | சுக்கிரன் | ௧ | ௨ | ௦ | ௬ | ௦ | ௨௪ |
| | சூரியன் | ௦ | ௪ | ௬ | ௬ | ௫ | ௦ |
| | சந்திரன் | ௦ | ௭ | ௦ | ௭ | ௦ | ௦ |

மொத்தமாவன: சென்ற ஒவ்வொரு புக்திகளையுங்கூட்டி எழுதப்பட்டவை.. } சூரிய தெசையில் சூரியபுக்தி ௦, ௩, ௧௮, சந்திரபுக்தி ௦, ௬, ௦ செவ்வாய் ௦, ௪, ௬.

சூரியதெசையிற் செவ்வாய்புக்திக்குநேரேபார்க்க ௧, ௧, ௨௪.

## மகாதெசாபுகதியும், அவற்றின் மொத்தசங்கியையும்.

| தெசை | புக்தி | ௵ | ௴ | நாள் | மொத்தம் ௵ | ௴ | நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| திருவாதிரை, சுவாதி, சதயம். இராகு ௵ ௧௮. | ராகு | ௨ | ௮ | ௧௨ | | | |
| | வியாழன் | ௨ | ௪ | ௨௪ | ௫ | ௧ | ௬ |
| | சனி | ௨ | ௧0 | ௬ | ௭ | ௧௧ | ௧௨ |
| | புதன் | ௨ | ௬ | ௧௮ | ௧0 | ௬ | 0 |
| | கேது | ௧ | 0 | ௧௮ | ௧௧ | ௬ | ௧௮ |
| | சுக்கிரன் | ௩ | 0 | 0 | ௧௪ | ௬ | ௧௮ |
| | சூரியன் | 0 | ௧0 | ௨௪ | ௧௫ | ௫ | ௧௨ |
| | சந்திரன் | ௧ | ௬ | 0 | ௧௬ | ௧௧ | ௧௨ |
| | செவ்வாய் | ௧ | 0 | ௧௮ | ௧௮ | 0 | 0 |
| புனர்பூசம், விசாகம், பூரட்டாதி. வியாழன் ௵ ௧௬. | வியாழன் | ௨ | ௧ | ௧௮ | | | |
| | சனி | ௨ | ௬ | ௧௨ | ௪ | ௮ | 0 |
| | புதன் | ௨ | ௩ | ௬ | ௬ | ௧௧ | ௬ |
| | கேது | 0 | ௧௧ | ௬ | ௭ | ௧0 | ௧௨ |
| | சுக்கிரன் | ௨ | ௮ | 0 | ௧0 | ௬ | ௧௨ |
| | சூரியன் | 0 | ௯ | ௧௮ | ௧௧ | ௪ | 0 |
| | சந்திரன் | ௧ | ௪ | 0 | ௧௨ | ௮ | 0 |
| | செவ்வாய் | 0 | ௧௧ | ௬ | ௧௩ | ௭ | ௬ |
| | ராகு | ௨ | ௪ | ௨௪ | ௧௬ | 0 | 0 |
| பூசம், அனுஷம், உத்தரட்டாதி. சனி ௵ ௧௯. | சனி | ௩ | 0 | ௩ | | | |
| | புதன் | ௨ | ௮ | ௯ | ௫ | ௮ | ௧௨ |
| | கேது | ௧ | ௧ | ௯ | ௬ | ௯ | ௨௧ |
| | சுக்கிரன் | ௩ | ௨ | 0 | ௯ | ௧௧ | ௨௧ |
| | சூரியன் | 0 | ௧௧ | ௧௨ | ௧0 | ௧௧ | ௩ |
| | சந்திரன் | ௧ | ௭ | 0 | ௧௨ | ௬ | ௩ |
| | செவ்வாய் | ௧ | ௧ | ௯ | ௧௩ | ௭ | ௧௨ |
| | ராகு | ௨ | ௧0 | ௬ | ௧௬ | ௫ | ௧௮ |
| | வியாழன் | ௨ | ௬ | ௧௨ | ௧௯ | 0 | 0 |

## மகாதெசாபுக்தியும், அவற்றின் மொத்தசங்கியையும்.

| தெசை | புக்தி | வரு | மா | நாள் | மொத்தம் வரு | மா | நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| ஆயிலியம், கேட்டை, ரேவதி. புதன் வரு கஎ. | புதன் | உ | ச | உஎ | | | |
| | கேது | 0 | கக | உஎ | ரு | ச | உச |
| | சுக்கிரன் | உ | க0 | 0 | சா | உ | உச |
| | சூரியன் | 0 | க0 | சா | எ | க | 0 |
| | சந்திரன் | க | ரு | 0 | அ | சா | 0 |
| | செவ்வாய் | 0 | கக | உஎ | கூ | ரு | உஎ |
| | ராகு | உ | சா | கஅ | கஉ | 0 | கரு |
| | வியாழன் | உ | ங | சா | கச | ங | உக |
| | சனி | உ | அ | கூ | கஎ | 0 | 0 |
| அசுவினி, மகம், மூலம். கேது வரு எ. | கேது | 0 | ச | உஎ | | | |
| | சுக்கிரன் | க | உ | 0 | க | சா | உஎ |
| | சூரியன் | 0 | ச | சா | க | கக | ங |
| | சந்திரன் | 0 | எ | 0 | உ | சா | ங |
| | செவ்வாய் | 0 | ச | உஎ | உ | கக | 0 |
| | ராகு | க | 0 | கஅ | ங | கக | கஅ |
| | வியாழன் | 0 | கக | சா | ச | க0 | உச |
| | சனி | க | க | கூ | சா | 0 | ங |
| | புதன் | 0 | கக | உஎ | எ | 0 | 0 |
| பரணி, பூரம், பூராடம். சுக்கிரன் வரு உ0. | சுக்கிரன் | ங | ச | 0 | | | |
| | சூரியன் | க | 0 | 0 | ச | ச | 0 |
| | சந்திரன் | க | அ | 0 | சா | 0 | 0 |
| | செவ்வாய் | க | உ | 0 | எ | உ | 0 |
| | ராகு | ங | 0 | 0 | க0 | உ | 0 |
| | வியாழன் | உ | அ | 0 | கஉ | க0 | 0 |
| | சனி | ங | உ | 0 | கசா | 0 | 0 |
| | புதன் | உ | க | 0 | கஅ | க0 | 0 |
| | கேது | க | உ | 0 | உ0 | 0 | 0 |

தெசாபுக்திகளின் பலனை அறியும்போது யோகமான கிரகங்களின் பலனையும் அறியவேண்டுவதால் அவற்றிற் பிரதானமானவைமாத்திரம் எழுதப்படுகின்றன.

### யோகபலன்.

### நீசபங்க ராஜயோகம்.

ஒருராசியிலே ஒருகிரகம் நீசமானால் அந்தராசிக்கதிபதியாவது அந்தராசிக்கு உச்சக்கிரகமாவது சந்திரனுடனேயாயினும் சந்திரனுக்கு ச-ம் எ-ம் க0-ம் இடங்களிலாயினும் இருந்தால் நீசம் பங்கமாகிவிடும். இதுவன்றி, ஒருஜாதகத்திலே பலகிரகங்கள் நீசமாகியிருக்க அவற்றில் ஒருகிரகம் மாத்திரம் நீசம் பங்கமானால் மற்ற (நீசமான)கிரகங்களெல்லாம் நீசபங்கத்தை அடைதலேயன்றி அந்தச் சாதகனுக்கு ராஜயோகமுமுண்டாகும்.

### கேசரியோகம்.

சந்திரன்நின்றராசியிலாயினும், அதற்கு ச-எ-க0-ம் இடங்களிலாயினும் வியாழனிருந்தால் கேசரியோகமென்று சொல்லப்படும். வித்தியாவிவேகமும், தருமத்தில் விருப்பமுமுண்டாம்.

கேந்திரஸ்தானங்கள் சந்திரனுக்கும் வியாழனுக்கும் சுபக்ஷேத்திரங்களாகவிருந்தால் விசேஷித்தயோகபலனுண்டாகும். இந்தயோகபெலத்தினாலே மற்றைய கிரகங்கள் குரூரஸ்தானங்களிலிருந்துசெய்யுந் தோஷங்கள் நிவாரணமாகும். சந்திரனும் வியாழனும் ஒருராசியிலே ஒருநட்சத்திரபாதத்திலே ஒருபாகையிலே இருப்பது குருசந்திரயோகமாகும். சந்திரனுஞ் செவ்வாயுங்கூடி எ - ம் இடத்திலிருப்பது சசிமங்களயோகமாகும்.

இதன்பலன்: அதிககீர்த்தியும், ராஜயோகமுமுண்டாம்.

### பர்வதயோகம். *

உதயலக்கினமும் அதற்கு ச-எ-க0-ம் இடங்களுமாகிய நாலு கேந்திரங்களிலும் தவறுமற் கிரகங்கள் நின்றால் பர்வதயோகமென்று சொல்லப்படும். ஸ்ரீமானுக்கும், ராசயோகத்துக்குரிய விசேஷ பலன்களை மேன்மேலுஞ் செய்யும்.

---

* கேந்திரங்களிற் சுபக்கிரகங்கள்நின்றால் கமல யோகமென்று சொல்வதுமுண்டு.

